# அத்தியாயம் 8

## நிதியியல்துறை அபிவிருத்திகளும் முறைமை உறுதித்தன்மையும்

### 8.1 பொதுநோக்கு

**உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக் கடியிலிருந்து எழும் உள்நாட்டுப் பொருளாதார மெதுவடைவு மற்றும் சவால்மிக்க வியாபாரச் சூழலுக்கு ஈடுகொடுத்து நிதியியல் முறைமையானது 2009இல் தொடர்ந்து தாக்குபிடித்தது.** நிதியியல்துறை நிறுவனங்கள் உலக நிதியியல் நெருக்கடியின் கசிந்த விளைவுகள் மற்றும் அவற்றின் வியாபாரத் தொழிற்பாடுகளில் பாதகமான விளைவைக் கொண்டிருந்த உள்நாட்டுப் பொருளாதாரத்திலான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் அழுத்தங்களை எதிர்கொண்டன. அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல், உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டில் ஏற்பட்ட மெதுவடைவால் கொடுகடனுக்கான கேள்வி குறைவடைந்தமை வெளிநாட்டு வர்த்தகத்திலான குறைப்பு என்பன உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் அழுத்தத்திற்குப் பங்களித்தன. கொடுகடனுக்கான கேள்வியைக் குறைத்தது. மேலும், செலிங்கோ குழுமத்திலுள்ள வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடன் இணைந்த பல நிறுவனங்களால் எதிர்கொள்ளப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மை இழக்கப்பட்டமை திரவத்தன்மைத் தடைகள் நிதி மற்றும் குத்தகைக்குவிடல் துறைகளிலான ஏனைய கம்பனிகளில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

**எனினும், இலங்கை மத்திய வங்கியாலும் அரசாலும் எடுக்கப்பட்ட விரைவானதும் தீர்க்கமானதுமான வழிமுறைகள் நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பகத்தன்மைக்கும் தொடர்ச்சியான உறுதிப்பாட்டிற்கும் பங்களிப்புச் செய்தன.** செலிங்கோ குழுமத்திலுள்ள முறையியல் ரீதியான முக்கிய வர்த்தக வங்கியான செலான் வங்கியால் எதிர்கொள்ளப்பட்ட திரவத்தன்மைப் பிரச்சனைகளை இலங்கை மத்திய வங்கி வெற்றிகரமாக தீர்த்தது. செலான் வங்கி புதிய பங்குகளை வழங்கியதன் மூலம் மீள் மூலதனமாக்கப்பட்டதுடன் இது வங்கியின் மூலதனத்தையும் திரவத்தன்மை மட்டத்தையும் பலப்படுத்தியது. இது தற்போது வழமையான வியாபாரத் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. இடர்பாட்டிலுள்ள சில பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளால் எதிர்கொள்ளப்பட்ட திரவத்தன்மை இடர்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டும் இத் துறையில் பொதுமக்கள் நம்பகத்தன்மையை மீள ஏற்படுத்துவதற்கும், இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் இடர்பாட்டிலுள்ள பதிவு செய்த நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கும் உதவுவதற்கு பல வழிகளில் தலையிட்டன. இடர்பாட்டிலுள்ள நிறுவனங்களின் மீட்சிச் செயற்பாட்டை அறிவுறுத்துவதற்கும், வழிநடத்துவதற்கும் நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கி நிதி அமைச்சுடன் இணைந்து திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் இடர்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு உதவுவதற்கான சிறப்புத் தூண்டல் பொதியை அறிமுகப்படுத்தியது. இத்துடன், இலங்கை மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் அது போல் குத்தகை வாடகைப் பெறுகைகளின் பிணையமாக்கலுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கும் வங்கிக் கடன் வசதிகளுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இவ் வழிமுறைகள் வியாபாரத்

தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வசதிப்படுத்துவதிலும் இத் துறைக்கு உறுதிப்பாட்டைக் கொண்டு வருவதிலும் வெற்றி கொண்டன.

**பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சி மற்றும் சந்தையின் நம்பகத்தன்மையிலான மேம்பாடுகளால் உதவப்பட்டு நிதியியற்துறைச் செயற்பாடுகளும் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் விரிவடைந்தன.** உலகப் பொருளாதார வீழ்ச்சி, பன்னாட்டு வர்த்தகத்திலான வீழ்ச்சி மற்றும் வங்கிகள் இடர்நேர்வை ஏற்கத் தயங்கியமை காரணமாக சுருக்கமடைந்த வங்கிக் கடன் வழங்கல் உயர்வடையத் தொடங்கியது. பலமான மூலதன நிலைமைகள் மற்றும் முன்னேற்றமடைந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் இம் மீட்சிச் செயற்பாட்டை வசதிப்படுத்தின. திரவத்தன்மைத் தடைகளை அனுபவித்த நிதிக் கம்பனிகள் இலங்கை மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களின் கீழ் புதிய திட்டங்கள் மற்றும் சொத்து மீட்சி உபாயங்கள் காரணமாக புதுப்பிக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணியின் அதிகரித்த உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கூடிய உறுதிப்பாட்டை உருவாக்கியது. இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலையின் தளர்த்தல், உயர் முதலீட்டாளர் பங்கேற்பு மற்றும் சந்தைத் திரவத் தன்மையிலான மேம்பாடுகள் என்பவற்றுக்குப் பதிலிறுத்தும் வகையில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் கீழ் நோக்கி நகர்ந்திருக்கையில் பங்குச் சந்தை 2009இல் அதன் சிறந்த செயலாற்றத்தை அடைந்து மீளெழுச்சியடைந்தது.

**நிதியியல் துறையின் ஆற்றல் மற்றும் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கு நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி பல முன்னெடுப்புக்களை 2009இல் மேற்கொண்டது.** நிதி வியாபாரம் மற்றும் வைப்பை ஏற்றுக்கொள்ளலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் தற்போதைய சட்டத்திலுள்ள அநேகமான குறைபாடுகளை முன்மொழியப்பட்ட நிதி வியாபாரச் சட்டம் தீர்த்து வைக்கும். வங்கிகளின் இணைப்பு மற்றும் கொள்வனவுகளையும், ஒழுங்கமைப்புக் கட்டமைப்பையும் வசதிப்படுத்துவதில் வங்கித்தொழில் குழுமங்களின் திரண்ட மேற்பார்வையை இயலச் செய்யும் விதத்தில் தற்போதைய வங்கித்தொழில் சட்டமும் திருத்தியமைக்கப்படும். இத்துடன், காப்புறுதிக் கைத்தொழிலின் மேற்பார்வையை விரிவாக்குவதற்கும் பலப்படுத்துவதற்கும் காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிக்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. பாதுகாப்பானதும் ஆற்றல்மிக்க விதத்தில் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்கும் சொத்தைப் பிணையாகக் கொண்ட பிணையங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் புதிய சட்டமொன்று வரையப்பட்டுள்ளது. நுண்பாக நிதி நிறுவனங்களின் பங்கை பலப்படுத்தி, மீள ஒழுங்குபடுத்துவதற்கும் அவை பொருளாதாரத்தில் சிறப்பாகச் செயலாற்றுவதை இயலச் செய்வதற்கும் நுண்பாக நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் சட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**நிதியியல் துறையின் செயலாற்றம் மற்றும் ஆற்றல் தொடர்பான பல எண்ணிக்கையான கரிசனைகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்ந்தும் ஒழுங்குமுறைப்படுத்துநர்களினதும் ஆர்வலர்களினதும் கவனத்தை வேண்டி நிற்கிறது.** பரந்த வட்டி இலாபங்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு உயர் இடையீட்டுச் செலவு மந்தமான தனியார்துறைக் கொடுகடன், அதிகரித்துச் செல்லும் செயலாற்றக் கடன்கள் மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் கடன் இழப்பு ஏற்பாடுகள் போன்ற வங்கித்தொழில் துறை தொடர்பான பிரச்சனைகள் போதுமானளவில் தீர்க்கப்பட வேண்டும். பொதுமக்கள் நம்பகத்தன்மையை மீள ஏற்படுத்தல் மற்றும் நிதிக் கம்பனிகளிலான வியாபாரத்தினைப் பன்முகப்படுத்தல், சொத்துக்களின் மீட்சி மற்றும் பிரச்சனைக்குரிய நிதிக் கம்பனிகளின் வைப்பு மீள்கொள்வனவுத் திட்டத்தின் பயனுறுதிமிக்க நடைமுறைப்படுத்தல் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் தொடர்பாக தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சனைகளாகும். கம்பனிகளின் புதிய பட்டியலிடலை அதிகரிப்பதன் மூலமும் கூடியளவிலான பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கலை ஊக்கப்படுத்துவதன் மூலமும் பங்குச் சந்தை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மேலும், தனியார் படுகடன் பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கும், நிதியியல் பெறுதிகளின் சந்தைகளின் அபிவிருத்தியை ஊக்கப்படுத்துவதற்கும் பொதுமக்களின் நிதியியல் அறிவை அதிகரிப்பதற்கும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 8.2 நிதியியல் முறைமை உறுதிப்பாடு

**2009இன் ஆரம்பத்தில் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியிருந்த பன்னாட்டு நிதியியல் முறைமையானது பரவலாக அரச தலையீட்டுக் கொள்கைகள் காரணமாக முன்னேற்றமடைந்த மற்றும் வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களிலுள்ள வங்கி மற்றும் நிதிச் சந்தைகளின் துரித வளர்ச்சியுடன் படிப்படியாக உறுதியடைந்தது.** உலகளாவிய நிதியியல் முறைமையானது துணை முதன்மை ஈட்டுடன் தொடர்பான பிணையங்களிற்கு முகம் கொடுத்ததன் அடிப்படை காரணமாக ஐரோப்பாவிலும் மற்றும் அமெரிக்காவிலுமிருந்த பல பாரிய நிதி நிறுவனங்களின் தோல்வியை அல்லது தோல்விக்கு கிட்டடிய நிலையைத் தொடர்ந்து 2008இன் பிற்பகுதியிலும் 2009இன் ஆரம்பத்திலும் முறைமை செயலிழந்து போகும் ஆபத்தை எதிர் நோக்கியது. மூலதனப் பாய்ச்சல் உலக வர்த்தகம் மற்றும் பொருளாதார செயற்பாடு என்பன நிதி நிறுவனங்களின் மீதான கடுமையான தாக்கங்களினாலும் கடன் சந்தைகளினுடைய உறை நிலைகளினாலும் சுருக்கமடைந்தன. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் மீதானபொருளாதார நெருக்கடிகள் வர்தத மற்றும் மூலதன பாய்ச்சல் பாதுகாப்புகளினூடாக பரவி, அபிவிருத்தி அடைந்த வரும் நாடுகளிற்கு ஒரு இடர்பாடான சூழ்நிலையை உருவாக்கின. உலகெங்குமுள்ள கொள்கை வகுப்பாளர்கள் முன்னெப்பொழுதுமில்லாத வழிமுறைகளுடன் இந் நெருக்கடியை எதிர்கொண்டார்கள். நிதிக் கொள்கைகள் இலகுவாக்கப்பட்டன; நிதிச் சந்தைகள் திரவத்தன்மை புகுத்தப்பட்டு வலுவூட்டப்பட்டன; வங்கிகளுடைய மீள் மூலதனமிடல் மற்றும் மீட்புத் திட்டங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன; நிதி ஊக்குவிப்பு பொதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த அசாதாரண கொள்கை நடவடிக்கைகள் உலகளாவிய பொருளாதார முறைமையின் உறுதியடைதலுக்கு உதவின. நிதியிடல் சந்தைகளில் நிலைமைகள் இலகுபடுத்தப்பட்டு வங்கிகள் மேலும் மூலதனமிடப்பட்டவையாக மாறியதுடன் பொருளாதார செயற்பாடானது 2009இன் பிற்பகுதியில் மீள்ச்சியடைய

ஆரம்பித்தது. முதலீட்டாளர்களின் அபாயத்தை எதிர்கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டதன் காரணமாக நிதிச் சந்தைகளின் எழுச்சி இயலுவதாயிற்று. உலகளாவிய மூலதன சந்தைகள் விரைவாக மீட்சியடைந்த வேளையில் மூலதனப்பாய்ச்சல்கள் குறிப்பாக வளர்ச்சியடையும் பட்டியலிடப்பட்ட முதலீட்டுப்பாய்ச்சல்கள் மீள ஆரம்பித்தன.

**உள்ளூர் நிதி நிறுவனங்களானவை ஒரு பலமான ஒழுக்கவாற்றல் கட்டமைப்பு மற்றும் மூலதனக் கணக்கு கட்டுப்பாடுகளினதும் காரணமாக உலகளாவிய நிதி நெருக்கடியிலிருந்து பெருமளவிற்கு பாதுகாக்கப்பட்டன.** உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவின் இரண்டாம் சுற்று தாக்கங்களின் விளைவாக ஏற்பட்ட உள்நாட்டு பொருளாதாரத்தின் மெதுவான வளர்ச்சியும் உலக வர்த்தகத்தில் காணப்பட்ட மந்தமும் வங்கிகளிற்கும் மற்றைய நிதி நிறுவனங்களிற்கும் சவாலானதாக அமைந்திருந்தது. இறுக்கமான சந்தை நிலைமைகளின் காரணமாக கொடுகடன் இடர்நேர்வு அதிகரித்த போதும் ஒட்டுமொத்தமாக நிதியியல் நிறுவனங்கள் தொடர்ந்தும் இலாபமானதாகவும் நியாயமான முறையில் மூலதன மயப்படுத்தப்பட்டதாகவும் காணப்பட்டன. முதலீட்டாளர் நம்பிக்கை இழக்கப்பட்டமை மற்றும் சிலிங்கோ குழுமத்துடன் தொடர்புபட்ட நிதி மற்றும் குத்தகை கம்பனிகளினால் எதிர் நோக்கப்பட்ட திரவத் தடைகளின் காரணமாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகளின் செயலாற்றம் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

**ஆண்டின் போது சொத்து விலைகளின் உயர்ச்சியுடன் நிதிச் சந்தைகள் மேலும் திரவத்தன்மையானவையாகவும் உறுதியானவையாகவும் ஆகின.** நாணயக் கொள்கைகளின் தளர்வும் அதிகரித்த திரவத்தன்மையும் வட்டி வீதத்தில் ஒரு படிப்படியான வீழ்ச்சியை ஏற்படுத்தியதோடு பணச் சந்தையில் தளம்பலைக் குறைத்தன. ஆண்டின் ஆரம்பப் பகுதியில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி சந்தை மீதான அழுத்தங்கள் மே மாதத்தில் போரின் முடிவைத் தொடர்ந்தும் முதலீட்டாளர் நம்பிக்கை மீட்சியுடன் யூலை மாத பன்னாட்டு நாணயத்திலிருந்தான துணைநிலை ஒழுங்குமுறை விதிக்கான அனுமதியை தொடர்ந்து நிலைமைகள் மேலும் மேம்பாடடைந்து வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலை, குறிப்பாக அரச பிணையங்களின் சந்தைக்குள் ஏற்படுத்தியது. அதன் பிளைவாக

| அட்டவணை 8.1 | வங்கியியல்த்துறையின் தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் ஆற்றல்தன்மை குறிகாட்டிகள் | |
|---|---|---|
| | | சதவீதம் |
| குறிகாட்டிகள் | 2008(அ) | 2009(ஆ) |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனம் | 14.5 | 14.9 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 12.5 | 12.7 |
| மூலதன நிதியங்களிற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாகக் கடன்கள் | 18.5 | 25.5 |
| மொத்தக்கடன்களில் செயற்படாக் கடன்கள் | 6.3 | 8.0 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 1.9 | 2.1 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பிந்திய) | 13.4 | 14.6 |
| வட்டிமிகை | 4.4 | 4.5 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியில்லாச் செலவு | 22.3 | 22.5 |
| நியதித் திரவ விகிதம் | 31.3 | 39.2 |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் | 28.4 | 35.2 |
| ஒதுக்க காப்பு விகிதம் (மொத்தம்) | 60.9 | 50.1 |
| மூலதன நிதியங்களுக்கான வெளிநாட்டுச் செலவானியின் தேறிய திறந்த நிலை (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மட்டும்) | 2.1 | -1.5 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அவ்வருடத்தின் போது இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக ஒப்பீட்டளவில் உறுதியாகவிருந்தது. திறைசேரி முறி மற்றும் பிணையச் சந்தையில் (வெளிநாட்டு) வெளிநாட்டு பங்கேற்பு கூடியதாலும் கொள்கை வட்டி வீதங்கள் குறைந்தமையாலும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச பிணையங்களுக்கான சந்தையின் வட்டி வீதங்கள் விரைவாக குறைவடைந்தன. போரின் முடிவுடன் பங்குச் சந்தை மேல் நோக்கி உயர்வடைந்ததுடன் கொழும்பு பங்கு பரிவர்த்தனை (கொ.ப.ப.) பன்னாட்டு பங்குச் சந்தைகளில் சிறந்த செயலாற்றம் கொண்டதாகவும் மாறியது. பங்குச் சந்தையில் உத்வேகம் மிக்க திறமைக்காட்டலுக்கு பணவீக்கத்தின் குறைவு, குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை என்பன பங்களிப்புச் செய்தன.

**வங்கித்தொழில் துறையானது பன்னாட்டு மற்றும் உள்நாட்டு சவால்கள் திறந்த சூழலிலும் தனது உறுதித்தன்மையையும் இலாபமீட்டலையும் பேணியது.** வங்கித்துறை அதிகரிக்கப்பட்ட மூலதன மற்றும் திரவத்தன்மை மட்டங்களுடன் தனது செயலாற்றத்தையும் இலாபமீட்டலையும் பேணிக் காத்தது. பன்னாட்டு பொருளாதார வீழ்ச்சி, குறைவடைந்த பன்னாட்டு வர்த்தகம் மற்றும் கடன் வழங்கும் வங்கிகளின் எச்சரிக்கையான அணுகுமுறை என்பவற்றால் குறைந்த வங்கிக்கடன் உயர்வடைய ஆரம்பித்ததுள்ளது. பொருளாதார நடவடிக்கையின் வீழ்ச்சி வங்கித்தொழில் துறை நிறுவனங்களின் சொத்து தரம் மோசமடைய வழிவகுத்தது. எவ்வாறாயினும், பலமான மூலதனத் தன்மை மற்றும் அதிகரிக்கப்பட்ட மேற்பார்வை, ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை கட்டமைப்பு என்பனவற்றால் உதவியளிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையியல் அங்கீகரிப்பு என்பவற்றால் பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தை ஈர்ப்பதற்கு வங்கித்துறை பலமான நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

**செலான் வங்கியும் சிலிங்கோ சேமிப்பு வங்கியும் சிலிங்கோ குழுமத்துடன் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அவை எதிர்நோக்கிய திரவத்தன்மை தடைகளை இலங்கை மத்திய வங்கி தலையிட்டு வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.** 2008 திசெம்பரில் புதிய பணிப்பாளர் சபை நிர்வாகிகளுடன் இலங்கை வங்கியின் முகாமைத்துவ கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. 2009ஆம் ஆண்டில் மேலும் இலங்கை மத்திய வங்கியானது அரச உடமை நிதி நிறுவனங்களை செலான் வங்கியின் மூலதன பங்களிப்புக்கு உதவுமாறு அழைப்பு விடுத்ததுடன் வங்கியின் மீள் மூலதனத்திற்கும் நடவடிக்கை எடுத்தது. இதன்படி செலான் வங்கியின் 10 சதவீத பங்கை (ரூ.455 மில்லியன்) இலங்கை வங்கியும் 15 சதவீத பங்கை (ரூ.670 மில்லியன்) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் கையேற்றுக் கொண்டன. மேலும், புதிய பங்குகளை பொதுமக்களிற்கு வழங்குவதன் மூலம் ஏறக்குறை ரூ.1.9 பில்லியன் திரட்டப்பட்டது. பங்கு வழங்கல் முதலீட்டாளர்களால் துரிதமாக பூர்த்தியாக்கப்பட்டமையும் அதிகமாக இணக்கம் தெரிவிக்கப்பட்டமையும் வங்கியில் முதலீட்டாளர் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக் காட்டியது. மேச்சன்ற் பாங்க் ஒவ் சிறிலங்கா குழுமங்களுக்கிடையேயான இடர்நேர்வு வெளிப்படுத்துகை காரணமாக இடர்நிலைக்குட்பட்டிருந்த சிலிங்கோ குழும கம்பனியான சிலிங்கோ சேமிப்பு வங்கி (ஒரு உரிமம்பெற்ற விசேட வங்கி) யின் 78 சதவீதம் ஆன ரூ.100 மில்லியன் ஆரம்ப மூலதன பங்களிப்புடன் கொள்வனவு செய்து உரிமையாக்கியது. வழமையான வியாபார நடவடிக்கைகள் தற்பொழுது தொடர்கிறது.

## சிறப்புக்குறிப்பு 13

## வங்கித் தொழில் நெருக்கடியினை மத்திய வங்கி தடுத்தது - செலான் வங்கியின் மீட்பு

**செலான் வங்கி பிஎல்சி இற்கு நேர்ந்த நிதியியல் இடர்ப்பாடுகள்**

சொத்துக்களின் அடிப்படையில் 7 சதவீதச் சந்தைப் பங்கினை கொண்டுள்ள செலான் வங்கி நாட்டினுடைய ஐந்தாவது மிகப் பெரிய வர்த்தக வங்கியாகக் காணப்படுவதுடன் செலிங்கோ குழுமத்தின் ஓர் பகுதியாகவும் காணப்பட்டது. 2008இன் இறுதியில், செலிங்கோ குழுமத்தின் கம்பனிகளில் ஒன்றான கோல்டன் கீ கிரடிட் காட் கம்பனி முறிவடைந்ததன் மூலம் ஏற்பட்ட எதிர்பாராத விளைவு காரணமாக செலான் வங்கியில் ஏற்பட்ட நெருக்கடி அதிகரித்த வைப்பு மீள் பெறுகைக்கு வழிவகுத்தது.

வைப்புக்களின் விரைந்த மீளப் பெறுகைகள் வங்கியினுடைய திரவத்தன்மையில் ஓர் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியது. முறைமைசார் ரீதியில் ஓர் முக்கியத்துவமுடைய வங்கியாக காணப்படுவதால் கொடுப்பனவுகளை வங்கி கௌரவிக்கத் தவறுவது ஒட்டுமொத்தமாக நிதியியல் முறைமையில் அதிர்வலை விளைவுகளை ஏற்படுத்தி ஓர் முறைமைசார் நெருக்கடிகளுக்கும் காரணமாக இருந்தது.

**தீர்மானக் கட்டமைப்பினுடைய செயற்றிறனான நடைமுறைப்படுத்தல்**

நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்கு காணப்பட்ட சாத்தியமான ஆபத்தினைத் தடுக்கும் பொருட்டு மேற்படி நிலைமைக்கு பதிலளிக்கும் வகையில், ஏற்கனவே காணப்பட்ட தீர்மானக் கட்டமைப்பு மத்தியவங்கியால் செயற்படுத்தப்பட்டது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் பிரிவு 30(9) இன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- வங்கியினுடைய பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டது.
- வங்கியினுடைய வியாபாரத்தை தொடரும் பொருட்டு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது.
- எந்த இடையூறுமின்றி வங்கியின் அனைத்து ஊழியர்களும் தமது சேவையில் தொடர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- எந்த இடையூறுமின்றி வங்கித் தொழில் செயற்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டும் பொது மக்களின் நம்பிக்கையினை மீளக் கட்டியெழுப்பும் பொருட்டும் செலான் வங்கிக்கு முகாமைத்துவ உதவியினை வழங்குமாறு இலங்கை வங்கியை வேண்டிக் கொண்டது.
- தமது வழமையான நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை வங்கியுடன் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அறிவித்ததுடன் வைப்பாளர்களின் பாதுகாப்பினையும் நிதியியல் குழாமின் உறுதித் தன்மையினையும் உறுதிப்படுத்தியது.
- குழுமைமாக பாதுகாக்கப்பட்ட அடிப்படையிலும் கூட, தேவையான நிதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வங்கி காணப்பட்டதால், மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு ரீதியில் ரூபாவின் அடிப்படையிலமைந்த திரவத்தன்மையினை வழங்கியது.
- வெளிநாட்டு நாணயத்தில் காணப்பட்ட திரவத்தன்மை பற்றாக்குறைக்கு ஒழுங்குகளை செய்யும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி மற்றும் ஏனைய தரப்பிலிருந்து பிணைகளுக்கெதிராக கடன்பெறுவதற்குரிய ஒழுங்குகளையும் பரிமாற்றல்களையும் மேற்கொண்டது.
- வங்கியினுடைய மூலதனம், முகாமைத்துவம் மற்றும் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்தும் அதேநேரத்தில் ரூபா 3.0 பில்லியன் பெறுமதியான மூலதனத்தைத் திரட்டுமாறு செலான் வங்கியினை கேட்டுக் கொண்டது.

**செலான் வங்கி அதனுடைய வழமையான நடவடிக்கைகளை தொடங்கியது**

இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி மற்றும் செலான் வங்கிப் பணிப்பாளர் சபைச் செயற்பாடுகள், வங்கியின் மீதான செயற்பாடுகள் வங்கியின் மீதான வாடிக்கையாளரது நம்பிக்கையை மீளக் கட்டியமைக்க அவசியமான தந்துரோபாயங்களை கட்டமைக்கும் வகையில் அமைந்துள்ளது. வங்கியின் மூலதனப் போதுமாந் தன்மை மற்றும் திரவத்தன்மை மட்டங்கள் குறிப்பிடத்தக்களவில் விருத்தியடைந்துள்ளது. பங்குதாரர்களால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையினுடைய வழிகாட்டலின் கீழ் தற்போது தனது வழமையான நடவடிக்கைகளில் வங்கி ஈடுபட்டு வருகின்றது. வட மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து பாகங்களிலும் தமது வங்கிக் கருமபீடத்தினை ஆரம்பிப்பதற்குதவும் அதன் கிளை கட்டமைப்பை விரிவாக்க ஆரம்பித்துள்ளது.

வங்கி வெற்றிகரமாக நெருக்கடி நிலைமையினை சமாளித்துள்ளதுடன் எதிர்காலத்துக்கான நிலையான வியாபாரத்தை கட்டியெழுப்பும் பொருட்டு ஓர் ஆரோக்கிய நிதியியல் நிலைமையினை பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை வங்கியின் நெருக்கடியை தடுத்து நிறுத்தியதுடன் ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளில் காணப்பட்டதைப் போலன்றி பொதுமக்களின் நிதிகள் அல்லது தேசியமயமாக்கலை பலப்படுத்தாமல் அனைத்து ஆர்வலர்களினதும் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு வங்கியை இயலச் செய்தது.

**முதலீட்டாளர் நம்பிக்கையை இழந்தமை மற்றும் திரவத்தன்மைத் தடைகள் என்பன காரணமாக அழுத்தத்தை அனுபவித்த பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனித்துறை மற்றும் பதிவு செய்யப்பட்ட விசேட குத்தகைக் கம்பனித்துறை 2009இன் 2ஆம் காலாண்டுப் பகுதியில் மீண்டும் பழைய நிலைக்கு திரும்ப ஆரம்பித்துள்ளது.** 2008இன் இறுதிக் காலப்பகுதியில் அதிகாரமளிக்கப்படாத நிதி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒழுங்கமைக்கப்படாத சிலிங்கோ குழும கம்பனியான கோல்ட் அன்ட் கீ கிறடிற் காரட் கம்பனியால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை காரணமாக ஒழுங்கமைக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களது நம்பிக்கை பாதிக்கப்பட்டு வாடிக்கையாளர்களின் பதட்டத்தினால் திடீர் மீளப்பெறுதல்

**அட்டவணை 8.2** **பதிவுசெய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் ஆற்றல்தன்மை குறிக்காட்டிகள்**

சதவீதம்

| குறிகாட்டிகள் | 2008(அ) | 2009(ஆ) |
|---|---|---|
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனம் | 14.0 | 9.8 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான அடுக்கு 1 மூலதனம் | 12.3 | 8.6 |
| மூலதன நிதியங்களிற்கான ஒதுக்கங்கள் தவிர்ந்த செயற்படாக் கடன்கள் | 15.9 | 32.3 |
| மொத்தக் கடன்களில் செயற்படாக் கடன்கள் | 6.7 | 10.2 |
| சொத்து மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 1.8 | -0.8 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பிந்திய) | 8.4 | -13.6 |
| மொத்த சொத்துக்களுக்கான தேறிய வட்டி வருமானம் | 2.4 | 3.3 |
| மொத்த வருமானத்துக்கான தேறிய வட்டி வருமானம் | 20.6 | 17.4 |
| மொத்த வருமானத்துக்கான வட்டியல்லாச் செலவு | 28.0 | 29.9 |
| ஒதுக்க காப்பு விகிதம் (மொத்தம்) | 46.5 | 47.8 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஏற்பட்டு கடுமையான திரவத்தன்மை பிரச்சனையை அனுபவித்தன. இத் துறையானது திரவத்தன்மை இடர்நேர்வு, கடன் இடர்நேர்வு மற்றும் உயர் வட்டிவீத இடர்நேர்வு காரணமாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனித் துறையின் நிதியியல் குறிகாட்டிகள் பலவீனமடைந்த போதிலும் 2009இன் இறுதிக் காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கை விரிவடைந்ததுடன் இத்துறை பழைய நிலைக்கு திரும்ப ஆரம்பித்துள்ளது.

**இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் இணைந்து தலையிட்டதுடன், இடர்நிலையிலுள்ள கம்பனிகளிற்கு உதவுவதற்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி மற்றும் பதிவு செய்யப்பட்ட விசேட குத்தகைக் கம்பனித் துறையின் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புவதற்கும் பல எண்ணிக்கையான வழிமுறைகளை அறிமுகப்படுத்தின.** இவை, அழுத்த நிலையிலுள்ள சிலிங்கோ குழும நிதிக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு முகாமைத்துவ முகவரை நியமித்தல் மற்றும் மீண்டும் பழைய நிலையை பெறக்கூடிய நடவடிக்கைக்கு அறிவுரை வழங்குவதற்கு நிபுணத்துவமுள்ள குழுவை நியமித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. அதன் விளைவாக மேச்சன்ற் பாங்க் ஒவ் சிறிலங்காவானது நான்கு சிலிங்கோ குழும பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளான த பினான்ஸ் கம்பனி, ஏசியன் பினான்ஸ் லிமிடெட், சிலிங்கோ இன்வெஸ்ட்மன்ற் அன்ட் றியலிற்றி லிமிடெட் மற்றும் த பினான்ஸ் அன்ட் கறண்ரி லிமிட்டெட் என்பவற்றிற்கான முகாமைத்துவ முகவராக நியமிக்கப்பட்டது. இந்த பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் வாடிக்கையாளர் மீள்கொடுப்பனவு நிகழ்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் அதேபோன்று அவர்களின் வியாபாரத் தொழிற்பாடு மீளத் தொடங்கும் திட்டங்களை தயாரிக்கும் செய்முறையிலோ இருக்கின்றன. இதற்கமைய பினான்ஸ் கம்பனியும் ஏசியன் பினான்ஸ் லிமிடெட்டும் புதிய வைப்புக்களைத் திரட்டுவதிலும் புதிய வியாபாரங்களை ஆரம்பிப்பதனையும் தொடங்கிவிட்டன.

**குறைவான பொருளாதார வளர்ச்சியின் பயனாக மொத்த காப்புறுதி தவணைப்பண வருமானத்தில் சிறிதளவு குறைவு இருந்தபோதிலும் காப்புறுதி கம்பனிகளின் மொத்த இலாபகரத்தன்மை மற்றும் ஆற்றல் என்பன பேணப்பட்டன.** காப்புறுதிக் கம்பனிகளின் உழைப்பானது அரச பிணையங்கள் மற்றும் பங்கு மூலதனங்களிடமிருந்தான குறிப்பிடத்தக்க முதலீட்டு வருமான அதிகரிப்பால் அழியாது காப்பாற்றப்பட்டது. இதன் விளைவாக, 2009இல் காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களின் மொத்த இலாபம் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தது. பொதுக் காப்புறுதி வர்த்தகத்தின் பாரிய வகையான மோட்டார் காப்புறுதியின் காப்புறுதி தவணைப் பண வருமானம் குறைவடைந்திருந்த போதிலும் காப்புறுதி இலாபமும் அதிகரித்திருந்தது. நிதியியல் சந்தையின் முக்கிய குறிகாட்டியான கடன் தீராற்றல் அளவு பொது மற்றும் நீண்டகால காப்புறுதி வர்த்தகத்துக்காக பேணப்பட்டது.

**ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய இரண்டு நீண்டகால நிதியங்களும் தமது முதலீட்டு பெறுமானங்களை பல்வேறு இலாபங்களையும் பல்வேறு முதிர்வுக் காலங்களையும் கொண்ட பிணைகளில் பரவலாக்கியிருந்ததன் விளைவாக வட்டி விகிதாசார குறைப்பு இடர்போக்கிலான தமது அபாயங்களை போதியளவு கட்டுப்படுத்தக் கூடியளவாயிருந்தன.** ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றினுடைய 90 சதவீதத்திற்கு மேற்பட்ட முதலீடு சொத்துப்பட்டியல் அபாயமற்ற அரச பிணைகளில் மேற்கொண்டிருந்த படியால் அவற்றினுடைய கடன் இடர்நேர்வு மிகச் சிறியதாக இருந்தது. இந் நிதியங்கள் நிலையான வருமானப் பிணையங்களில் உயர் செறிவு முதலீடுகளாக இருந்தமையால் வட்டிவீத இடர்நேர்வுக்கு விரைவாக உள்ளாகின. எவ்வாறாயினும் குறைந்து செல்லும் வட்டி வீத சூழலில் இந் நிதியங்களின் முதலீட்டு பரிமாணங்கள் மீள் முதலீட்டு இடர்நேர்விற்கு உட்பட்டிருந்த அதேவேளை 2009இல் பாரிய இலாபங்களை பதிவு செய்த பிணைகளில் ஓரளவுக்கு உயர் முதலீடுகளை செய்தமையால் இவ் இடர்நேர்வு குறைக்கப்பட்டது. மீள் நிதிஇடல் வடிவத்திலான வெளிப்பாய்ச்சலை பங்களிப்பு வடிவிலான உட்பாய்ச்சல் கூடுதலாக பதிலீடு செய்தமையால் திரவத்தன்மை இடர்நேர்வு கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது. அத்துடன் இவ் உட்பாய்ச்சலின் ஒரு பகுதி குறிப்பிடத்தக்க வருமானத்தை சம்பாதிக்கும் அதேவேளையில், இன்னொரு பகுதி திரவத்தன்மை தேவையை நிறைவு செய்வதற்காக மீள்கொள்வனவு சந்தையில் முதலிடப்பட்டது.

**முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த தீர்த்தல் மற்றும் கொடுப்பனவு முறைமையானது உயர்ந்தளவு கிடைக்கும் தன்மையுடனும் திரவத்தன்மை அழுத்தங்களின் படியும் தொழிற்படுத்தப்பட்டமையின் மூலம் சுமூகமான கொடுப்பனவு முறைமையினுடைய இயல்பான செயற்பாட்டை வசதிப்படுத்தியது.** இவ் வருடத்தின் போது இலத்திரனியல் பணம் செலுத்துகை கருவிகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு பணம் செலுத்துகை அட்டை பணி வழங்குநர்களுக்காக ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. இந்த ஒழுங்குவிதிகளின் நிபந்தனைகளின்படி இலத்திரனியல் பணம் செலுத்துகை அட்டைகளையும் செல்லிட பணம் செலுத்துகை சேவைகளையும் வழங்குகின்ற நிறுவனங்கள் மத்திய வங்கியுடன் பதிவு செய்வதற்கு வேண்டப்படுகின்றன. மேலும், இப் பணம் செலுத்துகையின் முறைமையினுடைய திறமையும் நெகிழ்வுத்தன்மையும் அதிகரிப்பதற்கும் வாடிக்கையாளர்

**அட்டவணை 8.3 பதிவுசெய்யப்பட்ட விசேட குத்தகைக் கம்பனிகளின் தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் குறிகாட்டிகள்**

| குறிக்காட்டிகள் | 2008 (அ) | சதவீதம் 2009 (ஆ) |
|---|---|---|
| மொத்த சொத்துக்களுக்கான மூலதனநிதியங்கள் | 16.9 | 18.4 |
| மூலதனநிதியங்களுக்கான மொத்த கடன் வாங்கல்கள் | 4.2 | 3.6 |
| மொத்தகடன்களின் செயற்படாக்கடன்கள் | 4.8 | 7.6 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முந்திய) | 2.7 | 3.1 |
| பங்குமூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பிந்திய) | 10.5 | 9.3 |
| மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய வட்டி வருமானம் | 5.0 | 5.5 |
| மொத்த வருமானத்திற்கான தேறிய வட்டி வருமானம் | 24.5 | 27.3 |
| மொத்த வருமானத்திற்கான வட்டியல்லாச் செலவு | 23.8 | 23.8 |
| ஒதுக்கக் காப்பு விகிதம் (மொத்தம்) | 60.2 | 54.9 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வசதியைக் கூட்டுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட மேன்மையான நடவடிக்கைகளாக இடையறாத வர்த்தக ஏற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் சில்லறை கொடுப்பனவு முறைமையை மேலும் நவீனமயப்படுத்தல் என்பன காணப்பட்டன.

**உலகளாவிய பொருளாதாரத்தினுடையதும் பன்னாட்டு வர்த்தகத்தினதும் மீட்சி மற்றும் உள்ர் பணவீக்க நெருக்குதல்களின் கட்டுப்பாடும் அத்துடன் குறைந்த வட்டி வீதங்களும் வர்த்தக துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் என்பதுடன் நிதி நிறுவனங்களுக்கான வாய்ப்புக்களையும் விரிவாக்கும்.** இருப்பினும் நிதி நிறுவனங்களானவை நல்ல ஆளுமையையும் முன்மதியுடைய இடர்நேர்வினை எதிர்கொள்ளும் தன்மையையும் நடைமுறைப்படுத்துவது அவற்றினுடைய நெகிழ்வுத் தன்மையையும் உறுதித்தன்மையையும் மேம்படுத்துவதற்கு அவசியமானவையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியும் மற்றைய நிதிய ஒழுங்குமுறைப்படுத்துபவர்களும் நிதிச் சந்தைகளினதும் நிறுவனங்களினதும் திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கு முன்மதியுடைய கொள்கைகளைப் பலப்படுத்துவதையும் வழிமுறைகள் மற்றும் அதிகரித்த மேற்பார்வையையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

## 8.3 நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்

### இலங்கை மத்திய வங்கி

**2009இன் நடுப்பகுதியளவிலிருந்து நாட்டுக்கான வெளிநாட்டு செலாவணியின் நாட்டிற்கான உட்பாய்ச்சலில் ஏற்பட்ட** மேம்பாட்டுடன் 2009 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையின் உறுதித்தன்மை மேம்பாடடைந்ததுடன் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மிதமிஞ்சிய தளம்பலைத் தடுப்பதற்காகவும் நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காகவும் இலங்கை மத்திய வங்கியினால் இத்தகைய உட்பாய்ச்சல்களின் ஒரு பெரும் பகுதி கொள்வனவு செய்யப்பட்டது. அரச பிணையங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மத்திய வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் ஒரு பகுதியை இளைப்பாற்றுவதனை மத்திய வங்கிக்கு இயலச் செய்ததன் விளைவாக மத்திய வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன.

**இலங்கை மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 2009இல் 37.3 சதவீதத்தினால் ரூ.819.8 பில்லியனுக்கு அதிகரித்தன.** இந்த அதிகரிப்பு அதிகரித்த மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் ஒரு வீழ்ச்சியின் முக்கிய காரணமாக வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன.

**வெளிநாட்டு நாணயத்திற்கான சந்தைக் கேள்வியை ஈடுசெய்வதற்கான ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலும் இடம்பெற்ற வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் 2009இல் இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையின் உள்ளமைப்பினை மாற்றுவதற்குக் குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தது.** அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் ரூபாவில் வெளிநாட்டுப் பெறுமதியிலான மிதமிஞ்சிய செலாவணித் தளம்பலினைத் தடுப்பதற்காக மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு சந்தையில் தலையிட்டமை ஐ.அ.டொலருக்கெதிராக அநேக ஒதுக்கு நாணயங்கள் பெறுமதியில் வீழ்ச்சியடைந்தமை போன்றவற்றின் காரணமாக 2009இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணி விற்பனைகளின் விளைவாகத் தோன்றிய ரூபாத் திரவத்தன்மைக்கான பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கும் ரூபாத் திரவத்தன்மையை உட்பாய்ச்சுவதற்கும் மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. இத்தகைய வழிமுறைகளில் ஒன்றாக முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு காணப்பட்டதுடன் அதனொரு விளைவாக வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன.

**தசாப்த காலமாக நீண்ட போர் மே மாதத்தில் முடிவுக்கு வந்ததையும் யூலையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்குவசதி பெற்றுக் கொள்ளப்பட்டதனையும் தொடர்ந்து 2009 மே மாதத்திலிருந்து நாட்டுக்கான வெளிநாட்டு செலாவணியின் கணிசமான உட்பாய்ச்சல்கள் காணப்பட்ட நிலையில் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு செலாவணியை இலங்கை மத்திய வங்கி உள்ளீர்த்துக் கொண்டது.** ஒகத்தில், சிறப்பு எடுப்பனவு உரிமையின் ஒதுக்குகளின் கிடைப்பனவு நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை மேலும் வலுப்படுத்தியது. ஒத்தோபரில் நாட்டுக்கான பன்னாட்டு முறியின் வழங்கலின் பெறுகைகளை அரசாங்கம் பெற்றுக்கொண்டமையானது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையை மேலும் அதிகரித்தது. இத்தகைய அபிவிருத்திகளைத் தொடர்ந்து உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் 2 பில்லியன் ஐ.அ.டொலர்களை இலங்கை மத்திய வங்கி கொள்வனவு செய்ய முடிந்தது. இதன்படி, 2009இல் இலங்கை மத்திய வங்கியில் வெளிநாட்டுச் சொத்துக்கள் கணிசமானளவு அதிகரித்தன.

**இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு சொத்துக்கள் 2009இல் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.** இதற்கு திறைசேரி முறிகளிலான வெளிநாட்டு முதலீடுகளின் பெறுகைகளின் கிடைப்பனவுகளைத் தொடர்ந்து மத்திய வங்கியின் வசமிருந்த ரூ.96.8 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை அரசாங்கம் இளைப்பாற்றியமை மற்றும் பணச் சந்தையில் காணப்பட்ட

மிதமிஞ்சிய திரவத்தன்மையை ஈர்ப்பதற்காக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களது விற்பனை போன்றனவே காரணமாகும். இதன்படி, மீள்கொள்வனவுகள் தவிர்ந்த மத்திய வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் 2008 இறுதியில் ரூ. 142 பில்லியனிலிருந்து 2009 ஏப்பிறலில் ரூ.225 பில்லியனுக்கு அதிகரித்து 2009 இறுதியில் ரூ.37.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. சமாந்தரமான வீழ்ச்சி இலங்கை மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு சொத்துக்களிலும் காணப்பட்டது.

**பொறுப்புக்களைப் பொறுத்தவரையில், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2008 இறுதியில் ரூ.186 பில்லியனிலிருந்து 2009 இறுதியில் ரூ.217.4 பில்லியனுக்கு 16.8 சதவீதத்தினால் அதிகரித்தது.** நியதி ஒதுக்கு நோக்கங்களுக்காக வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் வைப்புக்களும் முன்னைய ஆண்டின் இறுதியின் ரூ.82 பில்லியனிலிருந்து 2009 இறுதியில் ரூ.86 பில்லியனுக்கு அதிகரித்தது. 2009 இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்களில் காணப்பட்ட மற்றொரு முக்கிய விடயம் ரூ.78 பில்லியனாக கொண்ட மத்திய வங்கிப் பிணையங்களாகும். மிதமிஞ்சிய திரவத்தன்மை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் போதுமானதற்றதாக இருந்தமையால் பணச் சந்தையில் திரவத்தன்மையின் ஒரு பகுதியை ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கிப் பிணையங்கள் 2009 ஒத்தோபரிலிருந்து வழங்கப்பட்டன.

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

**மேம்பட்ட இலாபத் தன்மை மற்றும் அதன் விளைவாக வலுவடைந்த மூலதன நிலைமை போன்றவற்றினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் செயலாற்றம் பொதுவாக ஆரோக்கியமானதாக தொடர்ந்துமிருந்தது.** மேலும், உயர்வடைந்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கம்பனி ஆளுகை என்பன வங்கிகளின் இடர்நேர்வினை ஈர்த்துக் கொள்ளும் இயலளவை வலுவடையச் செய்தன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 22 ஆக தொடர்ந்தும் காணப்பட்டு 2,214 கிளைகள் மற்றும் 2,788 ஏனைய வங்கித்தொழில் பணி நிலையங்களையும் கொண்டதொரு வலைப்பின்னலுடன் தொழிற்பட்டன. இந்த வலைப்பின்னல் 1,757 தன்னியக்க கூற்றுப்பொறிகளினால் மேலும் வலுவூட்டப்பட்டு வங்கித்தொழில் சமூகம் அட்டைகளை அடிப்படையாக கொடுப்பனவு முறைகளில் அதிகரித்தளவில் தங்கியிருப்பதனைப் பிரதிபலிக்கின்றது.

**2009இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்து கொடுகடனுக்கான குறைந்த கேள்வியைப் பிரதிபலித்தன.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள் 2009 இறுதியில் ரூ.2,500 பில்லியன்களாகக் காணப்பட்டு 2008இன் 7.7 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 10.8 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்தது. தனியார் துறைக்கான கொடுகடன் கேள்வி வீழ்ச்சியடைந்தமையினால் 2009இல் அரச பிணையங்கள் மீதான முதலீடுகள் அதிகரித்தன. இரு அரசிற்குச் சொந்தமான வர்த்தக வங்கிகள் மொத்தச் சொத்துக்களில் 14.8 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்த வேளையில் உள்நாட்டு தனியார் வங்கிகளும் வெளிநாட்டு வங்கிகளும் கூட 2009இல் முறையே 8.9 சதவீதம் மற்றும் 5.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.

**அட்டவணை 8.4**

**முக்கிய நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள்**

| | 2008(அ) | | 2009(ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ.பில் | மொத்தச் சதவீதப் பங்கு % | ரூ.பில் | மொத்தச் சதவீதப் பங்கு % |
| **வங்கித்தொழில்துறை** | **3,294.6** | **68.0** | **3,832.0** | **68.3** |
| மத்திய வங்கி | 597.1 | 12.3 | 819.8 | 14.6 |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (இ) | 2,259.9 | 46.7 | 2,503.1 | 44.6 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 437.6 | 9.0 | 509.1 | 9.1 |
| **வங்கியல்லா வைப்புக்களை ஏற்க்கும் நிதியியல் நிறுவனங்கள்** | **285.9** | **5.9** | **315.1** | **5.6** |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 175.6 | 3.6 | 185.3 | 3.3 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 105.4 | 2.2 | 124.5 | 2.2 |
| சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 4.9 | 0.1 | 5.3 | 0.1 |
| **சிறப்பியல்பு வாய்ந்த ஏனைய நிதியியல் நிறுவணங்கள்** | **239.7** | **5.0** | **265.3** | **4.7** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்திகையிடல் கம்பனிகள் | 109.9 | 2.3 | 111.9 | 2.0 |
| முதன்மை வணிகர்கள் | 84.4 | 1.7 | 97.8 | 1.7 |
| பங்குத்தரகர் கம்பனிகள் | 3.2 | 0.1 | 6.4 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகல் | 6.8 | 0.1 | 10.0 | 0.2 |
| துணிகர மூலதனம் கம்பனிகள் | 1.4 | 0.0 | 1.6 | 0.0 |
| கொடுகடன் தரமிடல் முகவர்கள் | 0.1 | 0.0 | 0.2 | 0.0 |
| ஏனையவை | 33.9 | 0.7 | 37.4 | 0.7 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **1019.8** | **21.1** | **1203.6** | **21.4** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 155.2 | 3.2 | 179.7 | 3.2 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 655.4 | 13.5 | 772.0 | 13.7 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 92.4 | 1.9 | 107.3 | 1.9 |
| தனியார் ஊழியர் சேமலாப நிதியம் | 97.1 | 2.0 | 121.9 | 2.2 |
| அரச பணி சேமலாப நிதியம் | 19.7 | 0.4 | 22.7 | 0.4 |
| **மொத்தம்** | **4840.0** | **100.0** | **5,616.0** | **100.0** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் இரண்டினதும் ஒன்று திரட்டப்பட்ட சொத்துக்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**மொத்தப் பொறுப்புக்களின் உள்ளடக்கத்தில் வைப்புக்களின் பங்கு 69.0 சதவீதத்திலிருந்து 74 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் கடன்பெறுகைகள் 18.0 சதவீதத்திலிருந்து 13.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள் 2008இன் 7.1 சதவீதத்திற்கெதிராக 18.5 சதவீதத்தினால் ரூ.1,849 பில்லியனுக்கு அதிகரித்தன. இது முக்கியமாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் நிலவிய உயர்ந்த வட்டி வீதங்களால் ஏற்பட்டதாகும். எனினும், கடன்பெறுகைகள் 2008இல் பதிவு செய்யப்பட்ட 7.0 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 18.2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. உலக நிதியியல் நெருக்கடியின் பாதகமான தாக்கத்தின் ஒரு பகுதியாக வெளிநாட்டு கடன் பெறுகைகளிலான விரைவான மெதுவடைதலே இதற்கான முக்கிய காரணமாகும்.

**கடன் வழங்கலுக்கான உயர்ந்த செலவு மற்றும் உயர்ந்து வரும் செயற்படா கடன்களினைக் கருத்திற் கொண்டு வங்கிகள் வழங்கலை விரிவாக்குவதில் தயக்கம் காட்டியமை போன்றவற்றினால் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மெதுவடைந்தன.** ரூ.1,385 பில்லியனாகவிருந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தக் கடன் மற்றும் மூலதனச் சொத்துப்பட்டியல் 2008இல் பதிவு செய்யப்பட்ட 6.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து 4.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்களில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்கு 2008 இறுதியில் 64.5 சதவீதத்திலிருந்து

**அட்டவணை 8.5**

**வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளின் பரம்பல்**

| வகை | 2008 (அ) முடிவில் | 2009 (ஆ) முடிவில் |
|---|---|---|
| **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| **I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **22** | **22** |
| உள்நாட்டு வங்கிகள் | 11 | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | 11 | 11 |
| **II. உரிமம்பெற்ற வர்த்தகவங்கிகிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்** | **4,767** | **5,014** |
| கிளைகள் | 2,071 | 2,214 |
| உள்நாட்டு வங்கிக் கிளைகள் | 1,857 | 2,000 |
| முதன்மைக் கிளைகள் | 1,289 | 1,338 |
| விரிவாக்க/ கொடுப்பனவு அலுவலங்கள்/ பணிக்கரும பீடங்கள் | 568 | 662 |
| வெளிநாட்டு வங்கிகிளைகளும் ஏனைய பணிநிலையங்களும் | 214 | 214 |
| கிளைகள் | 44 | 44 |
| ஏனைய பணிநிலையங்கள் | 170 | 170 |
| மாணவர்களின் சேமிப்பு பிரிவுகள் | 2,684 | 2,788 |
| கடல்கடந்த கிளைகள் | 12 | 12 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாயந்த் வங்கிகள்** | | |
| **I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **14** | **14** |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 6 | 6 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2 | 2 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 2 | 2 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 2 | 2 |
| **II. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி கிளைகளும் ஏனைய பணிநிலையங்களும்** | **660** | **689** |
| கிளைகள் | 448 | 465 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 219 | 226 |
| தேசியசேமிப்பு வங்கி | 143 | 147 |
| நீண்டகால கடன் வழங்கும் நிநுவனங்கள் | 19 | 21 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 28 | 28 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 39 | 43 |
| ஏனைய பணி நிலையங்கள் | 37 | 49 |
| மாணவர்களின் சேமிப்பு பிரிவுகள் | 175 | 175 |
| **அனைத்து வங்கிக் கிளைகளும் ஏனைய பணி நிலையங்களும்,** | **5,427** | **5,703** |
| **தன்னியக்க கூற்றுபொறிகளின் மொத்த எண்ணிக்கை** | **1,654** | **1,876** |
| **விற்பனை நிலையங்களின் இலத்திரனியல் நிதி மாற்றல் வசதிகளின் மொத்த எண்ணிக்கை** | **23,447** | **24,977** |
| **வங்கி தொழில் அடர்த்தி : 100,000 ஆட்களுக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகிளைகளின் எண்ணிக்கை** | **10.2** | **10.8** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

55.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு வங்கிகள் அதிகூடிய வீழ்ச்சியான 20 சதவீதத்தைப் பதிவு செய்த வேளையில் உள்நாட்டு தனியார் வங்கிகளும் 6 சதவீதமானதொரு சுருக்கத்தினைப் பதிவு செய்தன. எனினும், அரசுக்குச் சொந்தமான வங்கிகள் 2 சதவீதமானதொரு மிதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தன. கடன் வழங்கல் செயற்பாடுகளிலான மெதுவடைதல் முக்கியமாக வெளிநாட்டு வர்த்தகம், மேலதிகப் பற்றுக்கள், கொடுகடன் அட்டைகள், குத்தகை கட்டணங்கள் மற்றும் ஏனைய நடுத்தரகால மற்றும் நீண்டகாலக் கடன்களில் காணப்பட்ட வேளையில் வங்கிகளினால் அறவிடப்பட்ட உயர்ந்த வீதங்களுக்கு மாறாக அடகு வைத்தல் முற்பணங்கள் ஒரு கணிசமான வளர்ச்சியான 15.7 சதவீதத்தைப் பதிவு செய்தன. கொடுகடனில் தொடர்ச்சியான மெதுவடைதல் காணப்பட்ட போதும் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் பாதகமான தாக்கங்களிலிருந்து பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமை போர் முடிவடைந்தமையினைத் தொடர்ந்து முதலீட்டாளர் நம்பிக்கை மேம்பாடடைந்தமை என்பனவற்றின் காரணமாக வங்கிகளினால் கடன் வழங்கலில் சாதகமான மீட்சி 2009இன் இறுதிக் காலப்பகுதியில் காணப்பட்டது.

துறை ரீதியான கொடுகடனின் பகிர்ந்தளிப்புக்களின்படி **அடகு வைத்தல் மற்றும் கொடுகடன் அட்டைகள் (28 சதவீதம்) உட்பட நுகர்வுச் செயற்பாடுகளிலும் புடவை உற்பத்தி உட்பட தயாரிப்புக்கள் (16 சதவீதம்), வர்த்தகம் (15 சதவீதம்) மற்றும் வீடமைப்பு மற்றும் சொத்துக்களின் அபிவிருத்தி (15 சதவீதம்) உட்பட கட்டடவாக்கம் போன்றவற்றில் செறிந்து காணப்பட்டு மொத்தக் கொடுகடனில் பெரும்பங்கிற்கு வகைகூறியது.** இதேவேளை, போர் முடிவுக்கு வந்தமை மற்றும் பொருளாதாரத்திற்கு தனியார் துறைக்கான கொடுகடனை விரிவுபடுத்துவதற்கான இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள் போன்றவற்றின் காரணமாக வேளாண்மை, சுற்றுலா மற்றும் வர்த்தக செயற்பாடுகளிற்காக கடன் வழங்கல் அதிகரிப்பதற்கான அறிகுறிகளை காட்டின. சுற்றுலாத் துறையிலுள்ள நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கியினால் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வேண்டுகோள்கள் மற்றும் வேளாண்மை கடன் வழங்கல் இலக்கான 10 சதவீதத்தினை அடைவது தொடர்பான தொடர்ச்சியான கண்காணிப்பு போன்றவை அவ்வாறான ஒரு சில முயற்சிகளாகும். தயாரிப்பு, போக்குவரத்து மற்றும் கட்டடவாக்கத் துறைகளுக்கான கொடுகடனின் விகிதாசாரம் 2008இல் நிலவிய மட்டங்களிலிருந்து மிதமானளவு வீழ்ச்சியடைந்தன.

**உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளின் இலாபம் (வரிக்கு முந்திய) 2009 இறுதியில் ரூ.27.6 பில்லியனை அடைந்த வேளையில் முன்னைய ஆண்டின் 18.1 சதவீதத்திற்கெதிராக 9.3 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவு செய்தது.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உயர்ந்தளவான உற்பத்தித் திறனுக்கு வழிவகுத்த தொழிற்பாட்டு வினைத்திறனிலான மேம்பாடுகளின் காரணமாக உரிமம் பெற்ற வர்தக வங்கிகளின் வருவாய்கள் சிறிதளவு உயர்வடைந்தன. இது, இத்தகைய வங்கிகள் தமது செலவுகளை முகாமை செய்வதற்கு தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளினொரு விளைவாகும். தொழிற்பாட்டுச் செலவுகள் 2008இல் பதிவு செய்யப்பட்ட 17.9 சதவீதத்திற்கெதிராக இவ்வாண்டுப் பகுதியில் 5.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஊழியர்களுக்கான செலவினமும் முன்னைய ஆண்டின் 19.5 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து ஒரு தாழ்ந்த மட்டமான 9.3 சதவீதத்தில் அதிகரித்தது. செலவுச் சிக்கன நியதிகளில் மொத்த தொழிற்பாட்டு வருவாய்க்கான மொத்த தொழிற்பாட்டு செலவினங்களினால் அளவிடப்படும் தொழிற்பாட்டு வினைத்திறன் விகிதம் 2008இன் இறுதியில் 56.1 சதவீதத்திலிருந்து 54.9 சதவீதமாக மேலும் மேம்பாடடைந்தது. மேலும், மொத்த வருவாய்க்கான மொத்தச் செலவினமாக அளவிடப்படும் வருவாய்க்கான செலவு விகிதமும் 2008 இறுதியில் 79 சதவீதத்திலிருந்து 77.3 சதவீதத்திற்கு மேம்பட்டது. இதேவேளை முக்கிய கடன்வழங்கலில் செயற்பாடுகளிலிருந்தான தேறிய வட்டி வருமானம் 10 சதவீதத்திலானதொரு அதிகரிப்பைப் பதிவு செய்த வேளையில் தேறிய வட்டி இலாபம் 4.7 சதவீதமாகவிருந்தது. கட்டணத்தை அடிப்படையாகக்கொண்ட வருவாயின் பங்களிப்பும் 4.0 சதவீதமானதொரு வளர்ச்சியைக் காட்டியது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் துறையின் இலாபத்திலான வளர்ச்சிக்கு ஏறத்தாழ 50 சதவீதமான முக்கிய பங்கினை வழங்கியவை உள்நாட்டுத் தனியார் வங்கிகளாகும்.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முக்கிய நிதியியல் ஆற்றல்தன்மைக் குறிகாட்டிகள் தொடர்ந்தும் ஆரோக்கியமானதொரு மட்டங்களில் காணப்பட்டன.** பாசல் IIஇன்

அட்டவணை 8.6

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

ரூபா. மில்லியன்

| | 2008(அ) முடிவில் | 2009(ஆ) முடிவில் | மாற்றம் 2009/2008 தொகை | மாற்றம் 2009/2008 % |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | **2,259,914** | **2,503,126** | **243,211** | **10.8** |
| **திரவச் சொத்துக்கள்** | **713,259** | **999,448** | **286,189** | **40.1** |
| கையிலுள்ள பணம் | 35,196 | 38,818 | 3,622 | 10.3 |
| மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | 87,163 | 88,730 | 1,567 | 1.8 |
| திறைசேரி உண்டியல்கள் | 87,325 | 201,792 | 114,468 | 131.1 |
| திறைசேரி முறிகள் | 194,367 | 273,405 | 79,039 | 40.7 |
| ஏனைய சொத்துக்கள் | 309,209 | 396,703 | 87,494 | 28.3 |
| **கடன்களும் முற்பணங்களும் (வட்டித் தொங்கல்கள் நீங்கலாக)** | **1,459,158** | **1,385,056** | **-74,103** | **-5.1** |
| கழி : ஒதுக்கங்கள் | 57,577 | 57,121 | -455 | -0.8 |
| தேறிய : கடன்களும் முற்பணங்களும் | 1,401,581 | 1,327,934 | -73,647 | -5.3 |
| **நிலையான ஏனைய சொத்துக்களும்** | | | | |
| **பொறுப்புக்கள்** | **145,074** | **175,743** | **30,669** | **21.1** |
| மூலதன நிதியங்கள் | 179,050 | 205,284 | 26,234 | 14.7 |
| **மொத்த வைப்புக்கள்** | **1,560,247** | **1,849,569** | **289,322** | **18.5** |
| கேள்வி வைப்புக்கள் | 166,164 | 199,385 | 33,221 | 20.0 |
| தவணை, சேமிப்புவைப்புக்கள் | 1,326,598 | 1,583,873 | 257,275 | 19.4 |
| ஏனையவை | 67,484 | 66,311 | -1,174 | -1.7 |
| **கடன்பாடுகள்** | **400,130** | **327,397** | **-72,734** | **-18.2** |
| உள்நாட்டு கடன்பாடுகள் | 272,259 | 238,748 | -33,511 | -12.3 |
| வெளிநாட்டு கடன்பாடுகள் | 127,872 | 88,649 | -39,223 | -30.7 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | **120,487** | **120,876** | **389** | **0.3** |
| **மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **2,259,914** | **2,503,126** | **243,211** | **10.8** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கீழான மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் தேவைப்படும் விகிதமான 10.0 சதவீதத்திற்கு மிகவும் மேலாக ஏறத்தழ 14.0 சதவீதத்தில் ஆண்டு முழுவதிலும் பேணப்பட்டது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 2008இன் 13.8 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2009இறுதியில் 14.2 சதவீதமாகக் காணப்பட்டது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மீதான வருவாயின் நியதிகளிலான வரிக்கு முந்திய மற்றும் வரிக்குப் பிந்திய இலாபத்தன்மை முறையே 2.0 சதவீதம் மற்றும் 1.2 சதவீதத்தில் பேணப்பட்டது. எனினும், அதிகரித்த மூலதன நிதிகளின் காரணமாக பங்கு மூலதனம் மீதான வருவாய் 2008இன் 14.8 சதவீதத்திற்கெதிராக 14.4 சதவீதமான ஒரு சிறிதளவான வீழ்ச்சியைக் காட்டியது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முழு மொத்தத் திரவத்தன்மை நிலைப்பாடு தொடர்ந்தும் காணப்பட்டதுடன் நியதித் திரவச்சொத்து விகிதம் ஆகக் குறைந்த தேவைப்பாடான 20.0 சதவீதத்திற்கெதிராக 32.0 சதவீதமாகவிருந்தது. உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளின் சொத்துக்களின் தரத்தைக் குறித்து நிற்கும் மொத்த செயற்படாக் கடன் விகிதம் 2008 இறுதியின் 6.0 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2009 இறுதியில் 7.6 சதவீதமாக காணப்பட்டது. இது 2007/2008 காலப்பகுதியில் கடன் வழங்கலின் விரிவாக்கம் மற்றும் கடன் பெறுகைகளின் காலம் தாழ்த்திய விளைவும் 2009இல் மொத்தக் கடன் சொத்துப்பட்டியல் பதிவு செய்யப்பட்ட சுருக்கத்தினதும் விளைவாகும்.


## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

**2009இல் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வைப்புக்களைத் திரட்டுவதில் உயர் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.** உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் எண்ணிக்கை 2009 இறுதியில் 14 ஆகத் தொடர்ந்தும் காணப்பட்டு 465 கிளைகளைக் கொண்ட ஒரு வலைப்பின்னலினூடாகத் தொழிற்பட்டது. மொத்தச் சொத்துக்கள் 2008இன் 7.8 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2009 காலப்பகுதியில் 15.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. வைப்புக்கள் மற்றும் மூலதன நிதியங்களும் முறையே 18.7 சதவீதம் மற்றும் 13.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. எனினும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடன் வழங்கல் செயற்பாடுகள் 2008இல் பதிவு செய்யப்பட்ட 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 4.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்து ஒரு மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வசமிருந்த அரச பிணையங்கள் 2008இன் 7.0 சதவீதத்திற்கெதிராக 26.0 சதவீதத்தினால் ஒரு கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.


**உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளின் முழு மொத்த நிதியியல் ஆற்றல்தன்மைக் குறிகாட்டிகள் பேணப்பட்டன.** வருவாய்களும் இலாபத்தன்மையும் 2009 காலப்பகுதியில் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியை வெளிப்படுத்தின. 2009இற்கான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வரிக்கு முந்திய இலாபங்கள் 2008இன் ரூ.6 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2009இல் ரூ.10.9 பில்லியனாகக் காணப்பட்டு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 7.6 சதவீத வீழ்ச்சிக்கெதிராக 80 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. இந்த வளர்ச்சி தேறிய வட்டி வருவாய் மற்றும் ஏனைய வருவாய்களினால் பெருமளவில் ஆதரவளிக்கப்பட்டது. இதன் விளைவாக சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய் விகிதங்களும்

வரைபடம் 8.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் (2009 இறுதியிலுள்ளவாறு)

வரைபடம் 8.1.1
வர்த்தக் வங்கிகளின் நிதியங்களின் மூலங்கள்




வரைபடம் 8.1.2
வர்த்தக் வங்கிகளின் நிதியங்களின் பயன்பாடுகள்




ஒரு பாராட்டத்தக்க மேம்பாட்டினைப் பதிவு செய்த வேளையில், சொத்துக்கள் மீதான வரிக்கு முந்திய வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய் போன்றவை முறையே 2.3 சதவீதம் மற்றும் 15.2 சதவீதமாகவிருந்தன. இதேவேளை, செலவுச் சிக்கனம் மற்றும் வருவாய் மீதான செலவு விகிதங்களினால் அளவிடப்பட்டவாறான துறையின் செலவுச் சிக்கனமும் முறையே 2008 இறுதியில் 51 சதவீதத்திலிருந்து 40.3 சதவீதத்திற்கும் 2008 இறுதியில் 83.6 சதவீதத்திலிருந்து 80 சதவீதத்திற்கும் ஒரு மேம்பாட்டைக் காட்டியது. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அரச பிணையங்களிலான அதிகரித்த முதலீடுகளினால் 70 சதவீதத்திற்கு மேற்பட்ட நியதித் திரவச்சொத்துக்கள் வீதத்தினைப் பேணிக் கொண்டன. மூலதனப் போதுமாந்தன்மை விகிதமும் ஆகக் குறைந்த தேவைப்பாடான 10 சதவீதத்திற்கு மிகவும் மேலாக 2009இல் 19.2 சதவீதத்தில் பேணப்பட்டன. செயற்பாடக் கடன்கள் முன்னைய ஆண்டின் 8.9 சதவீதத்திற்கெதிராக 10.9 சதவீதத்திலிருந்தமையினால் இத் துறையின் சொத்துக்களின் தரம் மிதமானளவில் தேய்வடைந்தது.

அட்டவணை 8.7 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கொடுகடன்அட்டைத் தொழிற்பாடுகள்

| | 2008(அ) | 2009(ஆ) | % மாற்றம் |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | 917,41 | 8840,509 | -8.4 |
| உள்ளூர் (உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 57,641 | 58,302 | 1.1 |
| உலகளாவிய (உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 859,777 | 782,207 | -9.0 |
| ஆண்டு இறுதியில் வெளிநின்றகொடுகடன் (ரூ.மில்) | 34,212 | 31,375 | -8.3 |
| உள்ளூர் (உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 856 | 762 | -11.0 |
| உலகளாவிய (உலகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட) | 33,356 | 30,613 | -8.2 |
| வரவேண்டிய நிலுவை (வெளிநின்ற கொடுகடனின் % ஆக) | 6.9 | 6.3 | -9.3 |
| வரவேண்டிய முன்னைய நிலுவை (வெளிநின்ற கொடுகடனின் % ஆக) | 8.8 | 10.4 | |
| வணிகர்களிடமிருந்தான தரகு | 1.5-4.0 | 1.5-4.0 | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## வங்கிகளின் ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வையும்

**வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தை வலுப்படுத்து வதற்காக இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகளையும் வழிகாட்டிகளையும் வழங்கியது.** வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையை தரப்படுத்துவதனையும் வலுப்படுத்துவதனையும் கருத்திற் கொண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி வியாபாரத்துடன் தொடர்புபட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. துறையின் கருத்துக்களிற்காக, வங்கிகளுக்கான ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஒரு வரைவு வழிகாட்டி வழங்கப்பட்டது. வங்கி வாடிக்கையாளரின் கோரப்படாத சொத்துக்களினைப் பாதுகாப்பதனைக் கவனத்தினைக் கொண்டு கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணுதல், பதிவு செய்தல், பரிமாற்றுதல் மற்றும் பேணிக் கொள்ளுதல் போன்றன மீதான பணிப்புரைகளும் வழங்கப்பட்டன.

**ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதன் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக வங்கித்தொழில் சட்டம் திருத்தியமைக்கப்படும்.** உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் முகாமைசெய்யும் முகவர்களது நியமனம், வங்கிகளை முடிவுறுத்துவதற்கான வழிமுறைகள், வங்கித்தொழில் குழுக்களின் ஒன்று திரட்டப்பட்ட மேற்பார்வை, இணைத்தல் மற்றும் திரட்டுதல் தொடர்பான ஏற்பாடுகளை விரிவுபடுத்தல், பொருள் சார்ந்த கணிசமான அக்கறையினை தீர்மானிப்பதற்கான பிரமாணத்தினை விரிவுபடுத்தல், முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லாமைக்கான குற்றங்கள் மற்றும் தண்டங்களது ஏற்பாடுகளை விரிவுபடுத்தல், பொதுமக்களுக்கு நிதியியல் அறிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான காலத்தினைக் குறைத்தல், தனிப்பட்ட வங்கிகளுக்கு அவற்றின் இடர்நேர்வு தோற்றப்பாட்டிற்கமைய உயர்ந்த மூலதன தேவைப்பாட்டிற்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல் மற்றும் 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒத்திசைவாக்குதல் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

சிறப்புக்குறிப்பு 14

## உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு நியம நிர்ணயவாளர்களின் பதிலிறுப்பு: பாசல் II மூலதனக் கட்டமைப்பிற்கும் மற்றும் பன்னாட்டு கணக்கியல் நியமங்களுக்குமான மாற்றங்கள்

**பாசல் II மூலதனக் கட்டமைப்பிற்கான மாற்றங்கள்**

உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கான பல்வேறுபட்ட காரணங்களை வங்கி மேற்பார்வைக்குரிய உலகளாவிய நியமங்களை நிர்ணயிக்கும் வங்கியியல் மேற்பார்வைக்கான பாசல் குழு கண்டறிந்துள்ளது. ஒழுங்குபடுத்தப்படாத வியாபாரங்களுக்கு மிகையளவிலான ஐந்தொகை மற்றும் ஐந்தொகைக்குப் புறம்பான வெளிப்படுத்தல்கள், சிக்கல்கள் நிறைந்த ஒழுங்கமைப்புடைய நிதிச்சாதனங்கள் மற்றும் சந்தைகள், வங்கிகளினுடைய மூலதனத்திலேற்பட்ட படிப்படியான இழப்பு மற்றும் பல வங்கிகளில் காணப்படும் போதுமையற்ற திரவத் தாங்கிருப்பு ஆகியன இதற்கான பிரதான காரணங்களாக இருக்கின்றன. எனவே, வியாபார மற்றும் கடன் நட்டங்களினை உறிஞ்சக்கூடிய இயலுமையுடையதாக வங்கியியல் முறைமை காணப்படவில்லை. நிதி நெருக்கடிகளிலிருந்து பெற்றுக்கொண்ட படிப்பினைகளுக்குப் பதிலிறுக்கும் முகமாக, உலகளாவிய ரீதியில் மீளெழுச்சியுடைய வங்கியியல் தொழிலை முன்னேற்றும் விதமாக தற்போதைய ஒழுங்குபடுத்தல் மூலதனக்கட்டமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்துவது என வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழு தீர்மானித்துள்ளது.

**(அ) பாசல் II மூலதனப்போதுமைக் கட்டமைப்பின் 3 தூண்களை வலுப்படுத்துவதற்கு 2009 யூலையில் வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைப் பொதி**

இந்நடவடிக்கைகள் வங்கி மூலதனத்தின் தரத்தினை வலுப்படுத்துவதற்காக புதிய நியமங்களை அறிமுகம் செய்தல், நெருக்கடியான தருணங்களில் உதவக்கூடிய மூலதனத் தாங்கிருப்பினை உருவாக்க ஊக்கப்படுத்துதல், பாசல் II இற்கு மேலதிகமான நடவடிக்கையாக முடுக்கி விகிதத்தினை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டவையாகும்.

**முன்மொழியப்பட்டுள்ள பாசல் II விரிவாக்கங்கள் பின்வருமாறு:**

**தூண் 1 (ஆகக்குறைந்த மூலதன வீதங்கள்)**

- பிணைய மயப்படுத்தல் போன்ற தானாகவே இடர்நேர்வுறும் சாதனங்களைப் பொறுத்தவரையில் (சொத்துக்களால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் வழங்கப்பட்ட படுகடன் கடப்பாடுகள்) உயர்ந்தளவு இடர்நேர்வு நிறைகளை ஏற்படுத்துதல்
- வங்கிகளால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் அல்லது அது போன்றவைகள் அடிப்படையிலான தரப்படுத்தல்களை அங்கீகரிப்பதன் மூலம் வங்கிகளைப் பாதுகாத்தல்
- விசேடமாக பிணையமயப்படுத்தலுக்கு இடர்நேர்வு நிறைகளைப் பாவிப்பதற்காக, வங்கி தரப்படுத்தல் முகவர்களில் கொடுகடன் தரப்படுத்தலில் தங்கியிராது, நெருக்கமான கண்காணிப்பினூடான தனது சொந்த முயற்சியால் செயற்படுவதற்கான தேவைப்பாடு
- ஐந்தொகைக்குப் புறம்பான வெளிப்படுத்தலுக்கான குறுங்காலத் திரவத்தன்மை உபகரணங்களின் இடர்நேர்வு நிறையளிப்பிற்கு உயர்ந்தளவு கொடுகடன் மாற்றல் காரணி (50 சதவீதம்)
- பொதுவான சந்தைக் குழப்பத்தினால் கிடைப்பனவாயுள்ள திரவத்தன்மை வசதிகளை மூலதனக்கணிப்பீட்டுக்குச் சாதகமாக பாவிப்பதனைத் தவிர்த்தல்

**தூண் 2 (மேற்பார்வை மீளாய்வுச் செயற்பாடு)**

நெருக்கடியின்போது உணரப்பட்ட, இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை வெளிப்படுத்தும் மேலதிக வழிகாட்டியொன்றை வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழு வெளியிட்டுள்ளது. இவ் வழிகாட்டுதல்கள் இடர்களை திறம்பட இனங்காணுதல் மற்றும் முகாமை செய்தல் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மையின் உள்ளக மதிப்பீட்டிலே முறையாக இடர்களை வங்கிகளும் மேற்பார்வையாளர்களும் கையகப்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டவையாகும். இவ்வழிகாட்டுதல்களின் சில முதன்மை எண்ணக்கருக்கள் வருமாறு:

(i) ஒரு சிறந்த இடர் முகாமைத்துவ முறைமையானது பின்வரும் முதன்மையான பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- செயற்படும் சபையும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வையும்
- பொருத்தமான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் எல்லைகள்
- இடர்நேர்வுகளின் ஒருங்கிணைந்த மற்றும் உரிய நேரத்திலான இனங்காணுதல், அளவீடு மட்டுப்படுத்தல், கட்டுப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்
- வியாபார மற்றும் நிறுவன ரீதியில் பொருத்தமான தகவல் முகாமைத்துவ முறைமைகள்
- விசாலமான உள்ளகக் கட்டுப்பாடு

(ii) இடர்நேர்வுகளை உரிய நேரத்தில் கண்டறிதல், அளவிடுதல், கண்காணித்தல், முகாமைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகளையும் முறைமைகளையும் திறன் மிகுந்த உள்ளகக் கொள்கைகளையும் வங்கி கொண்டிருக்க வேண்டும். வங்கியினுடைய தூண் 2 கணிப்பீட்டிற்கு அமைய இடர்நேர்வுத் திரட்சிக்குரிய பொருத்தமான மூலதன மட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

(iii) குறிப்பாக தூண் 1 இல் முழுமையாக உள்வாங்கப்படாத

பிணைய மயமாக்கலினால் எழும் சகல இடர்நேர்வுகளும் தூண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடர்நேர்வுகளாவன:

- ஒவ்வொரு வெளிப்படுத்துகையின் கொடுகடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் மதிப்பு இடர்நேர்வு
- பிணையமயப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்களிலிருந்து எழக்கூடிய தீமைகள் மற்றும் நட்டங்கள்
- விசேட நோக்குடைய நிறுவனங்களுக்கான கொடுகடன் வசதிகளின் வெளிப்படுத்தல்கள் மற்றும் திரவத்தன்மைக்கான வசதியளிப்புக்கள்
- பாதுகாப்பு வழங்குனர்களால் (காப்பாளர்கள்) மற்றும் ஏனைய 3ஆம் தரப்புக்களால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்

(iv) குவியப்படுத்தல், பிணையமயமாக்கல், ஐந்தொகைக்குப் புறம்பான வெளிப்படுத்தல்கள், மதிப்பீட்டு வழக்கங்கள் மற்றும் ஏனைய இடர்நேர்வுகள் உள்ளடங்கலான சகல பிரதான இடர்நேர்வுகளையும் மதிப்பிட்டு, வரைவிலக்கணப்படுத்தக்கூடிய வலிமையான நிறுவன ரீதியிலமைந்த ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பினை வங்கி கொண்டிருக்கின்றதா என்பதனை மேற்பார்வையாளர்கள் நிர்ணயிக்க வேண்டும். இவை தூண் 1 இல் முழுமையாக உள்வாங்கப்பட்டிராத பட்சத்தில், தூண் 2 இற்கு அமைய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைக்குள் வேண்டிய அளவில் உருவாக்கப்பட வேண்டும்.

**தூண் 3 (சந்தை ஒழுக்கம்)**

இது மூலதனச் சந்தைத் தொழிற்பாடுகள் மீதான ஐந்தொகையின் வலிமை மீதான சந்தையின் நிச்சயமற்ற தன்மையைக்குறைப்பதற்காகப் பிணையமயமாக்கல், ஐந்தொகைக்குப் புறம்பான வெளிப்படுத்துகைகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளின் மேலதிக வெளிப்படுத்தல் தேவைப்பாட்டைக் குறிக்கிறது.

**(ஆ) 2009 திசெம்பரில் வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழுவினால் ஆலோசனைக்காக அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகளின் பொதி (2010 ஏப்பிறல் வரையில் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது).**

- பெறுதிகள், மீள் கொள்வனவுகள், பிணையங்களின் நிதியியல் நடவடிக்கைகளினால் எழுகின்ற கொடுகடன் இடர்நேர்வு வெளிப்படுத்தல்களுக்குரிய இணைத்தரப்பினுடைய மூலதன வேண்டுதலினை வலுவாக்குதல்
- அடுக்கு 1 மூலதனத்தின் தரமட்டத்தினையும், சீர்த்தன்மையினையும் உயர்த்துவதற்காகப் பொதுப் பங்குரிமைக்கு ஒழுங்குமுறைப்படுத்தும் சீராக்கங்களைப் பிரயோகித்தல். பொதுப்பங்குரிமை அடுக்கு 1 மூலதனத்தில் ஆதிக்கமுடையதாக இருத்தல் வேண்டும். அடுக்கு 2 மூலதனத்திற்கான வகைப்படுத்தலுக்குரிய இயலுமைப் பிரமாணங்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன் அடுக்கு 3 மூலதனம் ஒழிக்கப்படுகின்றது.
- மூலதனத்தின் வெளிப்படைத்தன்மையை முன்னேற்றுவதற்காக எல்லா வகையான மூலதன மூலகங்களும் அதற்குரிய விபரமான இணக்கங்களும் வேண்டப்படுகின்றன.
- தூண் 1 உடன் ஒருங்கிணைக்கும் பொருட்டு பொருத்தமான மீளாய்வின் அடிப்படையில், பாசல் II இற்கு பூர்த்தி செய்யும் ஒரு நடவடிக்கையாக முடுக்கி வீதத்தினை (அடுக்கு 1 மூலதனம் சீராக்கப்பட்ட சொத்துக்களின் வீதமாக) அறிமுகப்படுத்தல்.

முறைமை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் உருவாக்கும் வெளித்தாக்கங்களைக் குறைப்பதற்காக மேலதிக மூலதன அளவீடுகளின் தேவையினையும் வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழு மீளாய்வு செய்கின்றது.

**சர்வதேச கணக்கியல் நியமங்களின் மாற்றங்கள்**

தற்போது நடைமுறையிலுள்ள கணக்கியல் நியமங்களின் சில முக்கிய கூறுகளுக்கு அண்மையில் ஏற்பட்ட நிதியியல் நெருக்கடி சவால் விடுக்கும் வகையில் அமைந்தது. நிதியியல் சாதனங்களுக்கான திரவத்தன்மையற்ற சந்தைகள் மெய்ப்பெறுமதி மதிப்பீடு தொடர்பான பிரச்சனைகளுக்கு இட்டுச்சென்றது. உரிய நேரத்திலான, கணிய ரீதியிலமைந்த அணுகுமுறையான தற்போதைய நியமங்களின் நட்டத்தினை ஏற்படுத்திய மாதிரிகள் காலதாமதமானதும் குறைந்ததுமானதுமான ஏற்பாடுகளுக்கே வழியமைத்தன. வேறுபட்ட கணக்கியல் நியம நிர்ணய விதிகளுக்கிடையே இணக்கத்தன்மை இல்லாதிருப்பது சமமற்ற வாய்ப்புக்களை உருவாக்குவதுடன், ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பான தன்னிச்சையான முறைகள், ஒப்பிடத்தக்க நிதியியல் கூற்றுக்கள் என்பன தொடர்பான பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றது. அமைப்புக் கொடுகடன் சாதனங்கள் மற்றும் ஐந்தொகைக்குப் புறம்பானவை தொடர்பில் பயனுடைய, தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் கிடைப்பனவின்மை வலுவற்ற தீர்மானமெடுத்தலுக்கு இட்டுச்சென்றது.

இப்பிரச்சனைகள் தொடர்பாக, சர்வதேச கணக்கியல் நியமங்கள் சபையும் ஐக்கிய அமெரிக்க சர்வதேச கணக்கியல் நியமங்கள் சபையும் நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தலும், அளவிடுதலும் தொடர்பிலான தற்போதைய கணக்கியல் நியமங்களை மீளாய்வு செய்வதுடன் ஒரு தனி நியமத்தை உருவாக்கவும் விரும்புகின்றன. மொத்தத்தில், நிறுவனங்களின் இடர்நேர்வுத் தோற்றப்பாடுகள் இடர்நேர்வு முகாமைக் கொள்கைகள் மற்றும் தொடர்புடைய இலாபங்கள்/ நட்டங்கள் ஆகிய தரவுகளின் தரத்தினை செழுமைப்படுத்துவதனையும் அதன் மூலம் சந்தையின் நம்பிக்கைத் தன்மையை உயர்த்துவதனையும் எதிர்பார்த்தே மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

**முன்மொழியப்பட்ட மாற்றங்களும் அதன் நோக்கங்களும்.**

**அ) நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலும், அளவிடுதலும்**

- தற்போது, பன்னாட்டுக் கணக்கீட்டு நியமம் 39 நிதியியல் கருவிகளை இனங்காணுவதிலும் அளவிடுவதிலும் ஈடுபடுவதுடன் இதன் கீழ் நிதியியல் கருவிகள் நான்கு வகைகளின் கீழ் வருகின்றன. அவையாவன, இலாபம் அல்லது நட்டத்தினூடான சரியான பெறுமதியிலான நிதியியற் சொத்துக்கள், முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவை, விற்பனைக்கு கிடைக்கத்தக்க கருவிகள்
- சர்வதேச கணக்கியல் நியமம் 39 ஆனது அதிலுள்ள சிக்கல் தன்மையைக் குறைக்கும் முகமாக பிரதியீடு செய்யப்படும் அளவீட்டு நோக்கங்களுக்காக, நிதியியல் சாதனங்களை மீளளிப்புச் செலவு, சந்தைப் பெறுமதி என இரண்டு வகையாக முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 வகைப்படுத்துகின்றது. நிறுவனங்களுடைய வியாபார மாதிரிகள் மற்றும் நிதியியல் சொத்துக்களின் காசுப்பாய்ச்சல் பண்புக் கட்டுமானங்களால் இந்த வகைப்படுத்தல் கொண்டு நடாத்தப்படும்.

**(ஆ) பழுதுறும் முறையியல்**

- தற்போதைய நட்ட உள்ளீர்ப்பு அணுகுமுறையின் கீழ், மோசமான நட்டங்கள் ஏற்படும் போது மட்டுமே அவற்றை இனம்காண முடிவதுடன் அதனை மேலோட்டமாகவே மதிப்பிடவும் முடிகிறது. நிதியிடல் அறிக்கையிடலில் எதிர்பார்க்கப்படும் நட்டங்கள் அவை ஏற்படமுன்னர் சுட்டிக்காட்டப்படுவதில்லை என்பதுடன் வட்டி வருமானங்கள் மிகையாக (முன்னரே பதிவேற்றல்) பதிவிடப்படுகின்றன.
- இதனால், மோசமான நட்டங்களை அவை ஏற்பட முன்னரேயே இனம் காணுதல், முன்னரேயே பதிவேற்றப்படும் வட்டி வருமானங்களைக் குறைத்தல் மற்றும் சாதனங்களைச் சிறப்பாக விலையெடுப்பதற்கு ஏதுவாக கொடுக்கல் வாங்கல்களின் தன்மையை சிறப்பாகப் பிரதிபலித்தல் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல் அணுகுமுறைக்கு மாறுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.
- இவ்வணுகுமுறையின் பிரதான பண்புகள்
  - எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சலின் அடிப்படையிலேயே வட்டி வருமானம் இனங் காணப்படுகிறது
  - மோசமான நிலை கொடுகடன் நட்ட எதிர்பார்ப்புகளின் பாதகமான மாற்றங்களிலிருந்து ஏற்படுகிறது.
  - எதிர்பார்ப்புகள் சாதகமாக மாறும் போது எதிர்பார்க்கப்பட்ட இழப்பு நேர்மாறாகிறது.
  - ஒவ்வொரு காலப்பகுதி முடிவிலும் எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சலின் மீள் மதிப்பீடு

**இ) ஐந்தொகைக்குப் புறம்பான அம்சங்களின் கணக்கியல்**

குறிப்பிட்ட அம்சங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சில அம்சங்கள் கருத்திலெடுக்கப்படாமையால் நடைமுறையிலுள்ள ஐந்தொகைக்குப் புறம்பான அம்சங்கள்/ காவிகளை சர்வதேச கணக்கியல் நியமங்கள் சபை மீளாய்வு செய்கின்றது. கட்டுப்பாடுகளின் வரையறைகளை இறுக்கமாக்க சர்வதேச கணக்கியல் நியமங்கள் சபை முனைவதோடு, பரிமாறப்படும் நிதிச் சொத்துக்களின் இடர்நேர்வு குறித்த அம்சங்களின் வெளிப்படுத்துகை சம்பந்தமான மிகையான தரவுகளை பாவனையாளர்களுக்கு வழங்கும் பொருட்டு, வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை மேம்படுத்தவும் முனைகிறது.

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

**புதிய கொடுகடனுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி, சிலிங்கோ குழுமத்திலுள்ள வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடன் தொடர்பான பல நிறுவனங்கள் முறிவடைந்தமை என்பன இத் துறையின் வழமையான வியாபார நடவடிக்கைகளுக்கு தடையாக விளங்கின.** இருந்தபோதிலும், இதன் விளைவாக இலாபத்தன்மை, வருவாய்கள் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை போன்றவற்றின் நியதிகளில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் செயலாற்றம் பாதகமான முறையில் பாதிப்படைந்தது. சில கம்பனிகள் முகம் கொடுத்த தீவிரமான அழுத்தங்களுக்கு மாறாக வங்கியின் நிதி இலகுவாகக் கிடைக்கப்பெறாத பன்முகப்படுத்தப்பட்டதும் முக்கியமானதுமான வாடிக்கையாளர் தளத்திற்கு சேவையாற்றுவதன் மூலம் வாகனங்களுக்கு நிதியிடல் பரப்புகளில் ஒரு முக்கிய பங்களிப்பை பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்துறை தொடர்ந்தும் வழங்கியது. ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2009இல் பதிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து தொழிற்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 34 இலிருந்து 35 ஆக அதிகரித்தது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 2008 இறுதியில் 248 இலிருந்து 2009 திசெம்பரில் 289இற்கு அதிகரித்தது.

**சில பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் எதிர்நோக்கப்பட்ட அழுத்தங்களின் காரணமாக மொத்தச் சொத்துக்களிலான வளர்ச்சி மெதுவடைந்தது.** இதன்படி, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2008ஆம் ஆண்டிற்காகப் பதிவு செய்யப்பட்ட 23 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2009ஆம் ஆண்டில் 5 சதவீதத்தினால் ரூ.185 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன. 2008இல் துறையின் மொத்தச் சொத்துக்களில் ஏறத்தாழ 46 சதவீதத்திற்கு வகைகூறிய மிகப் பெரிய இரு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் சந்தைப்பங்கு 2009 இறுதியில் 37 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெரிய ஒன்பது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் பதிவு செய்யப்பட்ட

நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களில் ஏறத்தாழ 73 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் பதினெட்டு நடுத்தரளவான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மொத்தச் சொத்துக்களில் 24 சதவீதத்திற்கு மாத்திரமே வகைகூறின.

**சில துறைகளுக்கான கடன் வழங்கலின் வளர்ச்சி குறிப்பிடத்தகளவு மெதுவடைந்தது.** 2009 இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்கனிகளின் சொத்துக்களில் வாகனங்களுக்கு நிதியிடுவதற்கான கொள்வனவு மற்றும் குத்தகை வசதிகள் ஏறத்தாழ 63 சதவீதத்திற்கு வகைகூறின. சொத்துக்களின் மோசமான தரத்திற்கு இசைவாக பெரும்பாலான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் கடன் வழங்கலினைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு படிமுறைகளை மேற்கொண்டதுடன் தமது கடன் வழங்கலை விரிவுபடுத்தும் போது ஒப்பீட்டளவில் பழமை வாய்ந்த அணுகுமுறையைப் பின்பற்றின. இதன் விளைவாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் வழங்கப்பட்ட மொத்தக் கடன் வழங்கல் 2008 பதிவு செய்யப்பட்ட 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து 2009இல் 3 சதவீதத்தினால் ரூ.116 பில்லியனுக்கு சிறிதளவு அதிகரித்து, கடன் வழங்கல் சொத்துப்பட்டியலிலான சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் 2009இல் குத்தகை வசதிகள் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வாடகைக் கொள்வனவு வசதிகள் 0.3 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்துக் காணப்பட்டன. மேலும், சந்தையிலான தற்போதைய மந்த நிலையின் காரணமாக, உண்மைச் சொத்துக்களுக்கெதிரான கடன்கள் 22.4 சதவீதத்தினால் ரூ.8.3 பில்லியனுக்கு ஒரு கணிசமான வீழ்ச்சியைக் காட்டின. இதனுடன் தொடர்புபட்ட வகையில், தமது சொத்துப் பட்டியலில் ஒரு உயர்ந்த சதவீதமான உண்மைச் சொத்துக்களைக் கொண்டிருந்த பதிவு செய்யப்பட நிதிக் கம்பனிகளினால் அத்தகைய சொத்துக்களை குறுங்காலத்தில் விற்க முடியாமையினால் பாரிய திரவத்தன்மை இடர்நேர்விற்கு உள்ளாகின. இதேவேளை அடகு வைத்தல் முற்பணங்கள் 36 சதவீதத்தினால் ரூ.7.5 பில்லியனுக்கு கணிசமானளவு அதிகரித்தது.

**இத்தொழில் துறையின் நிதித் தேவைப்பாடு முக்கிய மூலமாக பொது மக்களின் வைப்புக்கள் தொடர்ந்தும் காணப்பட்டன.** கடன்பாடுகளைப் பெற்றுக் கொள்வது அதிகளவு கடினமாக மாறியமையினால் மொத்த நிதியிடல் தேவையில் வைப்புப் பொறுப்புக்களின் ஒப்பீட்டளவிலான பங்கு முன்னைய ஆண்டில் 59 சதவீதத்திலிருந்து 65 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடப்படுகின்றது. இதன்படி மொத்த நிதியிடலில் வங்கிக் கடன்பாடுகளின் ஒப்பீட்டளவிலான பங்கு 2008 இறுதியில் 17 சதவீதத்திலிருந்து 2009 இறுதியில் 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. எனினும், வைப்புப் பொறுப்புக்களிலான வளர்ச்சி 2008இல் பதிவு செய்யப்பட்ட 32 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2009இல் 16 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. பொதுமக்களின் வைப்புக்களிற்கான வங்கி வட்டி வீதங்கள் கணிசமானளவு குறைக்கப்பட்டமையினால் ஆண்டில் இறுதிப் பகுதியில் உணரப்பட்ட வட்டி வீதங்களின் படிப்படியான வீழ்ச்சியினால் இத்துறை நன்மையடைந்தது. மேலும், சில பாரிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் பாரிய நட்டங்களைப் பதிவு செய்ததன் காரணமாக மொத்த நிதியிடலில் மூலவள நிதியங்களின் ஒப்பீட்டளவிலான பங்கும் முன்னைய ஆண்டின் 14 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2009இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் வியாபாரச் செயற்பாடுகள் மெதுவடைந்தமையினால் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் இலாபத் தன்மை தீவிரமாகப் பாதிப்படைந்தது.** வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் மீதான உயர்ந்த வட்டிச் செலவுகளுடன் கூடிய திரவத்தன்மை நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்காக பல பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தமது வியாபாரத்தின் அளவைக் குறைத்துக் கொண்டமையால் இத்துறை 2008இன் ரூ.2.3 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடுமிடத்து 2009 இறுதியில் ரூ.1.1 பில்லியன் வரிக்கு முந்திய நட்டத்தினைப் பதிவு செய்தது. இருந்தபோதிலும், துறைக்கான இலாபத்தன்மை ஒரு சில பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளிற்கேற்பட்ட நட்டங்களினால் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் சில பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அவற்றின் சிறப்பாகப் பின்பற்றப்பட்ட வியாபார நடைமுறைகள் மற்றும் சிறந்த கம்பனி ஆளுகையின் காரணமாக நெருக்கடியான காலப்பகுதியிலும் சிறப்பாகச் செயலாற்றின.

**அறிவிக்கப்பட்ட நட்டங்களின் காரணமாக, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறையின் மூலதன நிதியங்கள் கணிசமானளவு தேய்வடைந்தன.** துறையின் மூலதன நிதியங்கள் 2008 இறுதியில் ரூ.25 பில்லியனிலிருந்து ரூ.21 பில்லியனுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்துறை பொருளாதார மற்றும் எதிர்பாராத நெருக்கடி நிலைமைகளையும் அதிர்வுகள் உள்வாங்கிக் கொள்ளும் விதத்தில் சிறந்த முறையில் மூலதனமிடப்பட்டிருந்தமையினால் மூலதன நிதியங்களிலான தேய்விற்கு மாறாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறையின் ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதங்கள் தேவைப்படும் ஒதுக்கீடுகளற்ற மட்டங்களைவிட மேலாகவே தொடர்ந்துமிருந்தது. இதேவேளையில் இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மூலதன நிலைமைகளை உயர்த்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன் விளைவாக, 35 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் 27 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் ஆகக் குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடான ரூ.200 மில்லியனுடன் ஒத்திசைவாகக் காணப்பட்டதுடன் முதலீட்டாளர்களது நம்பிக்கை உயர்வடையுமொரு சூழலில் எஞ்சிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் குறுகிய காலத்தில் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கியின் தலையீடு, கடுமையான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வையினூடாக, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறையில் ஆற்றல் தன்மை, வினைத்திறன் மற்றும் உறுதித்தன்மை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.** இந்த வகையில் இத்துறையில் பொது மக்களின் நம்பிக்கையினை மீளப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான பல்வேறு படிமுறைகளை இலங்கை மத்திய வங்கி மேற்கொண்டது. அவையாவன, பாதிப்புக்குள்ளான நிதிக் கம்பனிகளுக்கு உதவுவதற்காக முகாமை செய்யும் முகவர்களை நியமித்தமை, மீட்சிச் செய்முறைத் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர் குழாமொன்றை நியமித்தமை, திரவத் தன்மைப் பிரச்சனைகளை எதிர்நோக்கிய பதிவு செய்யப்பட்ட

நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் ஆதரவளிக்குமொரு வழிமுறையாக நிதித் திட்டமிடல் அமைச்சுடன் இணைந்து 2009 ஏப்பிரலில் ஒரு விசேட ஊக்குவிப்புப் பொறியினை அறிமுகப்படுத்தியமை, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் இடையூறுகளின்றி தமது வழமையான வியாபாரத் தொழிற்பாடுகளை நடாத்துவதற்கு வங்கித் தொழில் நிறுவனங்களிடமிருந்து கொடுகடன் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கித் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள் தொடர்பாக ஒரு உத்தரவாதத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியமை போன்றவையாகும்.

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுடன் தொடர்புடைய ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.** பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை கம்பனியின் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் பொறுப்புடனும் வகைகூறும் தன்மையுடனும் காணப்படுவதற்காக நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையுடன் இணங்கியொழுகுமாறும் விதத்தில் கவனமாக கண்காணிக்கப்பட்டது. மேலும், பங்கு உடைமையை விரிவுபடுத்துவதற்காகவும் வெளிப்படைத் தன்மையை மேற்படுத்துவதற்காகவும் 2011 யூன் இறுதியளவில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தரவுச் செயற்றிறனையும் பூரணப்படுத்தப்பட்ட நிதியியல் தகவல்களின் கிடைப்பனவையும் மேம்படுத்துவதற்கும் 2009இன் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடு) பணிப்புரை விதிக்கப்பட்டது. மிகவும் முக்கியமாக அங்கீகாரமளிக்கப்படாத பங்குபற்றுனரது தவறான நடத்தையினால் எழுகின்ற நிதியியல் மோசடிகளை மேலும் தடுப்பதற்காக நிதிக்கம்பனிகள் சட்டத்திற்குப் பதிலாக நிதியியல் வியாபாரச் சட்டம் இயற்றப்படவுள்ளது. வரைவு நிதியியல் வியாபாரச் சட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கிய திருத்தங்கள் அதிகாரமில்லாது வைப்புக்களினை ஏற்பதனைத் தண்டனைக்குரிய குற்றமாக்குவது, வைப்புக்கள் என்ற பதத்திற்கான தெளிவான வரைவிலக்கணத்தை வழங்குவது, அதிகாரமளிக்கப்படாத நிதியியல்/ வைப்புக்களை ஏற்கும் வியாபாரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பரீட்சிப்புக்கள் மற்றும் விசாரணைகள் செய்வதற்கான அதிகாரத்தினை உயர்த்துவது, பொது மக்களுக்கான வெளிப்படுத்தலை மேம்படுத்துவது, கட்டாய வைப்புக் காப்புறுதி திட்டத்தினை நிறுவுவதற்கு நாணயச்சபைக்கு அதிகாரமளிப்பது போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

**அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரத்தினை நடத்துவதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாட்டின் நியதிகளில் அதிகாரமளிக்கப்படாமல் நிதியியல் வியாபாரத்தில் ஈடுபட்டதாக நம்பப்படுகின்ற நிறுவனங்களின் மீது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அதன் விசாரணைகளைத் தொடர்ந்துள்ளது.** ஒரு சில நபர்கள்/ நிறுவனங்கள் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரத்தில் ஈடுபட்டதாக நாணயச்சபை தீர்மானித்து அவற்றினை நிதிக் கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறும் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்கிடையில் பதிவதற்கு விண்ணப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டது. எனினும் இத்தகைய நபர்கள்/ நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பணிப்புரையுடன் இணங்கியொழுகத் தவறியமையினால் நிதிக் கம்பனிகள் சட்டத்தின்கீழ் தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**நீதிமன்ற செயல்முறைகளினூடாக தொடங்கப்பட்ட மீள்கொடுப்பனவுத் திட்டங்களுக்கு வசதியளிக்கப்பட்டது.** சில வைப்பாளர்கள்/ நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் (பல்வேறு வழிகளில் நிதிகளைத் திரட்டி அவற்றை முதலீட்டாளர்களுக்கு மீளச் செலுத்தத் தவறிய நிறுவனங்களின் வைப்பாளர்கள்/ முதலீட்டாளர்கள்) தமக்கு வரவேண்டியவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்காக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்தனர். அதற்கு பதிலிறுத்தும் வகையில், இத்தகைய முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உயர் நீதிமன்றம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு கட்டளையிட்டதுடன் அத்தகைய முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கி விசேட குழு அதன் நிருவாகத் தொழிற்பாட்டை மேற்கொள்வதற்கு வசதியளித்ததுடன் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மீள் கொள்வனவுத் திட்டங்களுடன் தொடர்புபட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் உதவி புரிந்தது.

### சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்

**மூலவள நிதிகளுக்குக் காணப்பட்ட இறுக்கமான சந்தை நிலைமை புதிய கடன்களுக்கான ஒட்டுமொத்தக் கேள்வி வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் காரணமாக பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களின் நடவடிக்கைகள் மிதமடைந்தன.** 2008இல் இறுதியளவில் 2000ஆம் ஆண்டு 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் 78 நிதிக் குத்தகை நிறுவனங்கள் காணப்பட்டதுடன் இந்த எண்ணிக்கை 19 உரிமம் பெற்ற வங்கிகள், 34 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் 21 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளை உள்ளடக்கி 2009இல் 74 ஆகக் குறைவடைந்தது. நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பன்னிரெண்டு மாதங்களுக்குள் நிதிக் குத்தகை வியாபாரத்தை ஆரம்பிக்கத் தவறியமையினால் நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் நான்கு உரிமம் பெற்ற வங்கிகளின் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டன. 2009இல் ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி நிதிக் கம்பனியாக நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2008இன் ரூ.110 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து இவ்வாண்டுக் காலப்பகுதியில் ரூ.112 பில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன. 2009இன் இறுதியளவின் வெளிநின்ற மொத்தக் கடன் வழங்கல்கள் 2008இன் ரூ.89 பில்லியனுக்கெதிராக 2009 இறுதியில் ரூ.80 பில்லியனாகக் காணப்பட்டது. இது முக்கியமாக சந்தையில் காணப்பட்ட உயர்ந்த வட்டி வீதத்தின் காரணமாக ஏற்பட்டது.

**கைத்தொழிலின் சொத்துக்கள் ஒரு சில கம்பனிகளில் குவிந்திருந்தன. 2009 திசெம்பர் இறுதியில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களில்**

**89 சதவீதமானவை 8 கம்பனிகளால் அறிக்கையிடப்பட்டிருந்தன.** இதனை குத்தகைச் சொத்துப்பட்டியல், கடன்பாடுகள் இரண்டிலும் அவதானிக்க முடியும். சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் முக்கியமாக தாழ்ந்த வருமானம் கொண்ட குழுக்கள் மற்றும் வங்கியிலிருந்து கொடுகடன் வசதிகள் இலகுவில் கிடைக்கப்பெறாத குறைந்த நம்பிக்கைத் தன்மையுடைய வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் முதன்மை வியாபாரங்களாக மொத்தக் கடன் வழங்கலில் 71 சதவீதத்திற்கு வகைகூறிய நிதிக் குத்தகைகளும் வாடகைக் கொள்வனவும் விளங்குகின்றன. மொத்தக் கடன் வழங்கலில் 33.9 சதவீதத்திற்கு வகை கூறிய வாடகைக் கொள்வனவு வசதிகள் 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் மொத்தக் கடன்வழங்கலில் 38.3 சதவீதத்திற்கு வகைகூறிய நிதிக் குத்தகைகள் 12.4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. நிதிக் குத்தகை மீதான கோரக்கூடிய உள்ளீட்டின் பெறுமதி சேர் வரி மீது உச்ச வரம்பு விதிக்கப்பட்டமை குத்தகை வசதிகளுக்கான கேள்வி குறைவடைவதற்கு வழிவகுத்தது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்பதற்கு அனுமதிக்கப்படாததால் படுகடன் கருவிகளை வழங்குவதன் மூலமும் வர்த்தக வங்கி கடன்களின் மூலமும் நிதிகளைத் திரட்டுவதிலேயே அவை பெருமளவில் தங்கியிருந்தன. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் வெளிநின்ற கடன்பாடுகள் 2008இல் ரூ.77 பில்லியனிலிருந்து 2009இல் ரூ.74 பில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் குறைவடைந்தன.

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் அவற்றின் முக்கிய வியாபாரங்களில் சாதகமான வட்டி இலாபங்களைக் கொண்டிருந்தமையினால் இலாபத் தன்மையில் ஒரு வளர்ச்சியை அனுமதித்தன.** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தேறிய தொழிற்பாட்டு இலாபங்கள் - 2008இல் ரூ.2.9 பில்லியனிலிருந்து 2009இல் ரூ.3.4 பில்லியனுக்கு 17.2 சதவீதத்தினால் அதிகரித்தது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் வட்டி வருவாய் 3.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் வட்டிச் செலவினங்களும் 10.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து தேறிய வட்டி வருவாயை அதிகரிக்கச் செய்தன. மேலும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கொடுகடன் தரம் தேய்வடைந்தமை செயற்படாக்கடன் விகிதம் 2008இன் இறுதியில் 4.8 சதவீதத்திலிருந்து 2009இறுதியில் 7.6 சதவீதத்திற்கு அதிகரித்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. 2009 காலப்பகுதியில், நிதிக் குத்தகைச் சட்டத்தின் நியதிகளில், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு ஊக்குவிப்புப் பொதி, கம்பனி ஆளுகை, பணிப்பாளர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்குமான கடன்வழங்கல் மற்றும் வியாபாரம் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான புதிய பணிப்புரைகள் வழங்கப்பட்டன. மேலும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் எதிர்நோக்கிய பாதகமான நிலைப்பாட்டினை வெற்றி கொள்வதற்கும் கைத்தொழிலினை வலுப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கி பல்வேறு கொள்கை வழிமுறைகளை பின்பற்றியது.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

### முதனிலை வணிகர்கள்

**ஆண்டின் பெரும்பாலான பகுதிகளில் அரச பிணையங்கள் சந்தையில் விளைவு வீதங்கள் குறைவடைந்ததால் 2009 காலப்பகுதியில் முதனிலை வணிகர்கள் தொழில்துறை சிறப்பாகச் செயலாற்றியது.** இத் தொழில்துறையின் மொத்த மூலதனம் ரூ.11 பில்லியனைப் பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டினைவிட 82 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். முதனிலை வணிகர்களின் மொத்தச் சொத்துப்பட்டியல் இவ்வாண்டில் 100 பில்லியன் கொண்ட சாதனை மட்டத்திற்கு அதிகரித்து 2009இன் இறுதியில் ரூ.94 பில்லியனாகவிருந்தது. 2008இல் முதனிலை வணிகர் துறையின் வரிக்கு முந்திய கணக்காய்வு செய்யப்பட்ட தேறிய இலாபங்கள் ரூ.7 பில்லியனை பதிவு செய்தது. இது கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வாகும். முதனிலை வணிகர் துறையின் நிதியியல் குறிகாட்டிகள் மிக வரவேற்கத்தக்கனவாக அமைந்து சொத்துக்கள் மீதான வருவாய் 7.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பங்கு மூலதனம் மீதான வருவாய் 79.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. 2008இல் இவை தொடர்பாக எண்தொகைகள் முறையே 20 சதவீதமாகவும் 26.6 சதவீதமாகவும் காணப்பட்டன. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை 22.4 சதவீதத்திலமைந்து மூலதனப் போதுமாந்தன்மை வீதத்தின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 8 சதவீதத்தினைவிட மிகவும் உயர்வாகக் காணப்பட்டது. முதனிலை வணிகர்களின் சந்தை இடர்நேர்வு நிலைமையினை மதிப்பிடுவதற்கான இடர்நேர்வுச் சந்தைக் கருவியாக பயன்படுத்தப்படும் அழுத்தப் பரீட்சிப்பு பகுப்பாய்வானது, வட்டி வீதம் 2009 இறுதியிலிருந்த அதன் மட்டத்திலிருந்து 100 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்படுமாயின் முதனிலை வணிகர் தொழில்துறை அதன் மூலதனத்தில் 7.6 சதவீதத்தினை இழந்திருக்கும் என்பதனைக் காட்டுகிறது.

**முதனிலை வணிகர்கள் தனியொரு உற்பத்திச் சந்தையில் தொழிற்படுவதனால் வியாபாரம் பன்முகப் படுத்தப்பட்டிருக்காமையின் காரணமாக முதனிலை வணிகர்களின் தொழில் குறிப்பிடத்தக்களவிற்கு சந்தை இடர்நேர்வுகளைக் கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது.** எனவே, முதனிலை வணிகர்கள் தமது நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதனை அனுமதிப்பதற்கு கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றிற்குத் தேவையான திருத்தங்களைக் கொண்டு வந்ததன் மூலம் ஆண்டின் பிற்பகுதியில் பன்பமுகப்படுத்தலின் முதற்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாவது சட்டத்தின் கீழ், முதனிலை வணிகர்கள் கட்டணத்தினை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபடவும் அவற்றின் சொந்தக் கம்பனிகளின் பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்களில் முதலீடு செய்யவும் முடிந்தது. இரண்டாவது சட்டத்தில், முதனிலை வணிகர்கள் மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கிணங்க விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகள், தொகுதிக் கடன்கள், முறிகள் அல்லது வர்த்தகப்பத்திரங்களில் முதலீடு செய்யவும் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனி முறிகள்/ தொகுதிக் கடன்களில் தரகர்களாக தொழிற்படவும் அனுமதிக்கப்பட்டனர். முதனிலை வணிகர் முறைமையின் பாதுகாப்பு, ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை மேம்படுத்தவும், முதனிலை வணிகர்கள் மூலதனத் தளர்த்தலைக் கட்டியெழுப்புவதற்குமாக ஆண்டிற்கான பெறப்பட்ட இலாபத்தில் (மீள் மதிப்பீட்டிற்கான இலாபத்தினைக் கழித்த பின்னர்) உயர்ந்த பட்சம் 50 சதவீதத்தினை பங்கிலாபமாக பிரகடனம் செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்துகின்ற பணிப்புரையொன்று முதனிலை வணிகர்களுக்கு விடுக்கப்பட்டது.

## சிறப்புக்குறிப்பு 15

## நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பு கருவியாக வைப்புக் காப்புறுதி

### பொதுநோக்கு

நிதியியல் நிறுவனங்கள் முறிவடைவதிலிருந்து சிறிய வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதும், இதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணுவதுமே வைப்புக் காப்புறுதியின் நோக்கமாகும்.

உலகளாவிய ரீதியில், நெருக்கடி முற்காப்பு மற்றும் நெருக்கடி முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான நிதியியல் பாதுகாப்பு வலையமைப்புக் கருவியாக வகிக்குமளவிற்கு வைப்புக் காப்புறுதி வளர்ச்சி கண்டுள்ளது. உலகளாவிய ஒருங்கிணைந்த நிதியியல் நோக்கில், நிதியியல் நெருக்கடி சங்கிலித் தொடரானதும், எதிர்வுகூற முடியாததும் ஆகும். பாதுகாப்பு வலையமைப்பு வடிவில் கட்டாய வைப்புக் காப்புறுதி, தனிப்பட்ட வங்கிகளின் முறிவடைவு, அது போல நிதியியல் நெருக்கடிக்கு இட்டுச் செல்லக்கூடிய முறைமையின் செயலிழப்பு என்பனவற்றை செயற்றிறனுடன் முகாமைப்படுத்தக்கூடியது என்பதனை உலகளாவிய அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன.

தற்போது, பல வடிவிலான வைப்புக் காப்புறுதி முறைமைகளை கிட்டத்தட்ட 100 நாடுகள் கொண்டுள்ளன. மேலும், 20 நாடுகள் வைப்புக் காப்புறுதியை செயல்முறைப்படுத்துவதிலோ அல்லது நடைமுறைப்படுத்துவது பற்றிய பரிசீலனையிலோ காணப்படுகின்றன. சில நாடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்கள் தொழிற்பாட்டிலுள்ளதுடன் சில நாடுகளில் ஒரு நாட்டுக்குக் கூடுதலான நாடுகளிலுள்ள வைப்புக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் திட்டங்கள் காணப்படுகின்றன.

### அநுகூலங்களும் பிரதிகூலங்களும்

#### அநுகூலங்கள்

*நிதியியல் உறுதிப்பாடு மற்றும் பொதுமக்கள் நம்பிக்கை:* வைப்புக்களின் பாதுகாப்பு மீதான பொதுமக்களின் நம்பிக்கையிலேயே நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு பெருமளவிற்குத் தங்கியுள்ளது. எனவே, பாதுகாப்பு வலையமைப்பாக வைப்புக் காப்புறுதித் திட்டமானது நிதியியல் நிறுவனங்கள் மீதான பொதுமக்கள் நம்பிக்கையைப் பாதுகாப்பதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்குப் பங்களிக்கின்றது. ஒரு பொருளாதாரத்திற்கு நிதியியல் நெருக்கடியின் பாரியளவிலான பொருளாதார மற்றும் இறைச் செலவு காரணமாக பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான தவிர்க்க முடியாத காரணியாக நிதியியல் முறைமை உறுதிப்பாடு உருவாகியுள்ளது.

*அரசாங்கத்தின் கடப்பாட்டைக் குறைத்தல்:* சமீபத்தில் மேற்கத்தைய பொருளாதாரங்களில் ஏற்பட்ட நிதி நெருக்கடி, அதன் பாரதூரமான தன்மையை மீளவும் உணர்த்தியுள்ளது. வைப்புக் காப்புறுதித் திட்டம் வைப்புக்களை திட்டவட்டமாகக் காப்புறுதி செய்வதால் இது வைப்பாளர்களுக்கான உள்ளார்ந்த நிச்சயமற்ற தன்மையை மட்டுப்படுத்தலாம்.

*நுகர்வோர் பாதுகாப்புப் பொறிமுறை:* நிதியியல் நிறுவனங்கள் முறிவடையும் போது, குறிப்பாக நிதியியல் சம்பந்தமான குறைந்த மற்றும் போலியான தன்மையைக் கொண்டுள்ள சிறிய வைப்பாளர்களை அவர்களுக்கு மீளச் செலுத்துவதன் மூலம் பாதுகாக்க முடியும்.

*சந்தை விழுமியங்களை முன்னேற்றல்:* பெரும்பாலான வைப்புக் காப்புறுதித் திட்டங்களில் சிறிய வைப்பாளர்கள் காப்பிடப்படுகிறார்கள் என்பது ஒரு பொதுவான பண்பாகும். இது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் நடவடிக்கைகளின் சீரிய தன்மை குறித்து பெருமளவு வைப்பாளர்களையும் கண்காணிக்க ஊக்குவிப்பதனால் சந்தை விழுமியங்கள் முன்னேற்றமடையும்.

#### பிரதிகூலங்கள்

*உளவியல் தீங்கு:* உளவியல் தீங்கு என்பது, வெளியக பாதுகாப்புக் கிடைக்கும் பட்சத்தில் கூடுதலான இடரை எதிர்கொள்ளும் நிலைக்குச் செல்லும் மனித நடத்தையையே குறிக்கின்றது. வைப்பாளர்கள் பாதுகாக்கப்படும் அளவிற்கு நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றத்தைக் கண்காணிப்பதில் குறைந்த செயலூக்கத்தையே கொண்டிருப்பதுடன் வைப்பாளர்கள் இடர்பாடுள்ள நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்படும் உயர் வட்டி வீதத்தில் வைப்புக்களைப் பேணும் மனப்பாங்கை தோற்றுவிக்கும். வைப்புக்கள், வைப்புக் காப்புறுதியால் பாதுகாக்கப்படுவதால் நிதியியல் நிறுவனங்களும் இடர்மிகு வாடிக்கையாளருக்குக் கடன் வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்யும்.

*பாதகமான தெரிவு:* தன்னிச்சையான பங்குபற்றுதல் இருக்குமிடத்து, அது வலுவில்லாத, இடர்மிகுந்த நிறுவனங்களும் முறைமையில் இணையக்கூடிய ஏதுநிலையைத் தோற்றுவிக்கும் என்பதனையே இது குறிக்கின்றது.

*வட்டிப் பரம்பலின் அதிகரிப்பு:* காப்புறுதிக் கட்டுப்பணத்திற்கான செலவினை வாடிக்கையாளர் மீது நிதியியல் நிறுவனங்கள் சுமத்த முடியும் என்பதனால், கடன் வழங்கும் வீதங்களை அதிகரித்தல் அல்லது வைப்பு வீதங்களைக் குறைதல் என்பவற்றினால் ஏற்படும் வட்டிப் பரம்பல் அதிகரிப்பானது நிதிப்பரிமாற்றல் செலவினை உயரச் செய்ய வழிகோலும்.

### வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் பொறிமுறை மற்றும் வகைகள்

#### வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் தொழிற்பாட்டிற்கான பொதுவான பொறிமுறைகள்

***காப்புறுதியிடக்கூடிய வைப்புக்கள்:*** தெரிவு செய்யப்பட்ட வகையான வைப்பாளர்கள் மட்டுமே காப்புறுதியிடப்படக் கூடியவர்களாவர். அரச வைப்புக்கள், முதலீட்டு வைப்புக்கள் மற்றும் உறுப்பினர் வைப்புக்கள் ஆகியன அடிக்கடி விலத்தலுக்குள்ளாகின்றன.

***கட்டுப்பண நிர்ணயம்:*** சமதள வீத கட்டுப்பணம் அல்லது

இடர்நேர்வு - அடிப்படையிலான கட்டுப்பணம் ஆகிய முறைகளில் காப்புறுதிக் கட்டுப்பணம் விதிக்கப்படலாம்.

- **சமதள வீத கட்டுப்பணம்** - உறுப்பினராகவுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் ஒரே வீதம் விதிக்கப்படுதல்
- **இடர்நேர்வு அடிப்படையிலான கட்டுப்பணம்** - உறுப்பினராக உள்ள நிறுவனத்தினது இடர்நேர்வுத் தன்மைக்கமைய கட்டுப்பணம் தீர்மானிக்கப்படும். உயர்ந்தளவிலான இடர்நேர்வுடைய நிறுவனம் உயர்ந்தளவிலான கட்டுப் பணத்தை செலுத்த வேண்டியிருக்கும்.

*இழப்பீடு வழங்குதல்:* இனங்காணப்பட்ட இடர்நேர்வு ஏற்படும் சந்தர்ப்பத்தில் வைப்பாளர்களுக்கு அதி கூடியளவு தொகை மீளளிக்கப்படும். நிறுவனங்களின் உரிமம் இரத்துச் செய்யப்படுதல் அல்லது இடைநிறுத்தப்படுதல் இடர்நேர்வு சம்பவங்களாகும்.

**வைப்புக்கான காப்புறுதித் திட்டத்தின் வகைகள்**

*கட்டாயமான குறுகிய வைப்புக் காப்புறுதித்திட்டம்:* ஒடுக்கப்படும் நேரத்தில் வைப்புக்கான "கொடுப்பனவுப் பெட்டி" யாகத் தொழிற்படும் வைப்பொன்றுக்கான காப்புறுதித் திட்டம், காப்புறுதியிடப்பட்ட நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களை ஒரு கீழெல்லை வரை வழங்கும்.

*கட்டாயமான விரிந்த வைப்புக்கான காப்புறுதித் திட்டம்:* கடன் தீராற்றலற்ற அல்லது கடன் தீராற்றலற்ற நிலைக்குச் செல்லக்கூடிய காப்புறுதியிடப்பட்ட நிறுவனங்களை அந்நிலையிலிருந்து மீட்கும் அல்லது மீளமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கண்காணித்தல், ஒழுங்குபடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வலுவுடைய வைப்புக்கான காப்புறுதித்திட்டம்.

**கட்டாயமான வைப்புக்கான காப்புறுதித் திட்டத்தினை அமுல்படுத்த இலங்கை முனைப்புக் காட்டுகின்றது**

இலங்கையில், 1987 இல் வங்கிகளாலும், கூட்டுறவுச் சங்கங்களாலும் தன்னிச்சையாகத் தொழிற்படுத்தப்பட்ட வைப்புக்கான காப்புறுதித் திட்டம் தற்போது செயலற்றுள்ளது. இருப்பினும், ஒரு கூட்டுறவு சங்கம் தவிர்ந்த ஏனையவையும் சில வங்கிகளும் ஆரம்ப ஆண்டுகளில் இத்திட்டத்தில் இணைந்தனவே தவிர, ஏனைய இயலுமையுடைய நிறுவனங்கள் இதனுடைய தன்னிச்சையான தன்மை காரணமாக இணைந்து கொள்ளவில்லை.

கட்டாயமான வைப்புக்கான காப்புறுதித் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, கட்டாய வைப்புக்கான காப்புறுதித் திட்டத்தினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொண்டுள்ளது. பாரதூரமான நிதியியல் நெருக்கடிகளிலிருந்து உரிமமுடைய அல்லது பதிவு செய்யப்பட்ட நிதிநிறுவனங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, உடனடியாக நிதி உதவி வழங்கக்கூடிய திரவத்தன்மை உதவித்திட்டம் ஒன்றினை உருவாக்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. இருப்பினும், முறைமை நெருக்கடிக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் பெரிய அளவிலான வைப்பு வெளிப்பாய்ச்சலைக் கையாளக்கூடிய போதுமான வளங்களை வைப்புக்கான காப்புறுதித் திட்டம் கொண்டிராதவிடத்து அரச உதவி நாடப்படலாம்.

## நம்பிக்கைக் கூறுகள்

**பங்குச் சந்தை நடவடிக்கைகள் அதிகரித்தமையின் காரணமாக நம்பிக்கைக்கூறு தொழில் துறையின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.** ஆண்டின் இறுதியில் 18 நம்பிக்கைக் கூறுகள் காணப்பட்டதுடன் இவற்றுள் 13 திறந்த நிதியங்களாகவும் 5 மூடிய நிதியங்களாகவும் காணப்பட்டன. இந்த நம்பிக்கைக் கூறுகளில் 6 வருவாய் நிதியங்களாகவும் 5 வளர்ச்சி நிதியங்களாகவும் 4 சமநிலைப்படுத்தப்பட்ட நிதியங்களாகவும் 2 பணச் சந்தை நிதியமாகவும் 1 சுட்டெண் நிதியமாகவும் காணப்பட்டன. 2009இல் ஏற்படுத்தப்பட்ட மூடிய நிலையில் நிலுவையிலுள்ள நிதியம் (நாமல் பங்குப் பெறுமதி நிதியம்) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டது. 2009 திசெம்பர் இறுதியில் கூறு நம்பிக்கைத் தொழில் துறையின் தேசிய சொத்துப் பெறுமதி 47 சதவீதத்தினால் ரூ.9.9 பில்லியனிற்கு அதிகரித்தமைக்கு முதலீடுகளின் பெறுமதி, குறிப்பாக பங்குகளின் விலைகள் மற்றும் அரச பிணையங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக உயர்வடைந்தமையே காரணமாகும். கூறு நம்பிக்கைகளில் முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் பங்குகள் மற்றும் அரச பிணையங்களின் பங்குகள் முறையே 61 சதவீதத்தினாலும் 27 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் மற்றைய நிலையான வருமானப் பிணையங்கள் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கூறு நம்பிக்கை உடமையாளர்களின் எண்ணிக்கை 23,117இற்கு சிறிதளவால் உயர்வடைந்த வேளையில் கூறுகளின் வழங்கப்பட்ட மொத்த எண்ணிக்கையும் 564 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. இவ்வாண்டுப் பகுதியில் பங்குகள் பரிவர்த்தனை ஆணைக்குழு கூறு நம்பிக்கைகளின் ஒழுங்குவிதிகளைப் பலப்படுத்தியது. முகாமைத்துவக் கம்பனிகளிலிருந்தான நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் சுதந்திரம், கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளுக்கான முதலீட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் நிதியியல் இயலாற்றல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவக் கம்பனிகளுக்கான நிதியியல் இயலாற்றல் என்பன தொடர்பான புதிய பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

**அட்டவணை 8.8 நம்பிக்கை கூற்றுத்துறையின் தெரிவுசெய்யப்பட்ட தரவுகள்**

| | 2006 | 2007 | 2008 | 2009(அ) |
|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (ரூபா.மில்) | 5,380 | 6,332 | 6,801 | 10,003 |
| தேறிய சொத்துப் பெறுமதி (ரூபா.மில்) | 5.353 | 6.295 | 6,781 | 9,952 |
| பங்கு மூலதன முதலீடு (ரூபா.மில்) | 3,691 | 3,649 | 2,589 | 6,036 |
| தேறிய சொத்து பெறுமதியின் சதவீதமாக பங்குகளின் முதலீடு | 69 | 58 | 38 | 61 |
| கூற்று உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கை | 23,424 | 23,191 | 22,699 | 23,117 |
| வழங்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை (மில்) | 356 | 470 | 638 | 564 |
| நம்பிக்கை கூறுகளின் எண்ணிக்கை | 13 | 14 | 17 | 18 |

(அ) தற்காலிகமானவை


மூலம் : இலங்கை நம்பிக்கை கூறுகளின் சங்கம் பிணையங்கள் மற்றும் பறிமாற்று ஆணைக்குழு

### காப்புறுதிக் கம்பனிகள்

**காப்புறுதித்துறை பதினெட்டு கம்பனிகளை உள்ளடக்கியிருப்பதுடன், இதில் பதினொரு கம்பனிகள் (நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் ஈடுபடுகின்ற கூட்டு காப்புறுதியாளராகவும்) விளங்கிய அதேவேளை ஐந்து கம்பனிகள் தனியே பொதுக் காப்புறுதியில் மாத்திரம் ஈடுபட்டுள்ளதுடன் இரண்டு கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மட்டும் நடாத்துகின்றன.** ஏழு கம்பனிகள் வெளிநாட்டு காப்புறுதிக் கம்பனிகளுடன் கூட்டு நடவடிக்கைகளை கொண்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, 43 காப்புறுதி தரகர்கள் பொதுக் காப்புறுதியிலும் 25,000 காப்புறுதி முகவர்கள் ஆயுள் காப்புறுதியிலும் ஈடுபடுகின்றனர். காப்புறுதிக் கைத்தொழில் இரண்டு பாரிய கம்பனிகளில் பெருமளவிற்கு குவிந்து காணப்படுவதுடன் இவ்விரு கம்பனிகளும் காப்புறுதித் துறையின் சொத்துக்களில் 65 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளையில் பாரிய சொத்து நிறுவனங்களான 5 நிறுவனங்கள் மொத்தக் காப்புறுதி சொத்துக்களில் 93 சதவீதத்திற்கு வகைகூறின. 2009இல் இரு புதிய கம்பனிகள் பதிவினைப் பெற்றுக் கொண்டன. காப்புறுதிக் கம்பனிகளில் மொத்தக் காப்புறுதிக் கட்டண வருமானம் முன்னைய ஆண்டின் 12 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு பொருளாதாரத்தின் மெதுவான வளர்ச்சியே காரணமாகும். பொதுக் காப்புறுதிக்கான கட்டண வருமானம் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், நீண்டகாலக் காப்புறுதிக்கான கட்டண வருமானம் 2 சதவீதத்தினால் அதிகரித்தது. பொதுக் காப்புறுதியில் பெரிய வகையான உந்து ஊர்திகளுக்கான காப்புறுதி 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பொதுக் காப்புறுதிக் கட்டணங்கள் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய பொறுப்பாகவிருந்தன. எனினும், காப்புறுதிக் கம்பனிகளின் முதலீட்டு வருமானம் 3 சதவீதத்தினால் அதிகரித்து காப்புறுதித் துறையின் நிதியியல் செயலாற்றத்தினை உயர்த்தியது. 2009 திசெம்பர் இறுதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.180 பில்லியனுக்கு 16 சதவீதத்தினால் அதிகரித்தன. காப்புறுதிக் கம்பனிகள் பொதுக் காப்புறுதி மீதான மொத்தக் கட்டணத்தில் ஏறத்தாழ 73 சதவீதத்தினை வைத்திருக்க கூடியதாக இருந்த வேளையில் பாரிய இழப்புக்களை உள்ளடக்கும் விதத்தில் 27 சதவீதத்தினை மீள் காப்புறுதிக் கட்டணமாக வைத்திருப்பதற்கு இசைவளிக்கப்பட்டது. மற்றைய வருவாய்களுடன் ஒப்பிடுகையில் உந்து ஊர்திகளுக்கான காப்புறுதி மிக உயர்ந்த வீதமாக 97 சதவீதத்தினை வைத்திருந்தது. இத் தொழில் துறையின் மொத்த கோரல் விகிதம் 2009இல் 62 சதவீதமாகவிருந்தது. பெரும்பான்மையான காப்புறுதிக் கம்பனிகள் பங்குகளின் கொள்வனவு மற்றும் பொதுவான இலாபம் இரண்டினையும் கொண்டிருந்தன.

**அரச பிணையங்களிலும், பங்குகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் வளர்ச்சியைப் பதிவு செய்தன. காப்புறுதிக் கம்பனிகளின் அரச பிணையங்களிலும், பங்குகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் 2009இல் முறையே 13 சதவீதத்தினாலும் 60 சதவீதத்தினாலும் அதிகரித்தன.** எனினும், அரச பிணையங்களின் பங்குகள் பொதுக் காப்புறுதிச் சொத்துக்களின் 27 சதவீதத்திற்கும் நீண்டகால காப்புறுதிச் சொத்துக்கள் 50 சதவீதத்திற்கும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் பங்குடமைகளிலுள்ள பங்குகள் பொதுக் காப்புறுதிச் சொத்துக்களில் 15 சதவீதத்திற்கும் நீண்டகால காப்புறுதிச் சொத்துக்களில் 11 சதவீதத்திற்கும் அதிகரித்தன. காப்புறுதிக் கம்பனிகள் பொதுக் காப்புறுதியில் குறைந்தபட்சம் 20 சதவீதம் கொண்ட தொழில்நுட்ப ஒதுக்குகளையும் அரச பிணையங்களில் 30 சதவீதம் கொண்ட நீண்டகால நிதியங்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்ற நியதி ஒதுக்குத்தேவைப்பாடுகளுக்கு காப்புறுதிக் கம்பனிகள் இணங்கி ஒழுகின.


வரைபடம் 8.2 காப்புறுதிக் கம்பனிகளின் திரண்ட தவணைப்பணம்




**காப்புறுதிக் கம்பனிகளும் கடன் தீராற்றல் அளவுத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்தன.** காப்புறுதிக் கம்பனிகளின் ஆற்றல்மிக்க தன்மையை அளவிடுகின்ற முக்கிய குறிகாட்டியாக கடன் தீராற்றல் அளவு காணப்படுகின்றது. காப்புறுதிக் கம்பனியின் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி இரண்டும் தொடர்பாக அனைத்து கம்பனிகளும் கடன் தீராற்றல் அளவு தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதிக்கான காப்புறுதிக் கம்பனிகளின் பொதுவான கடன் தீராற்றல் விகிதம், முன்னைய ஆண்டினைப் போன்றே 2009இலும் முறையே 4.8 ஆகவும் 2.8 ஆகவும் காணப்பட்டன. தொழிற்பாட்டிலுள்ள அனைத்து நீண்ட பொதுக் காப்புறுதியாளர்கள் அனைவரும் குறைந்தபட்ச கடன் தீராற்றல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

**இலங்கையின் யுத்த இடர்நேர்வு தரமிடல் பன்னாட்டு ஒப்புறுதிக் காப்புறுதியாளர்களினால் குறைக்கப்பட்டிருக்கின்றது.** இலண்டன் கூட்டு சரக்குக் குழு இடர்நேர்வு தரமிடல், 2009இன் அந்தஸ்து “கடுமை” இலிருந்து “உயர்விற்கு” மாற்றியதுடன், 3.4 சதவீதத்திலிருந்து 2.9 இற்கு குறைத்துக் கொண்டது. மேலும், வான் போர்/ தாக்குதல் மற்றும் வான் போர் இடர்நேர்வு என்பன நீக்கப்பட்ட வேளையில் கடல் மற்றும் தரை போர் தொடர்பான தாக்குதல் இடர்நேர்வுகள் தொடர்ந்தும் காணப்பட்டன. குறைவடைந்த யுத்த இடர்நேர்வு தரமிடல் இலங்கைக்கு இறக்குமதி செய்யபட்ட பொருட்களின் விலை குறைவடையக் காரணமாகியது. இதற்கு, இலங்கைக்கு பொருட்கள் கொண்டு வரும் கப்பல்கள் மீதான கட்டணம் குறைவடைந்தமையே காரணமாகும்.

வரைபடம் 8.3 காப்புறுதி கம்பனிகளின் சொத்து பரம்பல்




**காப்புறுதித் துறையுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.** முழுக் காப்புறுதித் தொழிற்துறையானது மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக காப்புறுதி தொழிற்துறை சட்டத்தின் ஒழுங்குவிதிகள் திருத்தியமைக்கபடவுள்ளன. காப்புறுதிக் கம்பனிகள், தரகர்கள் மற்றும் இழப்புக்களை சீர்செய்வோர் என்போருக்கு பணிப்புரைகளை விடுக்கும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்துநராக இலங்கைக் காப்புறுதிச் சபையின் அதிகாரங்கள் பூட்கையாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் விதத்தில் வலுப்படுத்தப்படும். இலங்கைக் காப்புறுதிச்சபை காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர்களுக்கான மூலதனத் தேவைப்பாடுகளைக் குறித்துரைத்தல் பிணக்குகளை நிர்ணயிப்பதிலும் தீர்ப்பதிலும் தீர்மானங்களை எடுப்பதற்கான ஒழுங்குவசதிகளை இயலாற்றவும், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர்களின் பணிப்பாளர் சபைக்கான "தகுதி மற்றும் பொருத்தம்" பற்றிய பிரமாணத்தினை விபரித்ததுமான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றைய திருத்தங்கள் காப்புறுதிக் கம்பனிகளின் முகவர்களாக நிறுவனங்களை நியமித்தல், ஏற்கனவே ஒன்றாக இயங்கும் காப்புறுதியாளர்களுக்கு வெவ்வேறு கம்பனிகளுக்காகப் பிரித்து கொள்வதற்கான கால அவகாசத்தினை வழங்குவதுடன் தனித்தனியாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதிகளை நடத்துவதற்கு கேட்டுக் கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. முன்மொழியப்பட்ட திருத்தங்கள் இறுதியாக்கப்பட்டு 2009இல் நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளிலுள்ள வைப்புக்கள் மற்றும் தங்கம் போன்ற புதிய முதலீட்டுக் கருவிகளை உள்ளடக்கும் விதத்தில் காப்புறுதிக் கம்பனிகளின் கடன் தீராற்றல் அளவு விதிகள் திருத்தப்பட்டன. காப்புறுதிக் கம்பனிகளுக்கு மூலதனப் போதுமைக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக் காப்புறுதிச் சபை நுண்பாக காப்புறுதிக்கான ஒழுங்குவிதிக்குரிய கட்டமைப்பொன்றினையும் தயாரித்துள்ளது.

## ஓய்வுகால நல நிதியங்கள்

**ஓய்வூதிய நிதிகள் துறை மொத்த நிதியியல் துறைச் சொத்துக்களில் ஏறத்தாழ 18 சதவீதத்திற்கு வகைகூறுகிறது. இத்துறை ஊ.சே. நிதியத்தினால் செல்வாக்கு செலுத்தப்படுவதுடன் ஓய்வூதிய நிதித் துறையின் சொத்துக்களில் 76 சதவீதத்திற்கும் வகைகூறுகிறது.** ஊழியர் சேமலாப நிதியம் தொழில் ஆணையாளரால் நிருவகிக்கப்படுகின்ற வேளையில் நிதியினை முகாமை செய்யும் கடப்பாடு மத்திய வங்கியின் நாணயச் சபைக்கிருக்கின்றது. ஊழியர் சேமலாப நிதியம் 12.7 மில்லியன் கணக்குகளைக் கொண்டிருப்பதுடன் இதில் ஏறத்தாழ 2.0 மில்லியன் பங்களிப்புச் செய்கின்ற செயற்படுகின்ற கணக்குகளாகும். வேறுபாட்டிற்கு சில அங்கத்தவர்கள் பல்வேறு கணக்குகளை கொண்டிருப்பதே முக்கிய காரணமாகும். ஊ.சே. நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2009 இறுதியில் ரூ.772 பில்லியனுக்கு 18 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்தப் பங்களிப்புக்கள் ரூ.49 பில்லியனால் 6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மீள்பெறுகைகள் 32 பில்லியனாகக் காணப்பட்டு 23 சதவீதம் அதிகரிப்புக்களை பதிவு செய்து தேறிய உட்பாய்ச்சலில் வீழ்ச்சியை எடுத்துக்காட்டியமைக்கு பொருளாதாரச் சரிவுகளின் காரணமாக தொழில் வாய்ப்புக்கள் மெதுவாக வளர்ச்சியடைந்தமையே காரணமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் 17.5 சதவீதத்தினால் ரூ.737 பில்லியனாக அதிகரித்தது. மொத்தச் சொத்துப்பட்டியலில் 97 சதவீதத்திற்கு வகை கூறிய அரச பிணையங்களை முதன்மையாகக் கொண்டிருந்த வேளையில் கம்பனிப் படுகடன் மற்றும் பங்குகளிலான முதலீடுகள் முறையே 1.1 சதவீதத்திற்கும் 1.3 சதவீதத்திற்கும் வகைகூறின. ஊ.சே. நிதியம் 2008இன் ரூ.79.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் ரூ.109.6 பில்லியனை மொத்த வருவாயாக உழைத்தது. 2009இற்காக

**அட்டவணை 8.9** **முக்கிய ஓய்வுகால நல நிதியங்களின் முக்கிய குறிக்காட்டிகள்**

| | ஊ.சே.நி | | ஊ.ந.நி | |
|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2008 | 2009 |
| கணக்குகளினுடைய எண்ணிக்கை (மில்) | 12.5 | 12.5 | 8.0 | 8.9 |
| இதில் : செயற்படும்கணக்குள் (%) | 18.4 | 18.4 | 26.3 | 23.7 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்வழங்குநரினுடைய எண்ணிக்கை | 62,625 | 60,000 | 58,446 | 61,237 |
| மொத்தப்பங்களிப்பு (ரூ.பில்) | 45.9 | 48.7 | 8.3 | 8.8 |
| மொத்த மீள்செலுத்துக்கைகள் (ரூ.பில்) | 25.9 | 31.9 | 4.9 | 6.4 |
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த வெளி நின்ற மீதி (ரூ.பிலஎள்) | 645.0 | 752.2 | 88.9 | 103.1 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்) | 655.4 | 772.0 | 92.4 | 107.3 |
| மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் (ரூ.பில்) | 627.2 | 737.1 | 87.3 | 101.2 |
| இதில் : அரச பினையங்கள் (%) | 96.9 | 97.1 | 90.0 | 91.1 |
| மொத்த வருமானம் (ரூ.பில்) | 79.5 | 109.6 | 11.5 | 14.5 |
| அங்கத்தவர் கணக்குகளுக்கு செலுத்தப்பட்ட வட்டிவீதம் (%) | 13.44 | 13.75 | 12.0 | 13.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி ஊழியர் நம்பிக்கை நிதிய சபை

அங்கத்தவர் நிலுவைகளுக்காக பிரகடனப்படுத்தப்பட்ட பயனுறு வீதம் 2008இன் 13.44 சதவீதத்திலிருந்து 2009இல் 13.75 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**தொழில்தருநர் பங்களிப்புச் செய்யும் ஓய்வு கால நலத்திட்டமான ஊழியர் நம்பிக்கை நிதியமும் ஓய்வு கால நிதியத்துறையில் ஏறத்தாழ 10 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் உயர்ந்த தேறிய பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருவாய்களுடன் அதன் சொத்துத் தளத்தில் ஒரு அதிகரிப்பை பதிவு செய்த வேளையில் தேறிய பங்களிப்புக்கள் வீழ்ச்சியடைந்தன.** நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் முகாமை செய்யப்படுகின்ற ஊழியர் நம்பிக்கை நிதியம் 8.9 மில்லியன் கணக்குகளையும் இதில் 2.1 மில்லியன் செயற்படும் கணக்குகளையும் கொண்டிருக்கின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த வெளிநின்ற உறுப்பினர் நிலுவை 2009 இறுதியில் 16 சதவீதத்தினால் ரூ.103 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்தப் பங்களிப்பு 5 சதவீதத்தினால் ரூ.8.8 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் கொடுப்பனவு செய்யப்பட்ட நன்மைகள் ரூ.6.4 பில்லியனுக்கு 31 சதவீதத்தினால் அதிகரித்து இவ்வாண்டில் நிதியங்களின் தேறிய வெளிப்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்தமையினை எடுத்துக்காட்டியது. 2009இல் ஊ.ந. நிதியத்தின் முதலீடு ரூ.101 பில்லியனுக்கு 16 சதவீதத்தினால் உயர்வடைந்தது. ஊ.ந. நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2009 இறுதியில் ரூ.107 பில்லியனாகக் காணப்பட்டது. ஊ.ந.நிதியத்தின் முதலீட்டுத் தோற்றப்பாடு ஊ.சே. நிதியத்தினை ஒத்ததாக இருந்ததுடன் அதன் முதலீட்டில் பெரும்பங்கு (91 சதவீதம்) அரச பிணையங்களில் காணப்பட்டது. பங்கு மற்றும் கம்பனி நிலையான வருவாய் பிணையங்களின் மீதான முதலீடு, மொத்த முதலீட்டில் முறையே 2.7 சதவீதமாகவும் 1.4 சதவீதமாகவும் காணப்பட்டன. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி வருவாய் இவ்வாண்டில் 13 சதவீதமாக இருந்தது.

**தொழிற் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுகின்ற தனியாரினால் முகாமைப்படுத்தப்படும் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வு நிதியத்தின் எண்ணிக்கை 171 ஆகவும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 157,453 ஆகவும் காணப்படுகின்றது.** தனியார் சேம நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.122 பில்லியன்களாகக் காணப்பட்ட வேளையில் 2009இல் முதலீடு ரூ.107 பில்லியன்களாகக் காணப்பட்டன. ஓய்வூதியத் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்படும் அரச பணி ஓய்வூதிய நிதியம் 2009 இறுதியில் 232, 779 தொழிற்படு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 2009 இல் பொதுப் பணி சேமநிதியத்தின் சொத்துக்கள் ரூ. 22.7 பில்லியனாக இருந்தது. இவ்வாண்டில் மொத்தப் பங்களிப்பும் மீளளிப்பும் முறையே ரூ.1.3 பில்லியனாகவும் ரூ.271 மில்லியனாகவும் விளங்கின.

## 8.4 நிதிச் சந்தைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை

**இவ்வாண்டின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறை இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அதிகரித்த பணவனுப்பல்கள் மற்றும் இலங்கை அரச பிணையங்களில் முதலீடுகளைத் தேடும் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் முதலீட்டாளர்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களுடன் குறிப்பிடத்தக்க மிகை நிலைக்கு மாறியது.** மத்திய வங்கி தொடர்ச்சியான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக சந்தையிலான திரவத்தன்மைப் பற்றாக்குறை பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழிமுறைகளை மேற்கொண்டது. இத்துடன், இக் காலப்பகுதியில் சந்தைக்கு கிட்டத்தட்ட ரூ.9 பில்லியன் பெறுமதியான திரவத்தன்மையை விடுவிப்பதற்காக நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 75 அடிப்படைப்புள்ளிகளால் குறைக்கப்பட்டது. எனினும், திரவத்தன்மை நிலை மிகைக்கு மாறியதுடன் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ரூ.22 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரி மிகையைப் பதிவு செய்தது. இதனால் வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணக் கொடுக்கல் வாங்கல்களின் நாளாந்தச் சராசரி அளவு இவ்வாண்டின் முதலரைப்பகுதியின் ரூ.11.7 பில்லியனிலிருந்து இரண்டாம் அரைப்பகுதியில் ரூ.5.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணக் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்த அளவு முன்னைய ஆண்டின் அளவிலிருந்து 2009இல் ரூ.8.5 பில்லியன் கொண்ட சராசரிக்கு அதிகரித்து சிறு மிகையைப் பதிவு செய்தது. செலாவணி வீதங்களிலான அளவுக்கதிகமான தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் உள்நாட்டுச் சந்தையில் அளவுக்கதிகமான வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையை ஈர்ப்பதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பு 2009இன் இரண்டாம் அரைப்பகுதியில் அதிகரித்த ரூபாச் சந்தைத் திரவத்தன்மைக்குப் பங்களிப்புச் செய்தது.

**இவ்வாண்டில் நாணயக் கொள்கையின் தளர்த்தல் மற்றும் சந்தையின் அதிகரித்த திரவத்தன்மை என்பனவற்றின் காரணமாக அழைப்புப் பணவீதங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன.** அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் இவ்வாண்டின் முதல் இரண்டு காலாண்டுகளிலும் 9.47 சதவீதம் - 15.54 சதவீத வீச்சுக்களுக்கிடையே காணப்பட்டன. தண்ட வீதத்தில் வழங்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 2009 ஏப்பிறலில் 19 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு படிப்படியாக குறைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி மீதான தண்ட வீதத்தினையும் அது போல் ஓரிரவுக்கான நேர்மாற்று

**அட்டவணை 8.10**

**பணச் சந்தை தொழிற்பாடுகள்
2007 - 2009**

ரூ. மில்லியன்

| | | அழைப்புப் பணச்சந்தை | முதலாம்தர திறைசேரி உண்டியல் சந்தை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கொள்வனவு செய்யப்பட்ட தொகை | | |
| | | நாளாந்த சராசரி அளவு | வழங்கப்பட்ட தொகை | மத்திய வங்கி | முதனிலை வணிகர்கள் | ஏனையவை (அ) |
| 2007 | 1ஆம் காலாண்டு | 7,555.3 | 141,804 | 35,051 | 89,069 | 17,684 |
| | 2ஆம் காலாண்டு | 6,274.1 | 239,165 | 78,726 | 98,530 | 61,909 |
| | 3ஆம் காலாண்டு | 7,220.8 | 212,007 | 68,138 | 94,253 | 49,616 |
| | 4ஆம் காலாண்டு | 7,592.4 | 224,212 | 40,946 | 106,606 | 76,660 |
| 2008 | 1ஆம் காலாண்டு | 6,295.2 | 201,330 | 8,156 | 92,186 | 100,988 |
| | 2ஆம் காலாண்டு | 6,208.7 | 212,181 | 17,139 | 78,232 | 116,810 |
| | 3ஆம் காலாண்டு | 5,579.0 | 164,368 | 10,262 | 57,746 | 96,360 |
| | 4ஆம் காலாண்டு | 9,657.8 | 201,697 | 148,170 | 24,432 | 29,095 |
| 2009 | 1ஆம் காலாண்டு | 12,422.9 | 209.988 | 73,967 | 66,848 | 69,173 |
| | 2ஆம் காலாண்டு | 8,014.2 | 202,922 | 58,250 | 106,400 | 38,272 |
| | 3ஆம் காலாண்டு | 5,761.3 | 230.451 | 36,835 | 128,218 | 65,398 |
| | 4ஆம் காலாண்டு | 4,628.1 | 177,850 | 21,274 | 114,691 | 41,885 |

(அ) தனிப்பட்ட இடமளிப்புகளினூடாக வழங்கப்பட்ட தொகைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

மீள்கொள்வனவு வசதி மீதான கட்டுப்பாடுகளையும் நீக்கியது. இதன் விளைவாக, வட்டிவீத அமைப்பு மீள அமைக்கப்பட்டதுடன் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் மத்திய வங்கியின் கொள்கை வீதத்தால் உருவாக்கப்பட்ட வட்டிவீத அமைப்பினுள் தளம்பலுற அனுமதிக்கப்பட்டதுடன் இது தளம்பலின் தாழ்ந்த மட்டத்தை எடுத்துக்காட்டுகிறது. மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கையின் தளர்த்தல் மற்றும் வங்கிகளுக்கிடையேயான சந்தையிலான அதிகரித்த திரவத்தன்மை இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அழைப்புச் சந்தை வீதங்களில் குறிப்பிடத்தக்க குறைவை ஏற்படுத்தின. இரண்டாம் அரைப்பகுதியிலான அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் 8.58 - 10.33 சதவீத வீச்சுக்களிடையே காணப்பட்டன.

**மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தேவைப்பட்ட வட்டிவீத பாதையுடன் சந்தை வட்டி வீதங்களை மீள ஒழுங்குபடுத்துவதின் கருவியாக அமைந்துள்ளன.** இரண்டாம் அரைப்பகுதியில் சந்தையிலுள்ள மிகையான திரவத்தன்மை சந்தை வட்டி வீதங்களின் சுமூகமான நடத்தைக்கு பாரிய சவாலை ஏற்படுத்தியது. இந் நிலைமை உள்நாட்டு ரூபாச் சந்தையில் அதிகரித்துச் செல்லும் திரவத்தன்மை மிகையின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு புதுமையானதும் மரபு ரீதியற்றதுமான வழிமுறைகளைத் தேவைப்படுத்தியது. இதன் விளைவாக, மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக மத்திய வங்கிப் பிணையங்களை வழங்கத் தொடங்கியது. ரூபாச் சந்தையில் அளவுக்கதிகமான திரவத்தன்மையை ஈர்ப்பதற்காகவும் குறுகிய கால வட்டி வீதங்களிலான தளம்பலை மட்டுப்படுத்துவதற்குமான கருவியாக மத்திய வங்கி வெளிநாட்டு செலாவணியின் சுவெப்ஸ் என அழைக்கப்படும் பரிமாற்றல் முறையொன்றினை அறிமுகப்படுத்தியது. 2009இன் பிற்பகுதியில் ரூபாச் சந்தையில் திரவத்தன்மை நிலைமை உயர்வாகக் காணப்பட்ட போதிலும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் மேற்கூறப்பட்ட கருவிகளின் உபாய ரீதியிலான தீவிரமான பின்பற்றல் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் குறுகிய கால வட்டி வீதங்களின் உறுதிப்பாட்டை பயனுறும் விதத்தில் பேணியது.

## உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தை

**ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் கூடியளவு உறுதிப்பாடு 2009இல் வெளிப்படையாகக் காணப்பட்டது.** இறக்குமதிக் கடப்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் காரணமாக செலாவணி வீதம் இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் பெறுமதியில் தேய்வடைந்த வேளையில், இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பெரும்பாலும் போர் முடிவுற்றமை மற்றும் இதனால் ஏற்பட்ட சாதகமான முதலீட்டாளர் மனோபாவம் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் பெறுமதி உயர்வடைந்தது. நாடு பெற்றுக்கொண்ட ப.நா. நிதிய துணைநில் ஒழுங்குமுறை வசதி மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த சிஎஉ ஒதுக்கீடு மற்றும் வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட அரச பிணையங்களிலான அதிகரித்த முதலீடுகளும் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை மேலும் கட்டியெழுப்புவதற்கு உதவியது. இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2009இல் 1.09 சதவீதத்தால் பெறுமதியில் தேய்வடைந்தது. யூரோ, இசுஸ்ரேலிங் பவுண் மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதித் தேய்வு வீதங்கள் முறையே 2.60 சதவீதமாகவும், 10.16 சதவீதமாகவும் 4.13 சதவீதமாகவும் விளங்கின. எனினும், இலங்கை ரூபா யப்பானிய யென்னுக்கெதிராக 0.89 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தது.

**2009இல் வங்கிகளுக்கிடையேயான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2008இன் ஐ.அ.டொலர் 14 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 11 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** வங்கிகளுக்கிடையேயான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்தச் சராசரிப் பெறுமதி 2008இன் ஐ.அ.டொலர் 59 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 45 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து 22 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது. வங்கிகளுக்கிடையேயான வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து இவ்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் மொத்தப் பெறுமதி சந்தைக்கான ஐ.அ.டொலர் 830 மில்லியன் கொண்ட மொத்த விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3.1 பில்லியனாக விளங்கி ஐ.அ.டொலர் 2.3 பில்லியன் கொண்ட தேறிய கொள்வனவை விளைவித்தது. 2003 இலிருந்து தேறிய கொள்வனவுகள் எதுவும் இடம்பெறவில்லை ஆதலால் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியை ஈர்த்தமை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

## அரச பிணையங்கள் சந்தை

**அரச பிணையங்கள் சந்தையின் விளைவு வீதங்கள் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் கீழ் நோக்கி நகர்ந்தது.** மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள், வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கம், குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புகள், முன்னேற்றமடைந்த திரவத்தன்மை மற்றும் அரச பிணையங்கள் சந்தையில் புதுப்பிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளரின் பங்கேற்பு என்பவற்றுடன் இணைந்து செல்லும் வகையில் திறைசேரி உண்டியல் முறிகளின் விளைவு வீதங்கள் மெச்சத்தக்க விதத்தில் வீழ்ச்சியடைந்தன. இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும்

முறிகள் மீதான விளைவு வீதங்கள் 550 இலிருந்து 990 வரையான அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீச்சால் வீழ்ச்சியடைந்தன. எனினும், இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் குறுகிய முடிவுப் பகுதியிலான விளைவு வீதங்கள் (3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 1 ஆண்டு) சிறிதளவால் அதிகரித்தன. சாதகமான சந்தை அபிவிருத்திகளின் நன்மையைக் கவனத்திற் கொண்டு புதிதாக 10 ஆண்டு திறைசேரி முறித் தொடர் வழங்கப்பட்டதன் மூலம் விளைவு வளையியை விரிவாக்கி நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்கள் நீண்ட காலப் பிணையங்களில் முதலிடுவதற்கு இயலச் செய்தது. பெரும்பாலும், குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களால் உந்தப்பட்ட திறைசேரி முறிச் சந்தையின் காரணமாக இரண்டாந்தரச் சந்தை வர்த்தகச் செயற்பாடுகள் அதிகரித்தன. அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடு 2009 மாச்சின் ரூ.3 பில்லியனிலிருந்து 2009 திசெம்பரில் ரூ.185 பில்லியனுக்கு கணிசமானளவில் அதிகரித்தன.

## கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை

### வர்த்தகப்பத்திரம்

**புதிய கொடுகடனுக்கான கேள்வி குறைவடைந்தமையின் காரணமாக வர்த்தகப்பத்திர சந்தையில் தாழ்ந்த மட்டத்திலான செயற்பாடு காணப்பட்டது.** வங்கிகளால் உத்தரவாதமளிக்கப்பட்டு வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களின் மொத்தப் பெறுமதி 2008இன் ரூ.23.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல். ரூ.21.5 பில்லியனாக விளங்கியது. வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் 17 இலிருந்து 36 சதவீதத்திலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 2009இல் 9 இலிருந்து 36 சதவீதத்திலான வீச்சினுள் மாறுபட்டது. 3 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான முதிர்வினைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் சந்தையின் 90 சதவீதத்திற்கு வகைகூறுகையில் 6 மாத முதிர்ச்சியைக் கொண்டதன் பங்கு 9 சதவீதமாக விளங்கியது. வர்த்தகப் பத்திரங்களின் வெளிநின்ற மொத்தத் தொகை 2008 இறுதியில் ரூ.4.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இறுதியில் ரூ.5.8 பில்லியனாக விளங்கியது.

### கம்பனி முறிகள்


**2009இல் கம்பனி முறிச் சந்தை சார்பு ரீதியில் செயலிழந்து காணப்பட்டது.** 2008இன் ரூ.6.8 பில்லியன் கொண்ட ஐந்து வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 2009இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்கள் மூலம் ரூ.1.1 பில்லியன் திரட்டப்பட்டது. செலான் வங்கி பிஎல்சி நிலையான வீதங்களிலும் (20.5 சதவீதம் மற்றும் 21.5 சதவீதம்) மிதக்கவிடப்பட்ட வீதங்களிலும் 5 ஆண்டு முதிர்ச்சிகளுக்காக ரூ.630 மில்லியனைத் திரட்டிய வேளையில் நேசன்றஸ்ற் பாங்க் பிஎல்சி 20.5 சதவீதம் கொண்ட நிலையான வீதத்தில் 4 ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட ரூ.500 மில்லியனைத் திரட்டியது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் படுகடன் வர்த்தகப்படுத்தல் முறைமையில் பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடனின் புரள்வு 2008இன் ரூ.103 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் ரூ.129 மில்லியனாக விளங்கியது. வட்டி வீதங்களிலான வீழ்ச்சி மற்றும் உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாட்டிலான மீட்சியுடன் கம்பனி முறிகளில் எதிர்காலத்தில் கூடிய செயற்பாடு எதிர்பார்க்கப்படுகிறது.

## பங்குச் சந்தை

**கொழும்பு பங்குச் சந்தை 2008இலும் 2007இலும் அனுபவித்த சவால்களை எதிர்கொண்டு வரலாற்றில் அதன் சிறந்த ஆண்டைப் பதிவு செய்தது.** இவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களில் ஓரளவு தளம்பலை அனுபவித்த பங்கு விலைச்சுட்டெண்கள் 2009 மேயிலிருந்து மேல் நோக்கி எழுச்சியுற்று போர் முடிவுற்றதைத் தொடர்ந்து வந்த சாதகமான சந்தை மனோபாவத்தையும் பிரதிபலிக்கிறது. பங்குச் சந்தையின் அபரிமிதச் செயலாற்றம் பணவீக்கத்திலான கூர்மையான வீழ்ச்சி, குறைந்த வட்டி வீதச் சூழல், பநாநி துணைநில் ஒழுங்குமுறையை உறுதி செய்வது முடிவடைந்தமை காரணமாக ஏற்பட்ட புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மை என்பவற்றாலும் ஏற்பட்டது. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 1991இல் 118 சதவீத அதிகரிப்பைக் கொண்ட முன்னைய சாதனையை முறியடித்து 2009இல் 125 சதவீதத்தால் அதிகரித்தது. (2008, 2007இல் முறையே 41 சதவீதம் மற்றும் 7 சதவீத வீழ்ச்சிக்கு முரணாக). 2009இல் கொழும்பு பங்குச் சந்தையிலான செயலாற்றம் புளூம்பேர்க் நியூஸ்வயரின் படி உலகில் செயலாற்றும் இரண்டாவது சிறந்த சந்தையாக ஏற்றுக்கொண்டது. மிலங்கா விலைச் சுட்டெண்ணும் 136 சதவீதத்தால் அதிகரித்து 2006 இலான 52 சதவீதம் கொண்ட முன்னைய சாதனையை விஞ்சியது. கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து இருபது துணைத் துறைகளின் விலைச் சுட்டெண்களும் இவ்வாண்டில் சாதகமான இலாபங்களைப் பதிவு செய்தன. 2009 இறுதியில் சந்தை மூலதனமாக்கல் நியதிகளில் ஆகக்கூடிய ஐந்து துணைத் துறைகளின் சுட்டெண்களாக பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள்; நிதியும் காப்புறுதியும்; தொலைத் தொடர்பூட்டல்; பானம், உணவு மற்றும் புகையிலை; சுற்றுலா விடுதிகள் மற்றும் பயணங்கள் முறையே 212 சதவீதம், 134 சதவீதம், 36 சதவீதம் 114 சதவீதம், 199 சதவீதம் என்பவற்றால் அதிகரித்தன. 2008 இறுதியில் 5.4 ஆக விளங்கிய சந்தை விலை வருவாயீட்டு விகிதம் 2009 இறுதியில் 16.5 சதவீதத்திற்கு மேல் நோக்கி நகர்ந்தது.

**சந்தை மூலதனமாக்கல் இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்ததுடன் ரூ.1 றில்லியன் இலக்கை அடைந்தது.** 2009இன் இறுதியில் கொழும்பு பங்குச் சந்தையின் சந்தை மூலதனமாக்கல் 2008இன் இறுதியிலான ரூ.489 பில்லியனிலிருந்து ரூ.1,092 பில்லியனுக்கு அதிகரித்ததுடன், இது நாட்டின் மொஉஉற்பத்தியின் 23 சதவீதமாகும். துறை வாரியான அமைப்பின் நியதிகளில் மொத்த சந்தை மூலதனமாக்கலில் பன்முகப்படுத்தப்பட்ட குழுமம் 22 சதவீதத்திற்கு வகைகூறுகையில் வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி, தொலைத் தொடர்பூட்டல் முறையே 18 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்கும் வகைகூறின. கொழும்பு பங்குச் சந்தையிலுள்ள மிகப் பெரிய பத்து கம்பனிகள் மொத்த சந்தை மூலதனமாக்கலின் 46 சதவீதத்திற்கு வகைகூறின. கொழும்பு பங்குச் சந்தை 2009இல் ரூ.142 பில்லியன் புரள்வை அடைந்ததன் மூலம் குறிப்பிட்ட ஆண்டொன்றில் ஆகக்கூடிய புரள்வையும் அடைந்தது. சராசரி நாளாந்தப் புரள்வு 2008இன் ரூ.465 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் ரூ.594 மில்லியனாகக் காணப்பட்டது. கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வில் உள்நாட்டு முதலீட்டாளர்கள் 69.5 சதவீதத்திற்கு வகைகூறுகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு 30.5 சதவீதமாகும்.

வரைபடம் 8.4 சராசரி நாளாந்த பங்குப் புரள்வும் சந்தை விலை உழைப்பு விகிதமும்




**சந்தையிலிருந்து முக்கியமான முதலீட்டாளர்கள் வெளிச் சென்றதுடன் தேறிய வெளிநாட்டுப்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் ஒன்றைப் பதிவு செய்தது.** மொத்த வெளிநாட்டுக் கொள்வனவுகள் மற்றும் வெளிநாட்டு விற்பனைகள் முறையே ரூ.43.1 பில்லியனாகவும், ரூ.43.8 பில்லியனாகவும் விளங்கி 2008இன் ரூ.13.9 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் 2009இல் ரூ.789 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலை விளைவித்தது. இது முக்கியமாக, அதன் முதலீடுகளை முடிவுறுத்திய வெளிநாட்டு நிதிய முகாமைக் கம்பனியால் பல பெறுமான வலுக் கம்பனிகளிலுள்ள கணிசமான உடமைகளின் விற்பனையால் ஏற்பட்டது. எனினும், இவ் விற்பனைகள் பாதகமான விலைத் தாக்கமின்றி உள்நாட்டு முதலீட்டாளர்களால் இலகுவாக ஈர்க்கப்பட்டன. 2009இல் பதினான்கு கம்பனிகளின் உரிமம் வழங்கல்கள், மூன்று ஆரம்ப பொதுப்பங்கு வழங்கல்கள் மூலம் முறையே ரூ.5 பில்லியன் மற்றும் ரூ.1.5 பில்லியன்

அட்டவணை 8.11 பங்குச்சந்தையின் செயலாற்றம்

| | 2008 | 2009 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (அ) | 1,503.0 | 3,385.6 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | -40.9 | 125.3 |
| மிலங்கா விலைச் சுட்டெண் (அ) | 1,631.3 | 3,849.4 |
| ஆண்டுக் ஆண்டு மாற்றம் (%) | -50.5 | 136.0 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்) (அ) | 488.8 | 1,092.1 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) | 11.0 | 22.6 |
| சந்தை விலை வருவாயீட்டு விகிதம் (அ) | 5.4 | 16.5 |
| சந்தை மூலதன வாக்கத்திற்கான மொத்த புரள்வு (%) | 22.6 | 13.0 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குளின் பெறுமதி (ரூ.மில்) | 110,454 | 142,463 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்) | 3,155 | 4,763 |
| வர்த்தகம் செய்த கம்பனிகளின் எண்ணிக்கை | 232 | 231 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 235 | 231 |
| அறிமுகம் செய்யப்பட்டவை (ஆ) | 1 | 0 |
| பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு | | |
| ஆரம்ப பொது வழங்கல்கள் /விற்பனைக்கான வழங்கல்கள் (ஆ) | 2 | 4 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 9 | 14 |
| உரிமை வழங்கல்களுடாக திரட்டப்பட்ட தொகை (ரூ.மில்) | 2,891 | 4,985 |

(அ) ஆண்டு முடிவில்
(ஆ) பதிவினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு 3 முறைகள் உள்ளன அதாவது பொதுமக்களுக்கான வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம் ஏற்கனவே உள்ள பங்குகளை பொது மக்களுக்கு வழங்ககின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளிகனை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல் என்பன.


மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

திரட்டப்பட்டது. இத்துடன், முதலாவது மூடிய முடிவுடனான கூறு நம்பிக்கை ரூ.500 மில்லியன் ஆரம்ப பொதுப்பங்கு வழங்கல் மூலம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது.

**இவ்வாண்டில் பல சந்தை விருத்தி வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடும் விதிகள் புதிய கம்பனிகள் சட்டத்திலிருந்து எழும் மாற்றங்களை உள்ளடக்கி 2009 ஏப்பிறலிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டன. கம்பனியொன்றின் பங்கு மற்றும் தொகுதிக்கடன்களைப் பட்டியலிடுவதற்கான தகைமைப் பிரமாணம் புதிய பட்டியலிடல்களை மேம்படுத்துவதற்கு திருத்தியமைக்கப்பட்டது. மூடிய முடிவுடனான நிதியங்களின் கூறுகள், பத்திர பங்கிலாபம், பங்குகளின் மீள்கொள்வனவு, மீட்புக்கள், சிறியளவில் பங்கு வைத்திருப்பவர்களிடமிருந்து அவற்றை வாங்குதல், பட்டியலிடப்பட்ட கம்பனிகளால் பொதுப்பங்கு வழங்கல் மூலம் மேலும் பங்குகளை வழங்கல் என்பவற்றைப் பட்டியலிடுவதற்கும் புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. உரிமம் வழங்கல்கள், ஒதுக்குகளின் மூலதனமாக்கல், பங்குப் பரிமாற்றல்கள் மற்றும் அதிகாரமளிக்கும் பத்திரங்கள் தொடர்பான விதிகளும் திருத்தியமைக்கப்பட்டன. சந்தைக்கு கம்பனி அறிவித்தல்கள் தகவலைப் பரப்புவதில் வினைத்திறனையும் பயனுறுதியையும் மேம்படுத்தும் பொருட்டு தகவல் பரப்பும் கொள்கையையும் கொழும்பு பங்குச் சந்தை விருத்தி செய்தது. இதனால், பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆளுகை அறிவித்தல்கள் மற்றும் நிதியியற் கூற்றுக்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வெப்தளத்தில் வெளியிடப்படுகிறது. ரூ.100 மில்லியனுக்கும் கூடுதலான கொடுக்கல்வாங்கல்கள் மீதான கொழும்பு பங்குச் சந்தை, மத்திய வைப்பக முறைமை மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுக் கட்டணங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல் செலவுகள் 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருப்பதுடன் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காக 0.1 சதவீதம் கொண்ட ஆகக் குறைந்த தரகுக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. மூடிய முடிவுடனான நிதியங்களிலான கொடுக்கல்வாங்கல்களுக்காக தனியான செலவின அமைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பங்கு சந்தையின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** சுட்டெண்ணில் வழமைக்கு மாறான அசைவு காணப்படும் போது “அமைதியளிக்கும்” காலப்பகுதியை வழங்கும் பொருட்டு முதல் நாள் முடிவிலிருந்து மிலங்கா விலைச் சுட்டெண் 5 சதவீதத்திற்கும் கூடுதலாக வீழ்ச்சியடையும் சம்பவத்தில் 30 நிமிடங்களுக்கு பங்குப் பிணையங்களின் வர்த்தகப்படுத்தலை நிறுத்துவதற்கு சந்தை தழுவிய சுட்டெண்ணிடப்பட்டதை அடிப்படையாகக் கொண்ட சுற்றோட்ட அலையை கொழும்பு பங்குச் சந்தை அறிமுகப்படுத்தியது. T + 3 இல் தீர்ப்பனவு இடம்பெறுவதால் பங்குகளை விற்பவர்கள் இணைத்தரப்பினரின் இடர்நேர்வுக்கு பாதிப்புக்குள்ளாவதால் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தினூடாக தீர்ப்பனவிற்கு உத்தரவாதமளிக்கும் கடப்பாட்டை மேற்கொள்வதற்கு தீர்ப்பனவு இல்லம் ஒன்றை நிறுவுவதற்கான செயற்றிட்டத்தை கொழும்பு பங்குச் சந்தை ஆரம்பித்தது. சந்தையில் நிலவும் சொத்துக் கட்டுப்பாட்டு இடர்நேர்வைத் தீர்ப்பதற்கு வழங்கல் எதிர் கொடுப்பனவு பொறிமுறையும் அறிமுகப்படுத்தப்படும். வழங்கல் எதிர்

வரைபடம் 8.5 கொழும்பு பங்குபரிவர்த்தனையில் தேறிய வெளிநாட்டு கொள்வனவுகள்




கொடுப்பனவு முறைமையின் கீழ் தீர்ப்பனவு நாள் வரை பிணையங்கள் விற்பவர்களிடமே தொடர்ந்திருக்கும் என்பதுடன் நிதியங்கள் பெறப்படுவதைப் பொறுத்து தீர்ப்பனவு நாளன்று மட்டும் வாங்குநரால் வழங்கப்படும். பல்புடை தீர்ப்பனவு வங்கி முறைமையின் நடைமுறைப்படுத்தல் மூலம் கொழும்பு பங்குச் சந்தையில் இரண்டாந்தரச் சந்தை கொடுக்கல்வாங்கல்களில் உள்ளக - பங்கேற்பவரின் தீர்ப்பனவுக்கான தனியான தீர்ப்பனவு வங்கியின் இடர்நேர்வு குறைக்கப்பட்டது. மத்திய வைப்பக முறைமை, இதன் தீர்ப்பனவு வங்கிகளாகத் தொழிற்படுவதற்கு நான்கு வங்கிகளை நியமித்தது.

**மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்காக பிணையங்கள் சந்தையின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு வலுவாக்கப்பட்டது.** பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு கொழும்பு பங்குச் சந்தையின் ஒழுங்குமுறைப்படுத்துபவராகவும் பிரதான பிணையங்கள் சந்தை ஒழுங்குமுறைப்படுத்துனராகவும் விளங்குகிறது. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆளணிச் சட்டம் அரச மற்றும் தனியார் துறை நலன்களின் சமஅளவிலான பிரதிநிதித்துவத்தை அடையும் பொருட்டு தனியார் துறை பிரதிநிதித்துவத்தின் அளவை அதிகரிப்பதற்கு ஆணைக்குழுச் சபையின் உள்ளடக்கத்திற்கான மாற்றங்களையும் உள்ளடக்கும் விதத்தில் திருத்தப்பட்டது. அதிகாரமளித்தல் தொடர்பான ஏனைய திருத்தங்கள் முதலீட்டாளர்களின் நன்மைகளைப் பாதுகாக்கும் மற்றும் மூலதனச் சந்தையில் தொழில்சார் நியமங்கள் பேணப்படுதலை உறுதிப்படுத்தும் மற்றும் எதிர்காலக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தெரிவுகள் போன்ற பெறுதிகளின் ஒழுங்குமுறைகளை வசதிப்படுத்தலை, பட்டியலிடப்பட்ட பொதுக்கம்பனிகளுக்கு நெறிப்படுத்தல்களை வழங்குவதை உள்ளடக்குகிறது. சொத்துக்களால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் ஒழுங்குவிதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பிணையமயப்படுத்தல், சிறப்பு நோக்கத்திற்கான நிறுவனங்களுக்கு சொத்துக்களை மாற்றுதல் மற்றும் சிறப்பு நோக்கத்திற்கான நிறுவனத்தினால் சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்களை வழங்குதல் ஆகிய சிறப்பு நோக்கத்திற்கான நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்ட கட்டமைப்பை உத்தேசிக்கப்பட்ட புதிய சட்டம் வழங்குகிறது. ஆரம்பகர்த்தா மற்றும் நம்பிக்கையாளர் போன்ற பிணையமயமாக்கல் கொடுக்கல்வாங்கல்களில் பங்கேற்கும் நபர்களை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இக் கொடுக்கல்வாங்கல்களில் வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை ஊக்குவிப்பதற்குமான பொருத்தமான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்

## 8.5 அபிவிருத்தி நிதியும் நிதியின் கிடைப்பனவும்

**2009இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இரண்டினதும் கிளை வலையமைப்பினுடைய விரிவாக்கத்துடன் வங்கியியல் துறையின் செயற்பரப்பு முன்னேற்றமடைந்தது.** மேல் மாகாணத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையில் குறிப்பிட்டளவு அதிகரிப்பு இருந்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் திறக்கப்பட்ட 49 புதிய வங்கிக் கிளைகளினுள் 38 மேல் மாகாணத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 49 புதிய வங்கிக் கிளைகளினுள், கிழக்கு மாகாணத்தில் 17 கிளைகள் திறக்கப்பட்ட வேளையில் வட மாகாணத்தில் 10 கிளைகள் திறக்கப்பட்டன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைப் பொறுத்தவரை இவ்வாண்டில் திறக்கப்பட்ட 17 புதிய கிளைகளினுள் மேல் மாகாணத்தினுள் ஒரு கிளை மட்டும் திறக்கப்பட்டது. மேலும், பிரதான வங்கி கிளைகளிற்கு வசதியளிப்பதை நோக்காகக் கொண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் திறக்கப்பட்டுள்ள 45 விரிவாக்க அலுவலகங்களினுள் 41 மேல் மாகாணத்திற்கு வெளியே நிறுவப்பட்டுள்ளன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் 23 புதிய விரிவாக்க அலுவலகங்களை திறந்தது. மேல் மாகாணத்திற்கு வெளியே பெரும் எண்ணிக்கையான வங்கிக் கிளைகள் தொழிற்படுகின்றமை கடந்த காலத்திலும் பார்க்க விரைவான வீதத்தில் பிரதேசங்களில் நிதியியல் பணிகளிற்கான கேள்வி வளர்ச்சியடைந்து வருவதனை பிரதிபலிக்கின்றது.

**குறைந்து செல்கின்ற வட்டி வீதத்திற்கு இசைவாக, வேளாண்மைத் துறைக்கு உதவுதொகை அளிக்கப்பட்ட கடன் வழங்கலின் வினைத்திறனை பேணுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடன் 12 சதவீதத்திலிருந்து குறைப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்களிற்குரிய கடன் வழங்கல் வீதங்கள் கீழ் நோக்கி திருத்தப்பட்டன.** வட்டி வீதங்களின் குறைப்பு அக்கறை வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைகளில் புதிய முதலீடுகளை ஊக்கப்படுத்தி இருந்தது. இவை நாட்டினுடைய உணவு பாதுகாப்பை அடைதல், வேளாண்மையாளர்கள் வருமான மட்டங்களை உயர்த்துதல், சமுர்த்தியினுடைய வாழ்வாதாரம் போன்ற அரசாங்கத்தின் குறிக்கோளினை நிறைவேற்றும். இருப்பினும், வருட முடிவில் இந்த திருத்தங்கள் அறிவிக்கப்பட்டபடியால், இந்த நடவடிக்கையின் சாதகமான தாக்கம் 2010ஆம் ஆண்டின் வேளாண்மை நடவடிக்கையிலேயே பிரதிபலிக்கும்.

**அண்மைய கடந்த காலத்தில் வேளாண்மை துறையில் காணப்பட்ட செழிப்பான வளர்ச்சியுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அதிக வேளாண்மை மற்றும் அது சார்ந்த செயற்பாடுகளிற்கான நிதியங்களுக்கான கேள்வி கணிசமானளவில் அதிகரித்தது.** பயிர்ச் செய்கைக்கான புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழான கடனின் பகிர்ந்தளிப்பு, முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் பெரும்போகம் 2008/ 2009இல் 23.6 சதவீதத்தினால்

அதிகரித்து ரூ.1,943 மில்லியனை அடைந்தது. நெல்லுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் 60 சதவீதத்திற்கு மேல் பிரதிபலிக்கின்றது. வேளாண்மை பொருட்களின் விலைகளின் தளம்பலிற்கு எதிராக பாதுகாப்பதற்கு வேளாண்மையாளர்கள் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் நுழைவதற்கு ஆரம்பித்தனர். பெரும்போகம் 2008/ 2009 இற்கான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை உற்பத்தியினுடைய கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியானது முன்னைய ஆண்டின் ரூ.3,915 மில்லியனிலிருந்து ரூ.4,673 **மில்லியனிற்கு அதிகரித்த** வேளையில் சிறுபோகம் 2009 ஆனது ரூ.3,857 மில்லியனிலிருந்து ரூ.3,223 மில்லியனிற்கு குறைவடைந்தது. மேலும், வேளாண்மை செயற்பாடுகளை முன்னேற்றுதல், வேளாண்மை உற்பத்திகளை பதனிடல், விலங்கு வளர்ப்பு, வேளாண்மை மற்றும் அது சார்ந்த செயற்பாடுகள், வேளாண்மை அடிப்படையான மற்றும் வேளாண்மை தொடர்பான கைத்தொழில்கள் போன்றவற்றின் அபிவிருத்திக்கான உபகரணங்களின் கொள்வனவு, மிகச் சிறிய நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் அவற்றில் வழங்கல் முறைமைகளினை அபிவிருத்தி செய்தல், களஞ்சிய வசதிகளை அதிகரித்தல், பாதுகாக்கப்பட்ட வேளாண்மை, சேதனப் பண்ணை, சேதன பசளை உற்பத்தி மற்றும் வேளாண்மைக்கான விரிவாக்க பணிகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்கும் கிருசி நவோதய திட்டத்தின் கீழ் 8 சதவீத வட்டி வீதத்தில் கொடுகடன் வழங்கப்பட்டது.

**2008 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த வேளாண்மை கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டமானது 2009இலும் அதனுடைய செயற்பாடுகளைத் தொடர்ந்தது.** இத் திட்டமானது, சிறியளவு பாற்பண்ணைகளுக்கு 8 சதவீத சலுகை வீதத்தில் கடன்களை வழங்குகின்ற வேளையில் நாட்டில் பால் பதனிடும் கைத்தொழில்களிற்கு 12 சதவீத வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதன் மூலம் பாற்பண்ணை கைத்தொழிலின் பெறுமதி இணைப்பின் வழியான செயற்பாடுகளிற்கு நிதியிடுதல் மற்றும் நாட்டின் பால் உற்பத்தியை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டிருந்தது. வேளாண்மை மற்றும் கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ், 1,000 - 10,000 பாற்பண்ணை வேளாண்மையாளர்களிடமிருந்து பாற்பண்ணை உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் நுழைந்திருக்கின்ற வேளாண்மை பதனிடல் அலகுகளும் சலுகை நிபந்தனைகளில் நிதியிடுவதற்கு தகைமை வாய்ந்தவையாகும். 2009இல், முன்னைய ஆண்டின் செயற்பாட்டுடன் ஒப்பிடுகையில் ஒரு 14 சதவீத அதிகரிப்பை பிரதிபலிக்கக்கூடிய வகையில் தகைமை வாய்ந்த பெறுகையாளிற்கிடையில் ரூ.519.3 மில்லியனை பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்கள் வழங்கக் கூடியதாகவிருந்தது. ஒரு சலுகை வீதத்தை வழங்கி பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களிற்கு வசதியளிப்பதற்கு, இந்த திட்டத்தின் கீழ் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களிற்கு 6 சதவீதத்தில் வட்டி உதவுதொகைகளை அரசாங்கம் வழங்குகின்றது.

**இவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கியால் செயற்படுத்தப்படுகின்ற சிறப்புக் கொடுகடன் திட்டங்களின் கீழ் சலுகை வட்டி வீதங்களில் சிறிய நடுத்தரளவு முயற்சிகள் கடன்களை தொடர்ந்து பெறுகின்றன.** இவ்வாண்டில் கட்டடவாக்கத்துறை அபிவிருத்தி திட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்பு திருப்தியளிக்கக் கூடியதாக முன்னேற்றமடைந்தது. சுனாமியால் பாதிப்படைந்த சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சிகளின் புனரமைப்பிற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கி (ஒப்பந்தம் - பீ) இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் ரூ.605.5 மில்லியனாகவிருந்தது. இடைநேரத்தில் வியாபாரத்தை மீளவமைப்பதற்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மிகச் சிறிய, சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சிகளிற்கு உதவுவதை நோக்காகக் கொண்டு சுசகன கடன் திட்டமானது 2009இல் இதனுடைய செயற்பாடுகளை தொடர்ந்தது. 2009இல் சப்பிரகமுவ ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் சுழலும் நிதியம் திட்டம் மற்றும் மாத்தளை பிரதேச அபிவிருத்தி முன்னேற்ற நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத் திட்டம் என்பனவும் தொடர்பான மாவட்டங்களில் தொழிற்பாட்டில் இருந்தன. அந்தந்த மாவட்டங்களில் சிறிய நடுத்தரளவு முயற்சிகளிற்கான நிதியங்களை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் பண்ணை வேளாண்மையாளர்களின் வருமானத்தை உயர்த்துவதை இந்த இரு திட்டங்களும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

வறுமை ஒழிப்பிற்கான நிதி பகிர்ந்தளிப்பும் 2009 காலப்பகுதியிலும் தொடர்ந்து நடைபெற்றன. முன்னைய வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்டத்தின் கடன் மீள்பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நிதி செயற்றிட்ட சுழலும் நிதியம் திட்டமானது 2009இல் இதனுடைய செயற்பாடுகளை தொடர்ந்தது. நாடு முழுவதிலுமுள்ள மிகவும் பின்தங்கிய பிரதேச செயலக பிரிவுகளை வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்ட சுழலும் நிதியம் உள்ளடக்குகின்றது. 2009 சனவரியில் வறியவர்களின் வருமான மட்டத்தை முன்னேற்றுதல், வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளிற்காக கொடுகடனை வழங்குவதன் மூலம் அவர்களிற்கான முறைசார்ந்த நிதியியல் பணிகளில் ஈடுபடுவதை அதிகரித்தல் மற்றும் நன்மையாளர்களிற்கான வருமானம் உழைத்தல் மற்றும் திறமை அபிவிருத்தி சந்தர்ப்பங்களை அதிகரித்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரால் நிதியளிக்கப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II திட்டமானது இதனுடைய தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள அனைத்து மாவட்டங்கள் மற்றும் புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய 14 மாவட்டங்களை வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II உள்ளடக்குகின்றது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II ஆனது வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் சுழலும் நிதியத்துடன் இணைந்து நாடு முழுவதிலுமுள்ள வறியவர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றது.

**இலங்கை மத்திய வங்கி 2008இல் கிழக்கு மாகாணத்திற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கடன் திட்டங்களையும் வட மாகாணத்தினையும் அதேபோன்று வாழ்வாதார நடவடிக்கைகளை உத்வேகப்படுத்துவதற்கான திட்டங்களையும் தொடங்கியது.** வட மாகாணத்தில் தொழிற்படுகின்ற "வடக்கின் எழுச்சி" நிகழ்ச்சித்திட்டமானது, மாவட்டத்தின் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, மிகச் சிறிய மற்றும் சிறிய முயற்சிகள் மற்றும் வர்த்தகம் மற்றும் ஏனைய சுயதொழில் வாய்ப்பு செயற்றிட்டங்களில்

பொருளாதார செயற்பாடுகளை மீளமைப்பதற்காக நிதியியல் உதவிகளை வழங்குகின்றது. இந்த திட்டத்தின் கீழ் இந்த மாகாணத்தில் தொழிற்படுகின்ற பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் ஊடாக ஆண்டு 9 சதவீத சலுகை வீதத்தில் தகைமை வாய்ந்த கடனாளிகளிற்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு மொத்தத் தொகையான ரூ.3,000 மில்லியன்களை இலங்கை மத்திய வங்கி வழங்குகின்றது. அத்துடன் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து ஒரு கடனாளிக்கு உயர்ந்தபட்சம் ரூ.200,000 கடனை பெறுவதற்கு கடனாளி உரித்துடையவராவர். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மீள்குடியமர்த்தலின் பின்னர் அவர்களுடைய வாழ்வாதாரம் மற்றும் வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளை மீள் ஆரம்பிப்பதற்கு/ ஆரம்பிப்பதற்கு இந்த திட்டம் வசதிகளை வழங்குகின்றது. கிழக்கு மாகாணத்தில், ஏற்கனவேயிருக்கின்ற கடன் நிகழ்ச்சித்திட்டங்களிற்கு மேலாக, இந்த மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பொருளாதார செயற்பாடுகளை மீளவமைப்பதற்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து மீள்நிதியிடல் ஆதரவை பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினூடாக ஒரு சுழலும் நிதியம் கடன் திட்டமும் தொழிற்படவுள்ளது. இந்தத் திட்டமானது ஒரு கடனாளிக்கு ஆகக் கூடிய எல்லையாக ரூ.250,000 க்கு தகைமை வாய்ந்த கடன்களின் 100 சதவீதம் வரை மீள்நிதியிடல் வசதிகளை வழங்குகின்றது. தகைமை வாய்ந்த கடனாளிகளிற்கு ஆறுமாத சலுகைக் காலத்துடன் 9 சதவீத சலுகை வீதமும் கடன்களிற்கு வழங்கப்படுகின்றது.

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள்

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் எந்தவொரு நாட்டினதும் நிதியியல் உட்கட்டமைப்பின் அடிப்படைக் கூறுகளாகும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் முக்கிய தொழிற்பாட்டுச் சந்தையில் வியாபாரச் செயற்பாடுகளிலிருந்து எழும் நாணயப் பொறுப்புகளின் தீர்ப்பனவை வசதிப்படுத்துவதாகும்.** மிக முக்கியமாக, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை அடைவதில் நாணயக் கொள்கையின் பயனுறுதிமிக்க நடைமுறைப்படுத்தல் பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் ஆற்றலுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையைப் பேணுவதில் தங்கியுள்ளது. 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தால் இலங்கையில் கொடுப்பனவு, தீர்த்தல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளை நிறுவுவதற்கும் விருத்தி செய்வதற்குமான வழிகாட்டலையும் தலைமையையும் வழங்கும் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளைப் பலப்படுத்துவதற்கும் அதிலுள்ள இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் அதன் மூலம் நிதியியல் முறைமையின் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கி இவ்வாண்டில் மேலதிக வழிமுறைகளைப் பின்பற்றியது. அதேவேளை, தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தின் நவீனமயமாக்கம் மற்றும் கொடுப்பனவுகளின் அம் மாதிரியான பயன்படுத்துவோரின் விருப்பத்தேர்வு காரணமாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து விளங்கிய கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுக்காக கூடிய பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளை எடுத்தது. இலத்திரனியல் கொடுப்பனவுக் கருவிகள் தொடர்பான பொதுமக்கள் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கு முறைமைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது அவசியமாயிற்று.

### முறையியல் ரீதியில் முக்கியமான கொடுப்பனவு முறைமைகள்

**முறைமையில் பங்கேற்பவர் ஒருவர் அல்லது நிதியியல் கடப்பாடுகளை எதிர்கொள்வதில் செயலிழந்தால் ஏனைய பங்கேற்பாளர்களும் அவர்களின் கடப்பாடுகளை எதிர்கொள்ள முடியாமல் முறைமையில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மையையும் கொடுகடன் பிரச்சனைகளையும் உருவாக்குவதால் கொடுப்பனவு முறைமை முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.** இது, முழு நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக இருக்கலாம். இலங்கையில் இனங்காணப்பட்ட முறையியல் ரீதியில் முக்கியமான கொடுப்பனவு முறைகள் இரண்டு காணப்படுகின்றன. அவையாவன இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்படும் லங்கா செட்டில் முறைமை, லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டால் தொழிற்படுத்தப்படும் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை என்பனவாகும். இவை பன்னாட்டு நிதியியல் அடித்தள குறியீட்டு அளவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளாகும். 2003இல் லங்கா செட்டில் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமை நாட்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளின் அபிவிருத்தியில் குறிப்பிடப்பட்ட சாதனையாகும். இவ் அபிவிருத்தியுடன், அதேநேர மொத்த அடிப்படையில் உயர் பெறுமதியுடைய கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்யும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை, வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும் லங்கா செக்குயர் முறைமை ஆகிய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட இவ்விரு முறைமைகளும் தொழிற்பாட்டிற்கு வந்தன.

**பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கியால் முன் வைக்கப்பட்ட பன்னாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முக்கிய கோட்பாடுகளுக்கு இவ்விரு முறையியல் ரீதியிலான முக்கியமான கொடுப்பனவு முறைமைகள் பின்பற்றப்படுவதை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்து உறுதிப்படுத்தியது.** லங்கா செட்டில் முறைமை முறையியல் ரீதியில் முக்கிய கொடுப்பனவு முறைமைகளின் அனைத்து 10 முக்கியமான கோட்பாடுகளையும் அவதானிப்பதில் தொடர்ந்து நெருங்கிச் செயற்பட்டது. முறைமையிலுள்ள குறைபாடுள்ள துறைகளை மேம்படுத்தவதற்கு லங்கா செட்டில் முறைமையின் விதிகள் புதுப்பிக்கப்பட்டு 2009இல் வெளியிடப்பட்டது. நாளின் ஆரம்பத்தில் அல்லது குறித்துரைக்கப்பட்ட நேரங்களில் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியை வேண்டிக் கொள்ளும் தற்போதைய நடைமுறையிலிருந்து விலகி, பங்கேற்பாளரின் விருப்புடன் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி வழங்குவதை வசதிப்படுத்துவதற்கு மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முறைமைகளின் விதிகளைப் புதுப்பிக்கும் போது கடந்த ஐந்து ஆண்டுகளில் முறைமைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கல்,

அட்டவணை 8.12 காசல்லாத கொடுப்பனவு: கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பெறுமதியும்

| கொடுப்பனவு முறைமை | 2008(அ) | | 2009 (ஆ) | |
|---|---|---|---|---|
| | அளவு (000) | பெறுமதி (ரூ.பில்) | அளவு (000) | பெறுமதி (ரூ.பில்) |
| **பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமைகள்** | 229 | 25,131 | 233 | 33,155 |
| அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை | 229 | 25,131 | 233 | 33,155 |
| **சில்லறை பெறுமதிக் கொடுப்பனவு முறைகள்** | 77,084 | 5,221 | 73,748 | 5,009 |
| பிரதான காசோலைத் தீர்ப்பனவு முறைமை | 44,550 | 4,693 | 40,637 | 4,391 |
| ரூபா வரைவு தீர்ப்பனவு முறைமை | வி.கி | 1 | வி.கி | 1 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 7,846 | 236 | 9,034 | 279 |
| கொடுகடன் அட்டைகள் | 18,866 | 73 | 16,627 | 65 |
| வரவு அட்டைகள் | 2,174 | 6 | 3,309 | 11 |
| இணையத்தள வங்கித் தொழில் | 3,310 | 197 | 3,819 | 247 |
| தொலைப்பேசி வங்கித் தொழில் | 338 | 4 | 322 | 4 |
| அஞ்சல் சாதனங்கள் | வி.கி | 11 | வி.கி | 11 |
| **மொத்தம்** | 77,313 | 30,352 | 73,981 | 38,164 |
| **ஐ.அ. டொலர் காசோலைத் தீர்ப்பனவு முறைமை** | 71 | 26 | 60 | 20 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

லங்கா செட்டில் பங்கேற்பாளர்களுக்கான தெரிவுப் பிரமாணத்தைக் கூட்டுதல், எதிர்பாராத சம்பவங்கள் மற்றும் பிணக்கைத் தீர்க்கும் நடைமுறைகளை ஆவணப்படுத்தல் என்பன மீது கவனம் செலுத்தப்பட்டது. மேற்கூறியவற்றின் நடைமுறைப்படுத்தலுடன், பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட முறையியல் ரீதியில் முக்கியமான கொடுப்பனவு முறைகளின் அனைத்து 10 முக்கிய கோட்பாடுகளையும் லங்கா செட்டில் முறைமை நிறைவேற்றும்.

## அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை

**அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையானது வங்கிகளுக்கிடையிலான உயர் பெறுமதி கொண்டதும் நேர முக்கியத்துவம் வாய்ந்ததுமான இலங்கை ரூபா கொடுக்கல்வாங்கல்களை அதேநேர அடிப்படையில் தீர்ப்பனவு செய்கிறது.** இம் முறைமை காசல்லாத கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதியில் 87 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் நாட்டில் வங்கிகளுக்கிடையே நிதியங்களை மாற்றும் முக்கிய முறைமையாக தொடர்ந்து விளங்கியது. வங்கித்தொழில் சமூகத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைமையின் பயனுறுதியை இனங்காணும் விதத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2009இல் 32 சதவீதத்தால் அதிகரித்தது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச் சந்தை, அரச பிணையங்கள் சந்தை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை (ரூபாப் பிரிவு), திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்களின் அவசரக் கொடுப்பனவு, லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டால் தொழிற்படுத்தப்படும் தீர்ப்பனவு முறைமைகளின் கீழான தேறிய கடப்பாடுகளின் தீர்ப்பனவு தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்கிறது. முறைமையின் தொழிற்பாட்டுநராகவும் இறுதித் தீர்ப்பனவு அமைப்பாகவும் தொழிற்படும் இலங்கை மத்திய வங்கி முறைமையிலான கொடுக்கல்வாங்கல்களின் சுமூகமான தீர்ப்பனவை வசதிப்படுத்தும் பொருட்டு அரச பிணையங்களின் பிணைக்கெதிராக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்காக ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியைத் தொடர்ந்து வழங்கியது. பங்கேற்பாளர்களால் வேண்டிக் கொள்ளப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் நாளாந்தச் சராசரிப் பெறுமதி ரூ.11.3 பில்லியனாக விளங்கியதுடன் இதில் ரூ.7.9 பில்லியன் பங்கேற்பாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

## லங்கா செக்குயர் முறைமை

**லங்கா செக்குயர் முறைமை பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைமையையும் பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறைமையையும் கொண்டுள்ளது.** 2009 இறுதியில் லங்கா செக்குயரால் வைத்திருக்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ.2,140 பில்லியனாக விளங்கி வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 99.9 சதவீதத்திற்கு வகைகூறியது. இப் பத்திரங்களற்ற பிணையங்கள் ரூ.481 பில்லியன் திறைசேரி உண்டியல்களையும் ரூ.1,659 பில்லியன் திறைசேரி முறிகளையும் கொண்டுள்ளது. 2009 இறுதியில், லங்கா செக்குயர் கம்பனி அது போல் தனிப்பட்ட வாடிக்கையாளர்களை உள்ளடக்கி வணிகரின் நேரடி பங்கேற்பாளர்க;ளாக 64,680 கணக்குகளைப் பேணியது.

## காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை

**காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை, நாடு தழுவிய காசோலை தேறல் செய்யும் காலத்தை 10 நாட்களிலிருந்து ஒரு நாளுக்கு அதாவது T + 1 இற்குக் குறைப்பதன் மூலம் காசோலைத் தீர்ப்பனவின் வினைத்திறனை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது. (T என்பது தீர்ப்பனவுக்காக லங்கா கிளியர் காசோலையைப் பெறும் நாள் மற்றும் 1 என்பது அதையடுத்து வரும் வியாபார நாள்).** இலங்கை மத்திய வங்கி 2005இன் 28ஆம் இலக்க

கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் பிரிவு 44இன் நியதிகளில் 2007இல் வழங்கப்பட்ட பொதுவான பணிப்புரையை பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதியாகக் கடைப்பிடிப்பதைத் தொடர்ந்து கண்காணித்தது. T + 1 விதி நாடு முழுவதும் பின்பற்றப்படாததை அவதானித்த பின்பு கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் உச்ச அமைப்பான தேசிய கொடுப்பனவுச் சபை காசோலை தீர்ப்பனவு செயல்முறை தொடர்பாக வாடிக்கையாளரின் கரிசனையை அறிவிப்பதற்கும் பொதுமக்களின் பொது நோக்கைப் பெறுவதற்கும் காசோலை தேறல் செய்வது தொடர்பாக வாடிக்கையாளர் அளவீட்டை நடத்தத் தீர்மானித்தது.

2008இன் இறுதியில் காசோலைத் திரும்பல்களில் அதிகரித்துச் செல்லும் போக்கை அவதானித்த இலங்கை மத்திய வங்கி காசோலை திரும்பல்களைக் குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. காசோலைத் திரும்பல்கள் தொடர்பாக லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரப் பகுப்பாய்வானது கிளை மட்டத்தில் காசோலைத் திரும்பல்களைக் குறைப்பதற்கு வங்கிகள் பல நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், காசோலைத் திரும்பல்களில் 88 சதவீதம் தொடர்பான கணக்குகளில் போதியளவு நிதியங்கள் இல்லாததன் காரணமாக ஏற்பட்டதை வெளிப்படுத்தியது. இதன்படி, இலங்கை மத்தியவங்கி இவ் விடயத்தை புலன்விசாரணை செய்யுமாறும் கணக்குகளில் நிதியங்கள் இல்லாமையால் ஏற்படும் காசோலைத் திரும்பல்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறும் இலங்கை வங்கியாளர் சங்கத்தை அறிவுறுத்தியது. மேலதிகக் கட்டுப்பாடாக, 2010 சனவரியிலிருந்து நிதியங்கள் இல்லாமையால் திருப்பப்பட்ட காசோலைகளின் விபரங்களை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிவிக்குமாறு அனைத்து வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும் வங்கிகள்/ கிளைகளுக்கு பிரதிமைகளை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைச் சமாளிப்பதற்கும் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக எழும் முறைமை வழுக்களைக் குறைக்கும் குறிக்கோளுடன் காசோலை பிரதிமைப்படுத்தல் சுற்றுறோட்டக் குறைப்பு முறைமைக்காக இறுவட்டில் சமர்ப்பிப்பதை நடைமுறைப்படுத்துவதற்கு லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையுடன் தேவையான ஏற்பாடுகளை வங்கிகளுடன் மேற்கொண்டது.

### இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவுகள் முறைமை

**லங்கா கிளியரால் தொழிற்படுத்தப்படுகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவுகள் முறையானது வங்கிகளுக்கிடையேயான சில்லறைக் கொடுப்பனவு முறைக்கு வெளியேயானதாக இருக்குமிடத்து, கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இலத்திரனியல் சந்தை அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.** இம் முறைமை அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை மத்திய வங்கியாலும், வர்த்தக வங்கிகளாலும் மேற்கொள்ளப்படும் நிதியங்களின் நேரடியான மாற்றல்களை வசதிப்படுத்துகிறது. இம் முறைமையின் தொழிற்பாடுகள் இவ்வாண்டில் மேலும் விரிவடைந்து தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.279 பில்லியனுக்கு 18 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுகளைப் போலவே, இது பெரும்பாலும் இம் முறைமையூடாக செலுத்தப்பட்ட சம அளவுக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்பால் ஏற்பட்டது.

### கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

**இலங்கை மத்திய வங்கி கொடுப்பனவு முறையில் ஏற்படும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு தேவையான தணிக்கும் வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் மேற்பார்வைக் கட்டமைப்பைத் தொடர்ந்து பலப்படுத்துவதன் மூலம் கொடுப்பனவு முறைமையின் உறுதிப்பாடு, பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துகிறது.** இலங்கை மத்திய வங்கி 2009 யூலை 31இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகளை வழங்கியது. இவ் ஒழுங்குவிதியின் நோக்கம் கொடுப்பனவு அட்டைகளின் அனைத்துப் பணி வழங்குநர்களும் பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அவதானிப்பதை உறுதிப்படுத்தி கொடுப்பனவு அட்டைக் கைத்தொழிலின் பாதுகாப்பை அதிகரிப்பதன் மூலம் கடனட்டை இடர்நேர்வுகளையும் மோசடிகளையும் குறைத்து அட்டையை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியற் கொடுப்பனவுகளில் பொதுமக்கள் நம்பகத்தன்மையை அதிகரிப்பதாகும். கொடுப்பனவு அட்டைகளின் அனைத்துப் பணி வழங்குபவர்களும் கடன் அட்டைகள், பற்று அட்டைகள், விதிப்பனவு அட்டைகள் மற்றும் இலத்திரனியல் குறியீடு அல்லது கணக்கை அடையும் எந்தவொரு ஏனைய வழிமுறைகள் உள்ளிட்ட சாதனங்கள் உள்ளிட்ட பெறுமதி சேமிப்பிக்கப்பட்ட அட்டைகள் தொடர்பான வியாபாரத்தை நடத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெறல் வேண்டும்.

**நாட்டில் கொடுப்பனவுக் கைத்தொழில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் துறையில் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பின்பற்றியதன் மூலம் பாரிய வினைத் திறன்களுக்கு முன்னேறியதால் தகவல் பாதுகாப்பு மற்றும் இலத்திரனியல் மோசடியின் இடர்நேர்வுகளும் அதிகரித்துள்ளன.** எனவே, இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின் கீழ், நிதியியல் நிறுவனமொன்றிலிருந்து இன்னொன்றுக்கு இலத்திரனியல் கடத்தலின் போது பொதுமக்கள் நம்பத்தன்மை, தரவுச் செய்திகளின் நேர்மை மற்றும் நம்பகத்துன்மை, இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் பதிவுகள் அல்லது ஏனைய தொடர்பூட்டல்களை மேம்படுத்தும் குறிக்கோளுடன் “லங்காசைன்” என்ற வர்த்தக அடையாளப் பெயரின் கீழ் லங்கா கிளியர் இலங்கையின் முதலாவது சான்றுபடுத்தும் அதிகாரசபையை நிறுவியது.

**இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் லங்கா செட்டிலின் முறைமையின் தொழிற்பாட்டு வல்லமையை மேம்படுத்துவதற்கு லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்பவர்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களையும் அனர்த்த மீட்புத் தலத்தையும் மதிப்பிடுதல் 2009இல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.** லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு “சுவிப்ற்” என அழைக்கப்படும் உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பூட்டல் சங்கத்தின் வலையமைப்பான

சுவிப்ற்நெற் ஐ வழங்குவதும் சுவிப்ற் ஐ பயன்படுத்துவோருக்கு குறைந்த செலவில் முகாமைத்துவம் மற்றும் தரவு செயல்முறைப்படுத்தல் பணிகளை வழங்குவதற்கும் நிறுவப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் மற்றும் அனர்த்த மீட்புத் தலங்கள் 2009 இலும் மதிப்பிடப்பட்டதுடன் எந்தவொரு இடையூறுக்கும் வியாபாரத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அனர்த்த மீட்புத் தலங்களுக்கு வசதிகளை வழங்குவதற்காகவும் திருத்த வழிமுறைகள் விதந்துரைக்கப்பட்டன.

**வங்கிகளால் சமர்ப்பிக்கப்படும் அரையாண்டுக் கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம் வர்த்தக வங்கிகளால் T + 1 காசோலைத் தேறல் செய்யப்படுவதை இலங்கை மத்திய வங்கி கண்காணித்தது. மேலும், இலங்கை மத்திய வங்கி 2009இன் நாலாம் காலாண்டில் நாடு தழுவிய அளவீட்டை நடத்தியது.** அளவீட்டு மாதிரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த முழு நாட்டையும் உள்ளடக்கும் 100 நகரங்களிலிருந்து 1200 நடைமுறைக் கணக்கு வைப்பாளர்களைக் கொண்டிருந்தது. அளவீட்டின் புள்ளிவிபரப் பகுப்பாய்வு 2010 சனவரியில் இறுதிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையில் அனைத்து வங்கிகளும் T + 1 விதியை முழுமையாகப் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு சீர் செய்யும் வழிமுறைகள் எடுக்கப்படும்.

### கொடுகடன் தகவல்

**கொடுகடன் தகவல் பணியகம் கடன்பெறுநர்கள் பற்றிய கொடுகடன் தகவல் அறிக்கைகளை உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்குகிறது. கொடுகடன் தகவல் பணியகம் 2008இன் 817,887 அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 2009இல் 864,619 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது.** 2008இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய அதேநேர முறைமையான கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறைமை 4,000 இற்கும் கூடுதலான பதிவு செய்யப்பட்ட பயன்பாட்டாளர்களுக்கு அதிகரித்த பணியை வழங்கியது. தரவுத் தளம் கிட்டத்தட்ட 3 மில்லியன் கடன்பெறுநர்கள் மற்றும் 5 மில்லியன் கடன்கள் பற்றிய தகவலையும் உள்ளடக்கியிருந்தது. கொடுகடன் தகவல் பணியகம் 2009இல் நாளொன்றிற்கு சராசரியாக 4,400 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. அறிவித்த கொடுகடன் நிறுவனங்களின் எண்ணிக்கை 2009இல் 93ஆக விளங்கியது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் எந்தவொரு கிளைக்கூடாகவும் பணியகத்திலிருந்து "சுய விசாரணை கொடுகடன் அறிக்கை" அல்லது "i அறிக்கை" கேட்கும் எந்தவொரு தனியார் அல்லது நிறுவனத்திற்கு வசதி செய்யும் புதிய பணி 2009 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது.

**கொடுகடன் தகவல் பணியகத்தின் பணிகளை விரிவாக்குவதற்கும் அதன் செயற்பரப்பை மேம்படுத்துவதற்கும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** கொடுகடன் தகவல் பணியகம் அதன் பணியை பன்முகப்படுத்தப்பட்ட பயன்பாட்டாளர் குழுக்களுக்கும் காப்புறுதி மற்றும் தொலைத் தொடர்பூட்டல் போன்ற புதிய பொருளாதாரத் துறைகளுக்கும் விரிவுபடுத்தியது. கொடுகடன் தகவல் பணியகம் அதன் செயற்பாடுகளை கொடுகடன் தகவல் பணியகச் சாதனங்களுக்கும் (கொடுகடனைக் குறித்துவைத்தல்), நிதியல்லா கொடுகடன் வழங்கும் துறைகளை ஒருங்கிணைத்தல் (தொலைத் தொடர்பூட்டல் மற்றும் பொது வசதிகள்), பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல் பதிவேடுகளை ஏற்படுத்தல், கொடுகடன் அறிக்கையில் திரும்பிய காசோலைகளின் விபரங்களையும் கொடுகடன் தீர்மானத்தினை எடுப்பதற்கான புதிய கருவிகளையும் சாதனங்களையும் உள்ளடக்கல், கடன் அறவீடுகள், விண்ணப்பப் பத்திரம் செயல்முறைப்படுத்தல், பட்டியலிடப்பட்ட சொத்தின் மீளாய்வுகள் மற்றும் சந்தை/சாதன பகுப்பாய்வு என்பனவற்றுக்கும் விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்த்திருக்கிறது.

## அட்டவணை 16 முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் : 2009[1]

### உண்மைத்துறை

| | | |
|---|---|---|
| 01 சனவரி 2009 | - | மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வறுமையை ஒழிப்பதை நோக்காகக் கொண்ட வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் கட்டம் II இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 06 சனவரி 2009 | - | பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் சராசரியாக 4 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன. |
| 09 சனவரி 2009 | - | இலங்கை மின் சபையால் சுற்றுலா விடுதிகள் மற்றும் கைத்தொழில்களுக்கு அறவிடப்படும் எரிபொருள் சீராக்கத் தீர்வை 2009 சனவரியிலிருந்து நவெம்பர் வரையான காலப்பகுதிக்கு நீக்கப்பட்டது. |
| 15 பெப்புருவரி 2009 | - | நீர் கட்டணங்கள் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. |
| 01 யூலை 2009 | - | கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான மீள நிதியிடல் வசதிகளை விரிவாக்கும் பொருட்டு சுழலும் கடன் நிதியமொன்று உருவாக்கப்பட்டது. |
| 13 யூலை 2009 | - | வட மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்பும் பொருட்டு ஷவடக்கின் எழுச்சி' என்று பெயரிடப்பட்ட சிறப்பு அபிவிருத்திக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 14 யூலை 2009 | - | புதிய வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளை முன்னேற்றுவதன் மூலமும் ஏற்கனவேயிருக்கும் சிறிய அளவிலான உற்பத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதன் மூலமும் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள மக்களின் பொருளாதார உயர்வினை நோக்காகக் கொண்டு சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II ஆரம்பிக்கப்பட்டது. |
| 22 செத்தெம்பர் 2009 | - | பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் சராசரியாக 5.3 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. |
| 19 மார்ச் 2010 | - | நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான நிதியியல் வசதிகளை விரிவாக்கும் நோக்குடன் “சௌபாக்கிய” என்ற பெயரில் புதிய கடன் திட்டமொன்று இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது. |

### வெளிநாட்டுத்துறை

#### வர்த்தகமும் தீர்வையும்

| | | |
|---|---|---|
| 01 சனவரி 2009 | - | துறைமுக வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சில வகைப் பெற்றோலிய எண்ணெய்கள் மற்றும் பிட்டுமினஸ் கனிமங்களிலிருந்து பெறப்படும் எண்ணெய்கள், மசகெண்ணெய், சேதன இரசாயனங்கள், மருந்துகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வெளித்தள்ளும், வரையும், நெசவு நெய்யும், பின்னும், தைக்கும், அழுத்தும் இயந்திரங்கள் போன்றவற்றின் இறக்குமதி சலுகை துறைமுக, வானூர்தி நிலையத் தீர்வையாக 2 சதவீதம் விதிக்கப்பட்டது. |
| | - | அன்ரினயோ பிளாத்திக்கு மற்றும் இமுனோசப்பிரசிவ், வைரங்கள், இரத்தினக்கற்கள், வெள்ளி, தங்கம், பிளாற்றினம் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட வகைகள் துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| 21 சனவரி 2009 | - | பால்மா இறக்குமதியின் மீதான விசேட பண்டத்தீர்வை கிலோகிறாமொன்றுக்கு ரூ. 15 இலிருந்து கிலோகிறாமிற்கு ரூ.35 ஆக ஆறு மாத காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் அதிகரிக்கப்பட்டது. |
| 02 பெப்புருவரி | - | தெரிந்தெடுக்கப்பட்ட இயற்கை இறப்பர் இறக்குமதி மீதான செஸ்வரி கிலோகிறாமொன்றிற்கு ரூ. 25 இலிருந்து கிலோகிறாமிற்கு ரூ.30 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | தெரிவு செய்யப்பட்ட செயற்கை, கூட்டு மற்றும் ஏனைய வடிவத்திலான இறப்பர் இறக்குமதி மீதான செஸ்வரியானது கிலோகிறாமொன்றுக்கு ரூ.35 இலிருந்து ரூ. 40 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | தெரிவு செய்யப்பட்ட பிளாத்திக்கு வகைகளின் இறக்குமதி மீதான செஸ் வரி 30 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 30 இலிருந்து 30 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 50 இற்கு இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | தெரிவு செய்யப்பட்ட சில வகை மட்பாண்டத் தொட்டிகள், கழுவும் சிறு தொட்டிகள், கழுவும் சிறு தொட்டிகளின் மிதிப்புகள், குளியல் தொட்டிகள், பிடெற்றுகள், தண்ணீர்க் கக்கூஸ் தட்டுகள், நீர் அடிக்கும் சிற்றேன்ஸ்கள், சிறுநீர் கழிக்கும் பாத்திரங்களும் அவையொத்த சுகாதாரப் பாவனைக்கான இணைப்புக்களின் இறக்குமதி மீதான செஸ்வரியானது 30 சதவீதத்திற்கு அல்லது அலகொன்று ரூ. 300 இற்கு, இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு திருத்தப்பட்டது. |
| | - | சில வகைகளின் கண்ணாடிகளின் இறக்குமதி மீது 15 சதவீத செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - | பாதுகாப்பிற்கான கண்ணாடிகளின் இறக்குமதி மீது 5 சதவீத செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - | காலணியின் பாகங்கள் (வெளித்தோல் மற்றும் இறப்பர் அல்லது பிளாத்திக்கு குதிகள்) இறக்குமதி மீது 15 சதவீத அல்லது சோடியொன்றுக்கு ரூ. 50 ஆன செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| 04 பெப்புருவரி 2009 | - | பின்வரும் உணவுப் பண்டங்களின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது. |

[1]இது 2009ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது. 2010இன் முதல் மூன்று மாதகாலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட மற்றும் 2010இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும்கூட உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| | ○ நெத்தலிக்கருவாடு, பிற உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் கிலோகிராமொன்றுக்கு ரூ. 20 இலிருந்து கிலோகிராமொன்றிற்கு ரூ. 25 இற்கு<br>○ பட்டாணிக் கடலை மற்றும் கடலை கிலோகிராமொன்றுக்கு ரூ. 15 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூ. 25 இற்கு<br>○ பாசிப் பயறு கிலோகிராமொன்றுக்கு ரூ. 13 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூ. 15 இற்கு<br>○ மிளகாய்கள் (தூளாக்கப்படாத அல்லது அரைக்கப்படாத) கிலோமொன்றுக்கு ரூ.30 இலிருந்து கிலோக்கிராமொன்றுக்கு ரூ. 40 இற்கு<br>○ தூளாக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட மிளகாய் கிலோகிராமொன்றுக்கு ரூ. 40 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூ.50 இற்கு<br>○ தயாரிக்கப்பட்ட /பதப்படுத்தப்பட்ட சிலவகை மீன் கிலோகிராமொன்றுக்கு ரூ. 25 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூ. 40 இற்கு<br>- கோதுமைத் தானியத்தின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 15 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ.10 இற்கு, இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்குத் திருத்தப்பட்டது. |
| 18 பெப்புருவரி 2009 | - பெற்றோல் இறக்குமதியின் மீது ஏற்கனவேயிருக்கும் சுங்கத் தீர்வையான லீற்றருக்கு ரூ.35 இலிருந்து லீற்றருக்கு ரூ. 10 ஆக சுங்கத் தீர்வைச் சலுகை வழங்கப்பட்டது. |
| 21 பெப்புருவரி 2009 | - பாதணியின் பாகங்கள் (வெளித்தோல் மற்றும் இறப்பர் அல்லது பிளாத்திக்குக் குதிகள்) இறக்குமதி மீதான செஸ் வரி 15 சதவீதம் அல்லது சோடியொன்றுக்கு ரூ. 50 இலிருந்து 15 சதவீதத்திற்கு அல்லது சோடியொன்றுக்கு ரூ. 20 இற்கு இவற்றுள் எது உயர்வானதோ அவ் வீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 27 பெப்புருவரி 2009 | - பால்மா இறக்குமதிகள் மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிராமொன்றுக்கு ரூ. 35 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு<br>- ரூ. 55ஆக 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது. |
| 06 மார்ச் 2009 | - திணை தானியத்தின் இறக்குமதி மீது 35 சதவீத செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| 31 மார்ச் 2009 | - பால் மா இறக்குமதி மீதான கிலோகிராமொன்றுக்கு ரூ.55 ஆன விசேட பண்டத் தீர்வையானது நீக்கப்பட்டதுடன், 28 சதவீதத்திலான அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 125 இவற்றுள் எது உயர்வானதோ அந்த வீதத்திற்கு சுங்கத் தீர்வை மீள விதிக்கப்பட்டது. ஆயினும் பால் மா மீதான மொத்த மீளப் பெறத்தக்க வரிகள்/ தீர்வைகள் (சுங்கத் தீர்வை, துறைமுக வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி போன்றவை) கிலோகிராமொன்றுக்கு ரூ.125 ஆக இருத்தல் வேண்டும்.<br>- பின்வரும் உணவுப் பண்டங்களின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது.<br>○ நெத்தலிக்கருவாடுகள் கிலோகிராமொன்றுக்கு ரூ. 25 இலிருந்து ரூ. 30இற்கு<br>○ கடலை கிலோகிராமொன்றுக்கு ரூ. 25 இலிருந்து ரூ. 35இற்கு<br>○ பட்டாணிக்கடலை கிலோகிராமொன்றுக்கு ரூ. 25 இலிருந்து ரூ. 30இற்கு<br>○ முழு மைசூர் பருப்பு கிலோகிராமொன்றுக்கு ரூ. 4 இலிருந்து ரூ. 15இற்கு<br>○ உடைக்கப்பட்ட மைசூர் பருப்பு கிலோகிராமொன்றுக்கு ரூ. 6 இலிருந்து ரூ. 20இற்கு<br>○ சில வகை தயாரிக்கப்பட்ட அல்லது பதப்படுத்தப்பட்ட மீன் கிலோகிராமொன்றுக்கு ரூ. 40 இலிருந்து ரூ. 85இற்கு அதிகரிக்கப்பட்டது.<br>- சிலவகை சோள இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 2.5 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.<br>சிலவகை தரை ஓடுகளின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 28 சதவீதம் அல்லது ஒரு சதுர மீற்றருக்கு ரூ.100இலிருந்து<br>- 28 சதவீதத்திற்கு அல்லது ஒரு சதுர மீற்றருக்கு ரூ. 200 இற்கு இவற்றில் எது உயர்வானதோ அவ் வீதத்திற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது.<br>கோதுமை மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 15 சதவீதம் அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 12.50<br>- இலிருந்து 15 சதவீதத்திற்கு அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 16 இற்கு, இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 03 ஏப்பிறல் 2009 | - சில வகை ஈருருளிகளின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 28 சதவீதம் அல்லது அலகொன்றுக்கு ரூ. 750 இலிருந்து 28 சதவீதத்திற்கு அல்லது அலகொன்றுக்கு ரூ. 1500இற்கு இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.<br>- வைப்பர் இன மிளகு மற்றும் சில வகை சாதிக்காய் இறக்குமதி மீது 10 சதவீதமான செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது.<br>- குடிபானங்களைத் தயாரிக்கும்போது பிரித்தெடுக்கக்கூடிய அடிப்படையிலான மோல்ட் இறக்குமதி மீது 5 சதவீதமான அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 110 இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது.<br>- ஆயுர்வேத/ மூலிகைத் தயாரிப்புக்களின் இறக்குமதி மீதான செஸ்வரியானது 35 சதவீதம் அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 200 இலிருந்து 35 சதவீதத்திற்கு அல்லது கிறாமொன்றுக்கு ரூ. 2 இற்கு இவற்றுள் உயர்வான வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.<br>- பொலிகாபனேற்றுக்களின் இறக்குமதி மீதான செஸ்வரியானது 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.<br>- சிலவகை செயற்கை மற்றும் கூட்டு இறப்பர் இறக்குமதி மீதான செஸ் வரியானது கிலோகிராமொன்றுக்கு ரூ. 40 இலிருந்து |

| | |
|---|---|
| | கிலோகிறாமொன்றுக்கு ரூ. 15 இற்குக் குறைக்கப்பட்டது. |
| | - தெரிவு செய்யப்பட்ட சில வகை மட்பாண்டத் தொட்டிகள், கழுவும் சிறுதொட்டிகள், கழுவும் சிறுதொட்டிகளின் மிதிப்புகள், குளியல் தொட்டிகள், பிடெற்றுகள், தண்ணீர் கக்கூஸ் தட்டுகள், நீர் அடிக்கும் சிற்றேன்ஸ்கள், சிறுநீர் கழிக்கும் பாத்திரங்களும், அவையொத்த சுகாதாரப் பாவனைக்கான இணைப்புக்கள் என்பவற்றின் இறக்குமதி மீதான செஸ் வரியானது 30 சதவீதம் அல்லது அலகொன்றுக்கு ரூ. 300 இலிருந்து 30 சதவீதத்திற்கு அல்லது அலகொன்றுக்கு ரூ. 600 இற்கு, இவற்றுள் உயர்வான வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - இரும்பு அல்லது உலோகமல்லா உருக்கினால் செய்யப்பட்ட ஓரளவு பூர்த்தியாக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூ.10 ஆன செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - அலுமினியச் சட்டங்கள், கம்பித் துண்டங்கள் மற்றும் பக்கப் பார்வை வடிவங்களின் இறக்குமதி மீது 5 சதவீதமான செஸ்வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - அடிப்படை உலோகத்திலான சில வகைப் பொருட்கள் (கொழுக்கிகள், கண்ணுருளைகள், கண்துளைகள், கயிற்றுத்துளைக் கண்கள் குறித்தட்டுக்கள், பெயர்த்தட்டுக்கள், சோடா மூடிகள், மூட்டைகளை சீல் இடுவதற்கான இரும்பினால் அல்லது உருக்கினால் ஆன ஒட்டு இணைப்புக்கள்) என்பனவற்றின் இறக்குமதி மீதான செஸ்வரியானது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 30 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூ. 50இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - மின்பிரிப்பிகள் உள்ளிட்ட மின் தொகுப்பான்களின் இறக்குமதி மீதான செஸ்வரியானது 2 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்தற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - ஒளியில் ஊடகம் பதிவு செய்யும் தட்டுக்களின் இறக்குமதி மீதான செஸ்வரியானது 1 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 07 ஏப்பிறல் 2009 | - மசகெண்ணெய் வகைகளின் சோயா அவரை எண்ணெய், நிலக்கடலை எண்ணெய், தாவர எண்ணெய், சூரியகாந்தி விதை எண்ணெய், பருத்தி விதை எண்ணெய் மற்றும் சோயா எண்ணெய் என்பனவற்றின் இறக்குமதி மீதான பொதுவான சுங்கத் தீர்வை வீதங்கள் 28 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 35 இலிருந்து 28 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 55இற்கு, இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - தேங்காய் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் மற்றும் மாஜரீன் என்பனவற்றின் இறக்குமதி மீதான பொதுவான சுங்கத் தீர்வை வீதங்கள் 28 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 40 இலிருந்து 28 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 60 இற்கு, இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - தயாரிக்கப்பட்ட மீன்பிடி வலைகளின் இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த 15 சதவீத சுங்கத் தீர்வையானது 15 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 250 இற்கு, இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்கு திருத்தப்பட்டது. |
| 07 யூன் 2009 | - பெற்றோல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைச் சலுகையானது லீற்றருக்கு ரூ.10 இலிருந்து ரூ.16 இற்கு அதிகரிக்கப்பட்டதனால் பிரயோகிக்கத்தக்க தீர்வையானது லீற்றருக்கு ரூபா 19 ஆகும். |
| | - டீசலின் இறக்குமதி மீது வழங்கப்பட்ட லீற்றருக்கு ரூ.7 ஆன சுங்கத் தீர்வைச் சலுகையின் பின்பு நடைமுறையிலிருந்த லீற்றருக்கு ரூ.15 என்ற சுங்கத் தீர்வையிலிருந்து பிரயோகிக்கத்தக்க வீதம் லீற்றருக்கு ரூ.8 ஆகியது. |
| 09 யூலை 2009 | - குடிபான தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மோல்ட் பிரித்தெடுப்பு உற்பத்திகள் மீதான செஸ் வரியானது 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 110 இலிருந்து 5 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 25இற்கு இவற்றில் உயர்வான வீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 24 யூலை 2009 | - பால் மா மீதான மொத்த மீளப் பெறத்தக்க வரியானது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 125 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூ. 145 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 01 ஒகத்து 2009 | - காலுறைகள் மற்றும் பாதணிகள் போன்ற சில வகை ஆடைகளின் இறக்குமதி மீதான செஸ் வரியானது 25 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 60 இலிருந்து 25 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 625இற்கு இவற்றுள் உயர்வான வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 30 செத்தெம்பர் 2009 | - நெத்தலிக் கருவாடு, பிற உருளைக்கிழங்குகள், பெரிய வெங்காயம், பட்டாணி, பச்சைப் பட்டாணி, பாசிப்பயறு, பருப்பு, செத்தல், மிளகாய்கள், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் சீனி என்பவற்றின் இறக்குமதி மீதான பண்டத் தீர்வையானது முன்னைய வீதங்களில் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 26 ஒத்தோபர் 2009 | - பெற்றோல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைச் சலுகையானது லீற்றருக்கு ரூ.16 இலிருந்து லீற்றருக்கு ரூ.19 இற்கு அதிகரிக்கப்பட்டதனால் பிரயோகிக்கத்தக்க தீர்வை வீதம் லீற்றருக்கு ரூ.16 ஆக இருந்தது. |
| | - டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைச் சலுகையானது லீற்றருக்கு ரூ.7 இலிருந்து லீற்றருக்கு ரூ.12 இற்கு அதிகரிக்கப்பட்டதனால் பிரயோகிக்கத்தக்க தீர்வை வீதம் லீற்றருக்கு ரூ. 3 ஆக இருந்தது. |
| 10 நவெம்பர் 2009 | - அரிசி இறக்குமதியின் போது பிரயோகிக்கத்தக்க அனைத்து வரிகள் மற்றும் தீர்வைகளுக்குப் பதிலாக, கிலோகிறாமொன்றுக்கு ரூ.5 கொண்ட மீளப் பெறத்தக்க வரி வீதம் ஒன்று விதிக்கப்பட்டது. |
| | - பால் மா மீதான மொத்த மீளப் பெறத்தக்க வரி வீதமானது கிலோகிறாமொன்றுக்கு ரூ.145 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூ.100 இற்கு குறைக்கப்பட்டது. |
| | - கீழ்வரும் உணவுப் பண்டங்களின் இறக்குமதி விசேட பண்டத் தீர்வையானது குறைக்கப்பட்டதுடன் இது மூன்று மாத காலப்பகுதிக்கு செல்லுபடியாகும். |

- பிற உருளைக் கிழங்குகள், பெரிய வெங்காயம் என்பன ரூ. 25 இலிருந்து ரூ. 10 இற்கு
- பட்டாணிக் கடலை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.30 இலிருந்து ரூ. 15 இற்கு
- சீனி கிலோகிறாமொன்றுக்கு ரூ. 16 இலிருந்து ரூ. 6 இற்கு
- முழுமையான மைசூர் பருப்பு கிலோகிறாமொன்றுக்கு ரூ.15 இலிருந்து ரூ.1 இற்கு
- உடைக்கப்பட்ட மைசூர் பருப்பு கிலோகிறாமொன்றுக்கு ரூ.20 இலிருந்து ரூ. 2இற்கு
- மிளகாய்கள் (நசுக்கவோ அல்லது அரைக்கவோபடாதவை) கிலோகிறாமொன்றுக்கு ரூ.40 இலிருந்து ரூ.20 இற்கு
- மிளாய்கள் (நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை) கிலோகிறாமொன்றுக்கு ரூ.50 இலிருந்து ரூ.25 இற்கு

- சின்ன வெங்காயத்தின் இறக்குமதி மீது சுங்கத்தில் பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வை மற்றும் ஏனைய அனைத்து வரிகளுக்குப் பதிலாக மூன்று மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் கிலோகிறாமொன்றுக்கு ரூ.10 ஆன விசேட பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.
- உள்ளியின் இறக்குமதி மீது சுங்கத்தில் பிரயோகிக்கத்தக்க சுங்க இறக்குமதித் தீர்வை மற்றும் ஏனைய அனைத்து வரிகளுக்குப் பதிலாக, மூன்று மாதங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் கிலோகிறாமொன்றுக்கு ரூ.30 ஆன விசேட பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

13 நவெம்பர் 2009 - சில வகை பிவிசி தோலாடைகளின் இறக்குமதி மீது மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் கிலோகிறாமொன்றுக்கு 13 சதவீதமான பகுதியளவு சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. இதன்படி பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வை கிலோகிறாமொன்றுக்கு 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

18 திசெம்பர் 2009 - கோதுமைத் தானியத்தின் இறக்குமதி மீது 2010 மாச்சு 31 வரை முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

21 திசெம்பர் 2009 - அரிசி இறக்குமதி மீது சுங்கத்தில் பிரயோகிக்கத்தக்க சுங்கத்தீர்வை மற்றும் ஏனைய அனைத்து வரிகளுக்குப் பதிலாக, மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும் விதத்தில் கிலோகிறாமொன்றுக்கு ரூ.1 ஆன விசேட பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

- மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும் விதத்தில் சீனி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூ.6 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூ.1 ஆகக் குறைக்கப்பட்டது.

25 திசெம்பர் 2009 - மோல்ட் பிரித்தெடுப்புகளின் இறக்குமதி மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் 3 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் வழங்கப்பட்டது.

29 திசெம்பர் 2009 - பெற்றோல் மீது வழங்கப்பட்ட மொத்த சுங்கத் தீர்வைத் தளர்த்தல் லீற்றொன்றுக்கு ரூ. 19 இலிருந்து ரூ. 34 இற்கு அதிகரிக்கப்பட்டதனால், பிரயோகிக்கத்தக்க தீர்வை வீதம் லீற்றரொன்றுக்கு ரூபா ஆகும்.

01 சனவரி 2009 - சில வகை பிவிசி தோலாடைகளின் இறக்குமதி மீதான மிகைக் கட்டணம் நீக்கப்பட்டது.

19 சனவரி 2010 - பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகளின் மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

25 சனவரி 2010 - சோள இறக்குமதி மீது 2.5 சதவீதமான சுங்கத் தீர்வைத் தளர்த்தலொன்று வழங்கப்பட்டது.

10 பெப்புருவரி 2010 - நெத்தலிக் கருவாடுகள், பிற உருளைக் கிழங்குகள், பெரிய வெங்காயம், பட்டாணி, பச்சைப் பட்டாணி, பாசிப்பயறு, பருப்பு, செத்தல் மிளகாய்கள், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முன்னைய வீதங்களில் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

14 பெப்புருவரி 2010 - சில வகை பிவிசி தோலாடைகளின் இறக்குமதி மீது வழங்கப்பட்டிருந்த கிலோகிறாமொன்றுக்கு 13 சதவீதமான பகுதியளவான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் நீடிக்கப்பட்டது.

16 பெப்புருவரி 2010 - பால் மா இறக்குமதி மீதான மொத்த மீளப் பெறத்தக்க வரி வீதமானது கிலோகிறாமொன்றுக்கு ரூ.100 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூ.50 இற்குக் குறைக்கப்பட்டது.

18 பெப்புருவரி 2010 - சோயா அவரை எண்ணெய், பாம் எண்ணெய், சூரியகாந்தி விதை அல்லது சூரியகாந்தி எண்ணெய், தேங்காய் எண்ணெய் மற்றும் அவற்றின் பகுதிகளின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 25 ஆன சுங்கத்தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

25 பெப்புருவரி 2010 - மோல்ட் பிரித்தெடுப்புகளின் இறக்குமதி மீது வழங்கப்பட்ட முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் நீடிக்கப்பட்டது.

01 மாச்சு 2010 - தங்கத்தின் இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க அனைத்து வரிகளும் தீர்வைகளும் நீக்கப்பட்டன.

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

07 சனவரி 2009 - புலம்பெயர்ந்த தொழிலாளர்/ வணிகம் செய்வோர் உள்ளிட்ட வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள், வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் வெளிநாட்டிலும் இலங்கையிலும் வதியும் இலங்கை தொழில்சார் நிபுணர்கள், அவர்களின் வதிவிட நாட்டைக் கருத்திற் கொள்ளாது இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட வகைகளின் சார்பில் நம்பகத்தன்மையான இயலளவுடன், செயற்படும் வங்கிகள் என்பன **“திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானி”** என்று பெயரிடப்பட்ட சிறப்பு ரூபாக் கணக்கினூடாக ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்கு, வைத்திருப்பதற்கு மற்றும் விற்பதற்கு, அத்தகைய முதலீடுகளின் கூட்டுத்தொகை குறிக்கப்பட்ட நேரத்தில் வெளிநின்ற திறைசேரி முறிகள்/ உண்டியல்களின் மொத்தப் பெறுமதியின் 10 சதவீதத்திற்கு விஞ்சாத பட்சத்தில், அனுமதியளிக்கப்பட்டனர்.

01 பெப்புருவரி 2009 - வதிவுள்ளோர்வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பவற்றுக்கு

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் செலுத்தப்படும் வட்டியின் மீது இலங்கை ரூபாவிலான 20 சதவீத மேலதிக வட்டியைச் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது.

24 பெப்புருவரி 2009 - குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் பட்டியலில் நியூசிலாந்து டொலர் உள்ளடக்கப்பட்டதுடன் டொயிச் மார்க் பிரெஞ்ச் பிராங் மற்றும் நெதர்லாந்து கில்டர் என்பன பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

04 மே 2009 - வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள், இரட்டைப் பிரசாவுரிமை விண்ணப்பதாரிகளுக்கான வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பித்திருக்கும்/ ஆரம்பிக்க விரும்பும் வெளிநாட்டுப் பிரசாவுரிமையை வைத்திருக்கும் முன்னாள் இலங்கையர்களின் திறைசேரி முறிகளிலான முதலீடுகள் மற்றும் இரட்டைப் பிரசாவுரிமை தகுதி நிலையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு அரச திறைசேரி முறிகளில் முதலிட்டுள்ள/ முதலிட விரும்புபவர்களின் கணக்குகள் என்பவற்றிலுள்ள நிதியங்களை ஒன்று சேர்ப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

25 மே 2009 - வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தங்களின் பெறுமதி மீது விதிக்கப்பட்ட அளவுத் தேவைப்பாடுகள் விலக்கப்பட்டன.

24 யூலை 2009 - சென்மதி நிலுவைக்கு ஆதரவளிப்பதற்காக பன்னாட்டு நாணய நிதியின் நிறைவேற்றுச் சபையானது இலங்கைக்கு 20 மாத துணைநில் ஒழுங்கு வசதிகளை அனுமதித்தது.

1 ஓகத்து 2009 - இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகத் தொழிற்படும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் வழங்கப்பட்டன.

01 ஒத்தோபர் 2009 - வதிவுள்ளோர் நாணயக் கணக்கு மற்றும் வதிவற்றோர் நாணயக் கணக்கு என்பவற்றின் வட்டி மீது செலுத்தப்பட்ட 20 சதவீத மேலதிகவட்டி இடை நிறுத்தப்பட்டது.

11 மாச்சு 2010 - பின்வரும் வகைகளைச் சேர்ந்த இலங்கையர்களை வெளிநாடுகளில் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதித்தல்.

- மத்திய வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்டதன்படி வெளிநாடுகளிலுள்ள முதலீடுகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பவர்கள்
- இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பன்னாட்டு தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் நபர்கள்
- வெளிநாட்டில் ஏதாவது பணியில் ஈடுபட்டிருக்கும் நபர்கள்
- கல்வி மற்றும்/ அல்லது மருத்துவ சிகிச்சைகளுக்காக இலங்கையை விட்டு வெளியில் சென்ற நபர்கள்
- பொருட்களின் ஏற்றுமதியாளர்கள்

பொருட்கள் மற்றும் பணிகளுடன் தொடர்புபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குவதற்கான

- வெளிநாட்டு நாணயத்திலான முன்னோக்கிய ஒப்பந்தங்கள், பணவனுப்பல்கள் மறறும் வழங்கல் மற்றும் பெறுகைகள் என்பன அனுமதிக்கப்பட்டன.
- இறக்குமதி செய்யப்படவிருக்கும் தெரிவு செய்யப்பட்ட விடயங்களின் விலை விபரப்பட்டியல் பெறுமதி மீதான முன்னோக்கிய கொடுப்பனவுகளுக்கு எதிரான தற்போதுள்ள 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடு நீக்கப்பட்டது.
- இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவுகள் மீதான இடைநிறுத்தும் நீக்கப்பட்டது.
- வர்த்தக வங்கிகளில் வதிவற்றோரால் பேணப்படும் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு, திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு, ரூபாக் கணக்கு, திறைசேரி உண்டியல் முதலீட்டு, வெளிநாட்டு ரூபாக் கணக்கு - 2 மற்றும் திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானி என்று பெயரிடப்பட்ட தற்போதுள்ள முதலீட்டுக் கணக்குகளை ஒன்றிணைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இவ்வொன்றிணைக்கப்பட்ட கணக்கானது பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு என மீள்பெயரிடப்பட்டது.

**அரச அரசிறை**

## இறைத்துறை

01 சனவரி 2009 - பெறுமதிசேர் வரி நியம வீதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

- பெறுமதிசேர் வரியின் பதிவு செய்யப்பட்ட கீழ் மட்டம் வரி விதிப்புக்குரிய காலமொன்றுக்கு ரூ. 500,000 அல்லது ஆண்டொன்றுக்கு ரூ.1.8 மில்லியனிலிருந்து வரி விதிப்புக்குரிய காலமொன்றுக்கு ரூ. 650,000க்கு அல்லது ஆண்டொன்றுக்கு ரூ. 2.5 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.
- விருப்பத் தேர்வு பெறுமதிசேர் வரிக்கான பதிவு செய்யப்பட்ட கீழ் மட்டம் ரூ. 2.5 மில்லியனிலிருந்து ரூ. 3 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சத்திர சிகிச்சைகளுக்குப் பயன்படும் சத்திர சிகிச்சை கையுறைகளுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- ஆடம்பர வீதமான 20 சதவீதத்தில் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியின் உள்ளீட்டு வரியைக் கோருவதற்கான தகைமை 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- சமூகப் பங்களிப்பினூடாக கமநகும, மகநகும, சமூர்த்தி என்பவற்றுடன் தொடர்புபட்ட கட்டட வேலைகள் மற்றும் சமூக நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பன பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

- செல்லிட மற்றும் கம்பியில்லா தொலைபேசிகளுக்கு நடைமுறையிலிருந்த 10 சதவீத தொலைபேசி வரி நிலையான இணைப்புள்ள தொலைபேசிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- பயங்கரவாத நடவடிக்கைகளால் அழிக்கப்பட்ட பேருந்துக்களைப் பதிலீடு செய்வதற்காக 09 யூலை 2008 அன்று அல்லது அதற்குப் பின்னர் இறக்குமதி செய்யப்படும் பேருந்துக்களுக்கு பெறுமதி சேர் வரி விலக்களிக்கப்பட்டது.
- தேசிய கைப்பணிச் சபையால் இறக்குமதி செய்யப்படும் பித்தளைத்தகடு, பித்தளை வார்ப்புக் கட்டி, நூல், வண்ணச் சாயங்கள், பரபின் மெழுகு மற்றும் அவலரக்கு (செலாக்) எனபவற்றுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- தெரிவு செய்யப்பட்ட சிலவகை சூரிய ஒளியைப் பயன்படுத்தும் சாதனங்கள் மற்றும் சூரிய சக்தி வலுவை உருவாக்குவதற்கான சாதனங்கள் என்பவற்றின் இறக்குமதிகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- மின் பிறப்பாக்கத்திற்காக இலங்கை மின்சபைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் இரசாயனம் நப்தாவின் இறக்குமதி பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- பொருட்களின் இறக்குமதிகளுடன் தொடர்புபட்ட சுங்கப்படுத்தல் மீதான உள்ளீட்டு வரி வரவுகளுக்கான பெறுமதிசேர் வரிக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலப்பகுதி 2 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.
- திரவப் பெற்றோலிய வாயு மீது 5 சதவீதமாக அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 8, இவற்றுள் உயர்வான வீதம் கொண்ட கலால் தீர்வையொன்று விதிக்கப்பட்டது.

01 பெப்புருவரி 2009 - சில விலக்குகளுக்குட்பட்டு இறக்குமதிகள், உற்பத்தி அல்லது பணிகள் என்பவற்றின் வரி செலுத்துத்தத்தக்க புரள்வின் மீது 1 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விதிக்கப்பட்டது.

28 பெப்புருவரி 2009 - திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வையானது 5 சதவீதம் அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 8 இலிருந்து 5 சதவீதத்திற்கு அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ. 27.50 இற்கு இவற்றுள் எது உயர்வானதோ அவ் வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

27 மாச்சு 2009 - சிகரெட்டுக்கள் மற்றும் குடிவகை மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

01 ஏப்பிறல் 2009 - திருத்தப்படும் தனியார் வருமான வரியின் வீதங்கள் கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| (1) ரூ. 300,000வரை | - | இல்லை |
| (2) அடுத்த ரூ. 400,000 | - | 5 சதவீதம் |
| (3) அடுத்த ரூ. 400,000 | - | 10 சதவீதம் |
| (4) அடுத்த ரூ. 400,000 | - | 15 சதவீதம் |
| (5) அடுத்த ரூ. 500,000 | - | 20 சதவீதம் |
| (6) அடுத்த ரூ. 500,000 | - | 25 சதவீதம் |
| (7) அடுத்த ரூ. 500,000 | - | 30 சதவீதம் |
| (8) மீதி | - | 35 சதவீதம் |

- அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களுக்கு லேடி லாகூர் கடன் நிதியத்தால் வழங்கப்பட்ட கடன்களின் மீதான வட்டி வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- புத்தக விற்பனை மூலம் எழுத்தாளருக்குக் கிடைக்கும் இலாபத்திற்கும் நாடகமொன்றை மேடையேற்றுவதன் மூலம் தயாரிப்பாளருக்குக் கிடைக்கும் இலாபத்திற்கும் புத்தகம் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அல்லது நாடகம் மேடையேற்றப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு வருமான வரியிலிருந்து 50 சதவீதம் விலக்களிக்கப்பட்டது.
- பாடலொன்றின் ஒலிப்பரப்பின்போது அல்லது ஒளிபரப்பின்போது பாடகருக்குக் கிடைக்கும் வேத்துரிமைப் பங்கிற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- திரையரங்கை தரமுயர்த்துவதற்கு 5 வருடங்களுக்கு வழங்கப்பட்ட வருமானவரி ஊக்குவிப்பு 7 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது.
- இலங்கை அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட இலங்கையிலுள்ள எந்தவொரு வதிவற்ற நபர் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட எந்தவொரு பன்னாட்டு முறிகளின் விற்பனை மூலம் (2008 ஒத்தோபர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்) கிடைக்கும் வட்டி அல்லது எந்தவொரு வியாபார இலாபங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிட்ட எந்தவொரு நபருக்கும் ஒன்று சேரும் வட்டி மீது பொருந்தத்தக்க வருமான வரி விலக்களிப்பானது முடிவுறுத்தப்பட்டது. இந்த விலக்களிப்பானது இத்தகைய வியாபாரங்களின் வட்டி வருமானத்திற்குப் பதிலாக மொத்த இலாபம் மற்றும் வருமானத்தை உள்ளடக்கும் விதத்தில் மாற்றப்பட்டது.
- இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் எந்தவொரு உரிமம் பெற்ற வங்கி அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் திறக்கப்பட்ட எந்தவொரு கணக்கிலுமுள்ள வெளிநாட்டு நாணயத்தைப் பயன்படுத்தி 2009 பெப்புருவரி 1 அல்லது அதற்குப் பின்னர் பொருளாதார மீள் எழுச்சி சான்றிதழில் முதலிடும் எந்தவொரு நபருக்கு அல்லது பங்குடைமைக்கு 2009 பெப்புருவரி 1 அல்லது அதற்குப் பின்னர் கிடைக்கும் அல்லது ஒன்றுசேரும் இலாபங்கள் மற்றும் வருமானம், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

இலங்கையிலுள்ள ஏதாவது வதிவுள்ள கம்பனி, வதிவுள்ள தனிநபர் அல்லது பங்குடைமை இலங்கைக்கு வெளியே

- உள்ள தனி நபருக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்கும் சேவையின் மூலம் 2009 ஏப்பிறல் 1 தொடக்கம் 2011 மார்ச்சு 31 வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானமானது அத்தகைய இலாபங்கள் இலங்கையிலுள்ள வங்கியொன்றின் மூலம் அனுப்பப்படும்போது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- இலங்கையை அடிப்படையாகக் கொண்ட பங்குடைமை அல்லது நிறுவனமொன்றில் வேலை செய்யும் தொழில்சார் நிபுணர் ஒருவரின் கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படும் போது அத் தொழிலிருந்தான இலாபத்தின் மீது பிரயோகிக்கத்தக்க வருமான வரி வீதமானது 20 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- எந்தவொரு தனிநபரால் அல்லது அவரின் சார்பில் எந்தவொரு வங்கியில் அல்லது நிதியியல் நிறுவனத்தில் வைப்பிலிடப்படும் பணத்திலிருந்தான வட்டி மீதான பிடித்து வைத்தல் வரி தொடர்பான ஏற்பாடுகள் கீழ் வருமாறு திருத்தப்பட்டன.
  - (அ) மதிப்பீட்டு ஆண்டுக்கான மதிப்பிடக்கூடிய வருமானமானது ரூ. 300,000ஐ விஞ்சாதபோது அத்தகைய வட்டிக்கு வரி எதுவும் அறவிடப்படமாட்டாது.
  - (ஆ) மதிப்பீட்டு ஆண்டுக்கான மதிப்பிடக்கூடிய வருமானமானது ரூ. 300,000ஐ விஞ்சும் போது ஆனால் ரூ. 1,000,000ஐ விஞ்சாதபோது அத்தகைய வட்டியிலிருந்து 2.5 சதவீதத்தில் வரி அறவிடப்படும்.
  - (இ) மதிப்பிடப்படும் ஆண்டுக்கான மதிப்பிடக்கூடிய வருமானமானது ரூ. 1,000,000ஐ விஞ்சும் போது அத்தகைய வட்டியிலிருந்து 10 சதவீதத்தில் வரி கழிக்கப்படும்.
- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் வருமானவரி செலுத்த வேண்டியிருந்த கம்பனிகளின் மீது சமூகப் பொறுப்பாண்மை வரி பிரயோகிக்கப்பட்டது.
- வருமான வரியைப் பிடித்து வைத்திருக்கும் நேரத்தில் கட்டடக் கைத்தொழிலில் ஈடுபட்ட நபர்களிடமிருந்து கட்டடக் கைத்தொழில் உத்தரவாத நிதி தீர்வையைச் சேகரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- எந்தவொரு நபரிடமிருந்து அல்லது பங்குடைமையிலிருந்து அறவிடப்படக்கூடிய பொருளாதாரப் பணிக்கட்டணத்தின் மேல் எல்லையானது 2009 ஏப்பிறல் 01 இற்குப் பின்னர் ஆரம்பிக்கும் எந்தவொரு தொடர்பான காலாண்டிற்கும் ரூ. 15 மில்லியனிலிருந்து ரூ. 30 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.
- ஒரு பொதியில் 1 கிலோகிறாமைவிட மேற்படாத நிறையைக் கொண்டிருக்கும் தேயிலைப் பொதிகளின் ஏற்றுமதியின் மீதான இலாபத்தின் மீதான வருமான வரி சலுகை வீதமான 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

01 மே 2009
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வை 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 27.50 இலிருந்து 5 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்குரூ. 26.50இற்கு இவற்றில் உயர்வான வீதத்திற்கு குறைக்கப்பட்டது.
- தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 1 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

19 யூன் 2009
- வருமான வரியை அறவிடுவதற்காக எந்தவொரு மூலத்திலிருந்தும் பெறப்படும் எந்தவொரு தனி நபரினது அல்லது பங்குடைமையினது இலாபங்கள் அல்லது வருமானத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் செலுத்தப்படக்கூடிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பில் அனுமதிக்கப்படும் கழிவுகளை மூன்றில் ஒரு பங்கிற்கு மட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

30 யூன் 2009
- வரி அரசிறை மற்றும் வரி நிர்வாகத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆய்வு செய்வதற்கும் விதந்துரைப்புக்களை செய்வதற்குமென சனாதிபதி வரி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

01 யூலை 2009
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல்லிருந்தான அரிசி உற்பத்தி மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 3 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வையானது 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ. 26.50 இலிருந்து 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ.31.50 இவற்றில் உயர்வான வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

01 ஓகத்து 2009
- இலங்கையில் மருந்தாக்கல் பொருட்களை தயாரிப்பதற்கு பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் எந்தவொரு பொருளினதும் அத்துடன் இலங்கையில் தயாரிக்கப்பட்ட மருந்தாக்கல் பொருட்களை பொதியிடுவதற்காக பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் பொதியிடல் பொருட்களையும் அத்தகைய மருந்தாக்கல் பொருட்களை இலங்கையில் தயாரிக்கின்றவர்களால் இறக்குமதி செய்யப்படுகின்ற அத்தகைய இறக்குமதிகள் இலங்கையில் தயாரிக்கப்படாத பொருட்களாக இருக்குமிடத்து அத்தகைய இறக்குமதிகள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- குத்தகை அல்லது உடனடி அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வானூர்திகள் மற்றும் கப்பல்களுக்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

01 சனவரி 2010
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வை 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 31.50 இலிருந்து 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ.8.70 இவற்றுள் எது அதிகமோ அவ் வீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

01 மாச்சு 2010
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வையானது முழுமையாக நீக்கப்பட்டது.

**அரச செலவினம்**

01 சனவரி 2009
- அரசதுறை ஊழியர்கள் மற்றும் அரசதுறை ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைப்படிச் செலவு முறையே மாதமொன்றுக்கு ரூ.4,500 இற்கும் ரூ. 2,000 இற்கும் அதிகரிக்கப்பட்டது.
- நாளாந்தம் ஊதியம் செலுத்தப்படும் அரச ஊழியர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி

| | | |
|---|---|---|
| | | வேலை நாளொன்றுக்கு ரூ.116.66 இலிருந்து ரூ.150 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 27 ஒத்தோபர் 2009 | - | அரசதுறை ஊழியர்களுக்கான வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் கடன்களுக்கு விண்ணப்பித்த அனைத்து அரசதுறை ஊழியர்களுக்கும் வீடமைப்புக் கடன்களை வழங்குமாறு அனைத்து அரசதுறை வங்கிகளும் பணிக்கப்பட்டன. |
| சனவரி 2010 | - | நவெம்பர் 2009 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அரசதுறை ஊழியர்களுக்கான வாழ்க்கைப்படிச் செலவு மாதமொன்றுக்கு ரூ.4,500 இலிருந்து ரூ.5,250 இற்கு (ரூ.750 இனால்) அதிகரிக்கப்பட்டது.<br>நவெம்பர் 2009 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அரசதுறை ஓய்வூதியர்களுக்கான வாழ்கைச் செலவு மாதமொன்றுக்கு ரூ.2,000 இலிருந்து ரூ.2,375 இற்கு (ரூ.375 இனால்) அதிகரிக்கப்பட்டது.<br>நவெம்பர் 2009 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நாளாந்தம் ஊதியம் செலுத்தப்படும் அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுப்படி ரூ.150 இலிருந்து ரூ.175 இற்கு அதிகரிக்கப்பட்டது. |

**படுகடன் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 01 சனவரி 2009 | - | முதனிலை வணிகர்கள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய முதன்மை மீள்கொள்வனவு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 06 சனவரி 2009 | - | வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் மற்றும் புலம் பெயர்ந்த வேலையாட்களுக்காக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிச்சந்தை திறந்து வைக்கப்பட்டது. |
| 21 ஏப்பிறல் 2009 | - | திறைசேரி உண்டியல்களுக்கு பொருந்தக்கூடிய நியதி வரம்பு ரூ. 500 பில்லியனிலிருந்து ரூ. 650 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கான பாராளுமன்ற ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 03 யூலை 2009 | - | 2009 இற்கான இலங்கை அபிவிருத்தி முறிக்கான எல்லையை ஐ.அ.டொலர் 500 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 750 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கான பாராளுமன்ற ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 17 நவெம்பர் 2009 | - | 2009 இற்கான அரசின் கடன்பாடுகளின் உச்ச எல்லையானது ரூ.840 பில்லியனிலிருந்து ரூ.1,050 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 02 திசெம்பர் 2009 | - | முதனிலை வணிகர்களை கட்டண அடிப்படையிலான நடவடிக்கைகளில் ஈடுபடவும் இலங்கை ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வங்கி மற்றும் நிதியியல் தன்மையைக் கொண்ட அவற்றின் சொந்தக் குழுமக் கம்பனிகளின் சாதாரண பங்கு மூலதனம்/ தொகுதிக் கடன்களில் முதலிடவும் அனுமதிப்பதன் மூலம் பிரத்தியேகமான முதனிலை வணிகர் முறைமை பன்முகப்படுத்தப்பட்டது. |

## நிதியியல்துறை

| | | |
|---|---|---|
| 02 சனவரி 2009 | - | கணக்கொன்றை வைத்திருப்பவர் அடையாளம் காணப்படாதவிடத்து எந்தவொரு நிறுவனமும் கணக்கை திறக்கவோ, தொழிற்படுத்தவோ அல்லது பேணவோ முடியாதென்பதை தேவைப்படுத்தும் சுற்றறிக்கையொன்று அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது. |
| 12 சனவரி 2009 | - | மத்திய வங்கியினூடான நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் மீது அறவிடப்பட்ட வட்டியின் மீதான தண்டவீதம் ஆண்டொன்றுக்கு 19 சதவீதத்திலிருந்து 200 அடிப்படைப் புள்ளிகளால் ஆண்டொன்றுக்கு 17 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 30 சனவரி 2010 | - | உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் பின்னடைவையும் சுற்றுலாத்துறை மீதான அவற்றின் தாக்கத்தையும் கருத்திற் கொண்டு, சுற்றுலாத் துறையிலிருக்கும் நிறுவனங்களின் வெளிநின்ற கடன்களைப் பொறுத்தவரை 2009 சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியைக் கொண்ட 6 மாத பிற்போடல் உள்ளிட்ட சில சலுகைகளை அத்தகை சலுகைகளை தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் நிறுவனங்களுக்கு வழங்குமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டது. |
| 01 பெப்புருவரி 2009 | - | லங்கா செட்டில் முறைமையின் அதேநேர மொத்த தீர்ப்பனவு மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவின் அனைத்தையுமுள்ளடக்கிய கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கான கட்டணம் ரூ. 240 இலிருந்து ரூ.400 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 11 பெப்புருவரி 2009 | - | மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 10.25 சதவீதத்திற்கும் 11.75 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| | - | நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் மீது அறவிடப்பட்ட வட்டியின் தண்டவீதம் 50 அடிப்படைப் புள்ளிகளால் ஆண்டொன்றுக்கு 16.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 12 பெப்புருவரி 2009 | - | தமிழ் அமைப்பானது ஐக்கிய அமெரிக்காவின் தீவிரவாத அமைப்புக்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டது. இதன்படி, வங்கிகள் ஊடாக அனுப்பப்படும் தமிழ் அமைப்பின் பணவனுப்பல்களைக் கண்காணிக்கும்படியும் தகவல்களை அறிக்கையிடும்படியும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டன. |
| 27 பெப்புருவரி 2009 | - | மத்திய வங்கி சட்டப்படியான ஒதுக்குத் தேவையை 75 அடிப்படைப் புள்ளிகளால் 7.75 சதவீதத்திலிருந்து 7.00 சதவீதத்திற்குக் குறைத்தது. |
| 03 மார்ச்சு 2009 | - | பொருளாதார நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் பொருட்டும் பொருளாதாரத்தின் வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்தும் பொருட்டும் வாடிக்கையாளர்களின் கடன் இடர்நேர்வு மதிப்பீட்டின் அடிப்படையில் தனியார்துறைக்கான கடனை விரிவாக்குவதற்கான பொருத்தமான அளவீடுகளை எடுக்குமாறு வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. |
| 04 மாச்சு 2009 | - | துணை நில் வசதியின் கீழ் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு தண்ட வீதத்தின் மீதான ஒப்பீட்டு ரீதியில் வருடாந்த கூட்டு |

| | | |
|---|---|---|
| | | வட்டி வீதத்திலான கால நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி ஒரு மாத முதிர்ச்சிக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருந்தது. |
| 06 மாச்சு 2009 | - | மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை வழங்கும் நாட்களில் பங்குபற்றும் நிறுவனமொன்றுக்கான மீள்கொள்வனவு வசதி ரூ.100 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. |
| | - | பணம் தூயதாக்கலுக்கு எதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழுங்குபடுத்தும் விதத்தில் காப்புறுதிக் கம்பனி இணங்கி ஒழுகுவது பற்றி இலங்கைக் காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 18 மாச்சு 2009 | - | நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் மீது வட்டியின் தண்ட வீதம் 175 அடிப்படை புள்ளிகளால் ஆண்டொன்றிற்கு 14.75 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - | அத்தியாவசியமயான குறிப்பிட்ட பொருட்களின் இறக்குமதிக்காக கடன் பத்திரங்களைத் திறக்கும் போதும் அதே பொருட்களின் இறக்குமதியின் போதும் பெறுகை நியதிகளுக்கெதிராக ஆவணங்கள் மீதான வைப்புமட்டத் தேவைப்பாடு நீக்கப்பட்டது. |
| | - | உந்து ஊர்திகளின் இறக்குமதி மீது கடன்பத்திரத்தைத் திறப்பதற்கெதிரான வைப்பு மட்ட தேவைப்பாடு 200 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 19 மாச்சு 2009 | - | கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டன. |
| 31 மாச்சு 2009 | - | 2009 மாச்சு 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில், ஏற்கனவேயிருக்கும் திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரையை பதிலீடு செய்வதற்காக வெளிநின்ற தவணை வைப்புக்களுக்கு 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும் சேமிப்பு வைப்புக்களுக்கு 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் குறைந்தபட்ச திரவச்சொத்து தேவைப்பாட்டு மட்டத்தைக் குறைக்கக் கோரும் பணிப்புரை ஒன்று பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. |
| | - | பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வட்டி வீதங்கள் மீது ஏற்கனவே வழங்கப்பட்ட பணிப்புரையானது வைப்புக்கள் மற்றும் கழிவிடப்பட்ட வீத முறிகள் அல்லது ஏனைய கருவிகள் மீது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் செலுத்தப்படும் வட்டி வீதத்தின் உயர்ந்தபட்ச எல்லையை அதிகரிப்பதற்காக 2009 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பதிலீடு செய்யப்பட்டது. |
| 07 ஏப்பிறல் 2009 | - | சில வங்கியியல் நிறுவனங்களால் சடுதியாக கொடுகடன் வசதிகள் மீள எடுக்கப்படுவதனால் நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகை வழங்கும் கம்பனிகளால் எதிர்நோக்கப்படும் திரவத்தன்மை பிரச்சனைகளைக் கருத்திற் கொண்டு, அனைத்து வங்கிகளும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதி செய்யும் நோக்கோடு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளுடன் வழமையான வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டன. |
| 08 ஏப்பிறல் 2009 | - | மோட்டார் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீது நாணயக் கடிதம் திறப்பதற்கெதிராக விதிக்கப்பட்டிருந்த 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடு மீளப் பெறப்பட்டது. |
| 22 ஏப்பிறல் 2009 | - | இலங்கை மத்திய வங்கியினுடனான நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதம் 175 அடிப்படைப் புள்ளிகளினால் ஆண்டொன்றிற்கு 14.75 சதவீதத்திலிருந்து 13.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - | மத்திய வங்கியினுடைய மீள் கொள்வனவு வீதம் 125 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு 9 சதவீதமாக்கப்பட்டது. |
| | - | பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகளின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துமுகமாக உடனடியாக தொழிற்பாட்டிற்கு வரும் வகையில் ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் பொருந்தக் கூடிய நிதிக் கம்பனிகள் பணிப்புரைகள் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) விடுக்கப்பட்டன. |
| | - | நிதிக் குத்தகை (தூண்டல் பொதி நிபந்தனைகள்) விடுக்கப்பட்டதுடன் வசதிகளை பெற உத்தேசித்துள்ள சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் குறிப்பிட்ட சில தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 24 ஏப்பிறல் 2009 | - | சில விலக்குகளுக்குட்பட்டு 15 சதவீதத்திற்கும் அதிகமான பொருள் சார்ந்த ஈடுபாட்டைக் குறைப்பதற்கான அதிகபட்ச நேர காலத்தைத் தீர்மானிப்பதற்கு நாணயச் சபையை ஒவ்வொரு விடயமாக அனுமதிக்கும் ஏற்கனவேயிருக்கும் பணிப்புரைகளை பதிலீடு செய்யும் வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. |
| 05 மே 2009 | - | தனியார் துறைக்கான கடன்களை ஊக்குவிக்கும் வகையில் வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வட்டி வீதங்களை குறைப்பதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வங்கிகள் வேண்டப்பட்டன. |
| 21 மே 2009 | - | மத்திய வங்கியினுடைய நேர்மாற்று மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மீதான வட்டியின் தண்டவீதம் நீக்கப்பட்டது. |
| | - | துணைநில் வசதியின் கீழான ஓரிரவு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு மீதான அனைத்துக் |

| | |
|---|---|
| | கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. |
| | - நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 11.50 சதவீதமாக்கப்பட்டது. |
| 22 மே 2009 | - வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட், இலத்திரனியல் பதிவுகள் தொடர்பான உறுதிப்பாடு, நம்பகத்தன்மை என்பன தொடர்பான பொது மக்களின் நம்பிக்கையினை மேம்படுத்தும் பொருட்டு லங்காசைன் என்ற வியாபாரக் குறியீட்டுப் பெயரின் கீழ் இலங்கையின் முதலாவது சான்றிதழ் அதிகார சபை உருவாக்கப்பட்டது. |
| 26 மே 2009 | - வங்கியின் நடவடிக்கைகளை வெளியாருக்குக் கொடுப்பதன் மீதான வழிகாட்டல்களின் வரைவு வங்கிகளுக்கு கருத்துக்களுக்காகவும் ஆலோசனைகளுக்காகவும் வழங்கப்பட்டது. |
| 16 யூன் 2009 | - மத்திய வங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு என்பன மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு முறையே 8.5 சதவீதமாகவும் 11 சதவீதமாகவும் விளங்கின. |
| 23 யூன் 2009 | - நிதியியல் உளவறிதல் பிரிவால் அறிமுகப்படுத்தப்பட்ட இணைய அடிப்படையிலான தகவல் அறிக்கையிடல் தொகுதிக்கு கிரமமான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான நியமங்களும் நிபந்தனைகளும் தொடர்பான சுற்றறிக்கை சகல வர்த்தக வங்கிகளுக்கும் வழங்கப்பட்டது. |
| 31 யூலை 2009 | - நாட்டின் அட்டை அடிப்படையிலான கொடுப்பனவு முறைமையின் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு என்பன சர்வதேச தரத்திற்கும் சிறந்த நடைமுறைகளுக்கும் அமைய இருப்பதனை, 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைசேவை வழங்குனர்கள் ஒழுங்குபடுத்தல்கள் உறுதிப்படுத்த மேதகு சனாதிபதி அவர்களினால் 2009 யூலை 30 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதிகாரம் வழங்கப்பட்டது. |
| 01 செத்தெம்பர் 2009 | - மீளாய்வு செய்யப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் நியமங்கள் பங்குபற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.<br>- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது வங்கித்தொழில் சட்ட பணிப்புரை ஒன்று வழங்கப்பட்டது. |
| 02 செத்தெம்பர் 2009 | - நீண்ட காலமாக வங்கியினுடன் எந்தவிதமான கொடுக்கல்வாங்கல்களையும் கொண்டிராத கைவிடப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அச் சொத்துக்கள் தொடர்பிலான வங்கியியல் சட்டத்தின் சரத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.<br>- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணங்கள் மீதான வங்கியியல் சட்ட நிர்ணயங்கள் வழங்கப்பட்டன. உள்நாட்டு வியாபாரம் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் இரண்டையும் கொண்டு நடத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான 2010இன் வருடாந்த உரிமக் கட்டணம் ரூ.1,000,000 இற்கும் கரைகடந்த வங்கித்தொழிலை மட்டும் கொண்டு நடத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம் ரூ.600,000 இற்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம் ரூ.300,000 இற்கும் அதிகரிக்கப்பட்டது.<br>- எவரேனுமொரு பணிப்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் அல்லது பணிப்பாளரின் குறிப்பிடத்தக்களவு நலன்களைக் கொண்ட நிறுவனத்துக்கான கடன் வசதிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களாக குத்தகை உத்தரவாத நம்பிக்கை சான்றிதழ்/ குத்தகை வருமதிகளை அனுமதிக்கும் வங்கித்தொழில் சட்ட நிர்ணயம் ஒன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் வழங்கப்பட்டன. |
| 11 செத்தெம்பர் 2009 | - மத்திய வங்கியினுடைய மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு முறையே 8 சதவீதமாகவும் 10.50 சதவீதமாகவும் ஆக்கப்பட்டது. |
| 30 செத்தெம்பர் 2009 | - பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வட்டி வீதங்கள் மீது ஏற்கனவே வழங்கப்பட்ட பணிப்புரையானது வைப்புக்கள் மற்றும் கழிவிடப்பட்ட வீத முறிகள் அல்லது ஏனைய கருவிகள் மீது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் செலுத்தப்படும் வட்டி வீதத்தின் உயர்ந்தபட்ச எல்லையை அதிகரிப்பதற்காக 2009 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பதிலீடு செய்யப்பட்டது. |
| 06 ஒத்தோபர் 2009 | - ஓரிரவு அடிப்படை மற்றும் கால அடிப்படையிலான இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் வழங்கல் மீள ஆரம்பிக்கப்படடது. |
| 15 ஒத்தோபர் 2009 | - கொடுகடன் இடர்நேர்வைக் குறைக்கும் நோக்கோடு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளுக்கு பணிப்புரை ஒன்று வழங்கப்பட்டது.<br>- பணிப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பணிப்புரையொன்று சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 16 ஒத்தோபர் 2009 | - தனியார் துறைக்கான கொடுகடன்களை விரிவாக்குமாறும், வட்டி வீதங்களைக் குறைக்குமாறும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்குமாறும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 23 ஒத்தோபர் 2009 | - திறைசேரி உண்டியல்/ முறி, முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள், வதிவற்றோரால் பேணப்படும் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு மற்றும் வதிவற்றோரால் இலங்கையிலுள்ள கரைகடந்த பிரிவுகளில் பேணப்படும் கணக்குகள் என்பவற்றுக்கிடையே நிதிகளை மாற்றுவதற்கான அனுமதியளிக்கும் வங்கித்தொழில் சட்ட கட்டளை வழங்கப்பட்டது. |
| 30 ஒத்தோபர் 2009 | - அதிகப்படியான திரவத்தன்மையை ஈர்க்கும் கருவியான வெளிநாட்டு நாணய சுவப் (பணப் பரிமாற்ற முறை) |

அறிமுகப்படுத்தப்பட்டது.

06 நவெம்பர் 2009 - திரவத்தன்மை தேவைப்பாடுகளின் போது, இலங்கை மத்திய வங்கி பிணையங்களை வைத்திருக்கும் பங்குபற்றுநர்கள் அவற்றை மீளவும் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பதற்குரிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

17 நவெம்பர் 2009 - மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் முறையே 50 அடிப்படைப்புள்ளிகள் மற்றும் 75 அடிப்படைப்புள்ளிகளால் முறையே 7.5 சதவீதத்திற்கும் 9.75 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

30 நவெம்பர் 2009 - மத்திய வங்கி, கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்களைக் குறைக்குமாறும், வட்டி வீதங்களை 24 சதவீதத்திலிருந்து 36 சதவீதத்திற்குள் பேணுமாறும் வங்கிகளைக் கேட்டுக்கொண்டது.

21 திசெம்பர் 2009 - உரிமம் பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கான கால எல்லையானது, அத்தகைய தேவைப்பாட்டை அடைவதற்குரிய நிலையில்லாத வங்கிகளுக்கு ஆறு மாதங்களால் நீடிக்கப்பட்டது.

30 திசெம்பர் 2009 - பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களால் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும் காலாந்தர வருவாய்கள் மீது பணிப்புரை வழங்கப்பட்டது.

- குத்தகை வழங்கும் தொழில்துறையின் முழுவதுமான உறுதித் தன்மையைப் பேணும் பொருட்டு குத்தகை வழங்கும் கம்பனிகளின் ஆரோக்கியமானதும் வலிமையானதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை ஊக்குவிப்பதற்கு பணிப்பாளர் சபையினை கூடிய பொறுப்புள்ளதாகவும் வகை கூறும் தன்மையாகவும் ஆக்கும் நோக்கோடு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளுக்கு கம்பனி ஆளுகை மீதான பணிப்பு வழங்கப்பட்டது.

- கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமானத்தை இனங்காணல் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான ஏற்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்ட பணிப்பின் திருத்தம் விடுக்கப்பட்டது.

01 சனவரி 2010 - புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், வேளாண்மை விலங்கு வளர்ப்பு அபிவிருத்திக் கடன் திட்டம் மற்றும் கிரூ நவோதயா சிறப்புக் கடன் திட்டம் எனப் பெயரிடப்பட்ட மூன்று வேளாண்மை கொடுகடன் திட்டங்களுக்கான வழங்கல் வீதங்கள் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட அதேவேளை, இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்படும் வடக்கின் எழுச்சி சிறப்புக் கடன் திட்டம் மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டத்திற்கான வட்டி வீதங்கள் 12 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டன.

18 மார்சு 2010 - 2010 சனவரி 1இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உரிமம் பெற்ற வங்கிகளில் மூத்த பிரசைகளால் (60 வயதிற்கு மேல்) பேணப்படும் ரூபா சேமிப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கு மிகையூதிய வட்டியைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. மிகையூதிய வட்டியானது ஒரு வருடத்திற்கு ஒரு நபருக்கு ரூ.120,000 இற்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு, 2010 சனவரி 1இற்குப் பின்னர் ஒன்று சேரும் வட்டியின் 20 சதவீதமாக இருக்கலாம்.

**அடுத்து வருபவை**

- நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கும் ஒழுங்குபடுத்தலுக்குமென சுதந்திரமான அமைப்பொன்றினை ஏற்படுத்துதல்
- குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்நோக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளுக்கான நிதியியல் உட்பாய்ச்சலை மேம்படுத்தும் நோக்கில் சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் வடிவில் வங்கிக் கடன் வசதிகளை நடைமுறைப்படுத்தல்.
- நாணயக் கொள்கைக் கருவியொன்றாக அரச பிணையங்கள் கடன் பெறுதல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- வங்கிகளின் ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
- வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மூலதன திட்டமிடல் செயற்பாட்டை மேலும் வலுவாக்கும் பொருட்டு பாசல் II தூண் 2 மீதான வழிகாட்டல்களை வழங்குதல்
- வெளிப்படுத்தல்களை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 44 மற்றும் 45 இற்கு இணங்கியொழுகுவதை வசதிப்படுத்தல்
- வங்கித்தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களை இறுதிப்படுத்துதல்
- திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்துடனான கட்டாய வைப்பு காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
- ஒன்றிணைந்த மேற்பார்வைக்கான கட்டமைப்பொன்றினை உருவாக்குதல்
- எக்ஸிம் வங்கியை நிறுவுதல்